
Koviloor Digital Library

தொண்டர்கள் நாயகம்

ஸ்ரீ சண்டேசுவரர்

Acc. No: 27270
32/2



-பூசை.ச.அருணவசந்தன்-

Koviloor Digital Library



அருள்மிகு சதுர்முக சண்டீஸ்வரர், ஐராவதேஸ்வரர் கோயில், தாராசுரம்.

Koviloor Digital Library


32-2

உ

திருச்சிற்றம்பலம்!

தொண்டர்கள் நாயகம்

ஸ்ரீ சண்டேசுவரர்



ஆசிரியர் சிவமஞ்சரிச் செம்மல், அருட்பணி அரசு, சிவசேவாரத்னம்

பூசை.ச.அருணவசந்தன்

ஸ்வஸ்திஸ்ரீ ஹேவிளம்பி ஆண்டு மார்கழித் திருவாதிரை நன்நாளான
(02-01-2018) செவ்வாய்க்கிழமையன்று
திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதின குருமகா சந்நிதானம்
சீர்-வளர்-சீர் அம்பலவாண தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்
அருளாசியுடன் வெளியிடப்பட்டது,


சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமன்னமுதலி கார்டன் தெரு

ஆழ்வார்பேட்டை, சென்னை-18, அலைபேசி எண் 9941124964

KOVILOOR ... A. No. 22210

Koviloor Digital Library



நூலின் விவரம்

நூலின் பெயர் : தொண்டர்கள் நாயகம் சண்டேசுவரர்

நூலின் ஆசிரியர் : பூசை.ச.அருணவசந்தன்

பதிப்புஆண்டு : முதற்பதிப்பு-02-01-2018-மார்கழித் திருவாதிரை

உரிமை : ஆசிரியருக்கு

பதிப்பாளர்/ஆசிரியர் : பூசை.ச.அருணவசந்தன்,
ப.எண்.29,பீமண்ண முதலி கார்டன் தெரு ,ஆழ்வார்பேட்டை,
சென்னை 600 018 , அலைபேசி 99411 24964

பக்கங்கள் : 88+12+4 ஆக 104 பக்கங்கள்

நூல் அளவு : கிரௌன் 1.4 -(24 c.m. x 18.2 c.m.)

அச்சிட்டுள்ள பரப்பளவு : 21.5 செ.மீ.X 15.2 செ.மீ.

பயன்படுத்தப்பட்டுள்ள தாள் : பலாப்பூர் 11.6.பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்:11.6 ஸ்ரீலிபி

மின் அச்சுக்கோவை : சிவசுந்தரி, ஏ-9,சாந்தி பிளாட்ஸ்
ஆதம் தெரு, மயிலாப்பூர், சென்னை-4

மறுதோன்றி அச்சகம் : பிரின்ட் டெக் இந்தியா,சென்னை-600 005,

நூலின் பொருள் : ஸ்ரீசண்டேசுவரர் வடிவம் புராணக் கதைகள் ,
திருக்கோயில்கள் பற்றிய செய்திகளின் தொகுப்பு .

நன்கொடை விலை : ரூபாய் 100/-

Koviloor Digital Library

32-2

உ

திருச்சிற்றம்பலம்!





இந்த இனிய வேளையில்.....

எல்லாம் வல்ல இறைவன் திருவருளும் குருவருகளும் துணை கொண்டு 25 ஆண்டுகளுக்கும் மேலாக வெளி வந்து கொண்டிருக்கும் சிவமஞ்சரி வரிசையில் **"தொண்டர் தம் நாயகம் ஸ்ரீ சண்டேசுவரர்"** என்னும் இந்நூல் மலர்ந்து மணம் வீசுகிறது.

இந்த நூலில், சிவபெருமானின் அணுக்கத்தொண்டராகவும் கோயிற் பொறுப்பாளராகவும், அவரால் பொற் கோயிலும் போனகமும் அருளப்பட்டு, தொண்டர்கள் நாயகமாகவும், பஞ்ச மூர்த்திகள் வரிசையில் ஒருவராகவும் இடம்பெற்றுள்ள சண்டேசு வரப் பெருமானின் பெருமைகள் இயன்ற வரையில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

இந்நூல் மலரும் இந்த இனிய வேளை யில் இந்நூல் மலர்ந்து மணம் பரப்பத் துணை நின்ற அனைவரையும் போற்றி வணங்கி நன்றி பாராட்டி மகிழ்கின்றேன்.

முதற்கண் எமது எழுத்துப் பணிகளுக்கு நல்லாதரவு தந்து வரும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன

குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக

பரமாச்சார்ய சுவாமிகளை

போற்றி வணங்குகிறேன்.

எனது இந்த எழுத்து மற்றும் பதிப்புப் பணிகளுக்கு நல்லாதரவு தந்து வரும் எனது அன்பிற்கினிய சகோதரி **திருமதி. அனந்தலட்சுமி**, அவரது கணவர் கயிலைமணி **வரத.வீரராகவன்** அவர்களுக்கும், எப்போதும் துணையிருந்து ஆலோசனைகளை வழங்குவதோடு படிகளைத் திருத்தி உதவி வரும் சித்தாந்த ரத்தினம்.**டாக்டர்.விஸ்வ. ஆறுமுகம்**(மேனாள் விஞ்ஞானி,சி.எல்.ஆர்.ஐ)

Koviloor Digital Library

அவர்களுக்கும் எனது பணிகளுக்கு ஆதரவாக இல்லப் பொறுப்புக்களை ஏற்று நடத்தி வரும் எனது மனைவி **திருமதி. வசந்தா** அவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றி மலர்களைச் சூட்டி மகிழ்கிறேன்.

பதிப்புப் பணியில் அச்சுப்படிகளைத் திருத்தி உதவிய சகோதரி **குமாரி, சித்தாந்த ரத்தினம். எஸ்.லட்சுமி தேவி** (மந்தைவெளி),**திரு.குருமனோகரவேல்**, அச்சிட்ட பிரிண்ட்டெக் இந்தியா **திரு. பூபாலன்,திரு. செந்தில்** ஆகிய அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்பர்கள்அனைவருக்கும் அதிசய வடிவுடை கற்பகவல்லி உடனாய ஆனந்தபைரவ கபாலீசுவரப் பெருமான் அன்பர்கள் யாவருக்கும் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வை அளித்து இன்பமுடன் வாழ வைக்க வேண்டுமென்று அவர் தம் பொற் பாதங்களைப் போற்றி வணங்கி வேண்டிக் கொள்ளுகிறேன்.

சிவசுந்தரி கலைக்கூடம்
29, பீமண்ண முதலி கார்டன் தெரு,
ஆழ்வார்பேட்டை, சென்னை-18
ஹேவிளம்பி, மார்கழித் திருவாதிரை
[02-01-2018] செவ்வாய்க் கிழமை

என்றும் சிவப்பணியில்,
மீளா அடிமை
பூசை.ச. ஆட்சிலிங்கம் (எ)
பூசை. ச.அருணவசந்தன்.




நன்றி! நன்றி! நன்றி!

"**தொண்டர் தம் நாயகம் ஸ்ரீ சண்டேசுவரர்**" என்னும் இந்த மலருக்கு அருட்கொடையோடு வாழ்த்துக்களை வழங்கிய அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Koviloor Digital Library

அன்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு 2018
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!



With Best Compliments From :

சித்தாந்தச் சுடர் **சிவாலயம். ஜெ.மோகன்**
அபிராமபுரம், மயிலை, சென்னை – 4.

குருஜி **K.K. கோபாலன் சர்மா**
பரமேஸ்வரி நகர், அடையார், சென்னை


திரு. பேரா. **ஞான அம்பலவாணன்**
வடக்கு வீதி சிதம்பரம்

இருமொழி சீராளர், திருவாசக மாமணி
திருவையாறு வெ.இரமணன்
இருப்பு சிதம்பரம்

திரு.நாடியன் செல்வன்
பெங்களூர்

Koviloor Digital Library

அன்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு 2018
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!



மண்ணடி **சிவஸ்ரீ.மோகன் (எ) சபாரத்தினசிவாச்சாரியார்**
அருள்மிகு நடராஜர் ஆலயம் மண்ணடி, சென்னை-1

சிவாகமஸ்ரீ **சேனா. கபாலி (எ) வைத்தியநாத குருக்கள்**
அருள்மிகு கபாலீசுவரர் கோயில், மயிலாப்பூர், சென்னை-4

சிவஸ்ரீ **இராஜ. முரளி**
அலமேலுமங்காபுரம், மயிலை,
சென்னை-4.

கோவை சிவஸ்ரீ **வடிவேல் கண்ணன்**
கோவை சிவனடியார் திருக்கூட்டம்

சிவநெறித்தொண்டர் **ஆ.சீ.சிவதாசன்** (ரகோத்துமன்)
அருள்மிகு நடராஜர் ஆலயம் ஆலப்பாக்கம், சென்னை

சிவஸ்ரீ **M.சுவாமிநாதன்**
திருவாரூர். இருப்பு துபாய்

சிவஸ்ரீ **K.சூரிய நாராயணன்**
சாஸ்திரி நகர் அடையார், சென்னை

Koviloor Digital Library



சிவநெறிச்செல்வர் **T.K.தேவராஜன்**
தேவராஜன் மருத்துவமனை திருமழிசை
சென்னை - 600 104.

சிவநெறிச்செல்வர் **A.பன்னீர்செல்வம்**
திருமழிசை இருப்பு இந்திரா நகர்
சென்னை - 600020.


சிவஸ்ரீ மோகன. ராஜசிம்ம மகேந்திரன்
பெருமாளகரம் - திருவேற்காடு, சென்னை

சிவநெறிச்செல்வர்
M.S.முத்துக்குமார் முதலியார்
மதுரவாயில், சென்னை

சித்தாந்த ரத்தினம் கயிலைமணி,
நூம்பல். சிவஸ்ரீ. R.இராமச்சந்திரன்
தலைவர், திருவாசகப்பேரவை, சென்னை- 29.

Koviloor Digital Library

அன்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு 2018
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!



திரு. நடராஜன் கார்த்திகேயன்
திருவல்லிக்கேணி

திருமூலர் அடிபோடி
டாக்டர். R.மகாதேவன்
ஆழ்வார்பேட்டை, சென்னை – 18.


திருமதி. R.விஜயலட்சுமி
ஜமீன்பல்லாவரம், சென்னை

திருமதி. M.பானுமதி மாதவன்
திருவல்லிக்கேணி

திருமதி. R.வசந்தா ராம்குமார்
மேனாள் அதிகாரி, பி.எஸ்.என்.எல்

Koviloor Digital Library

அன்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு 2018
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!



சிவ சேவா ரத்தினம்
எஸ். கிருஷ்ணமூர்த்தி
ஆடிட்டர் பாண்டிச்சேரி, சென்னை

சித்தாந்த ரத்தினம்
சிவஸ்ரீ V.C.கோபிநாத், ஸ்ரீமங்களம்
மேனாள் முதுநிலை கணக்கு அதிகாரி
சமூக நலத்துறை புதுசை அரசு புதுவை

திருமதி. கலா (எ) மண்ணாங்கட்டி
அமைச்சக உதவியாளர்
மின்துறை புதுவை அரசு

சித்தாந்த ரத்தினம்
V.செங்குட்டுவன்
கார்த்திகேயன் பேக்கேஜிங்ஸ்,
திருமால் நகர், புதுவை


சித்தாந்த ரத்தினம்
டாக்டர். C.ரவிசங்கர் B.D.S.
சற்குரு பல்மருத்துவ மனை, ஜவகர் நகர்
பாண்டிச்சேரி

Koviloor Digital Library

அன்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு 2018
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

With Best Compliments From :





தூயோன் சண்டேசன் அடிபணிவோம்

பொன்னங்கடுக்கை முடிவேய்ந்த
புனிதற்கு அமைக்கும் பொருள் அன்றி
மின்னும் கலன் ஆடைகள் பிறவும் வேறு
தனக்கென்று அமையாமே
மன்னும் தலைவன் பூசனையின்
மல்கும் பயனை அடியவர்கள்
துன்னும்படி பூசனை கொள்ளும் தூயோன்
அடித்தாமரை தொழுவோம்

-திரு ஆனைக்கா புராணம்

பொன்போலும் இதழ்களை உடைய சரக்கொன்றை மாலைகளை முடியின் மேற் கொண்ட புனிதனான சிவபெருமான் சூடிக்களைந்த ஆடை, அணிகலன், உண்பன அன்றி தனக்கென மின்னும் அணிகலன்கள், ஆடைகள், உண்பொருள் ஆகியவற்றை வேண்டிப் பெறாது சிவசிந்தனையில் திகழும் சண்டீசப் பெருமான் சிவபூஜை செய்யும் அடியவர்களுக்குச் சிவபூஜையின் பயனை அருள்பவனாக இருக்கிறார் அவரது அடித்தாமரைகளைத் தொழுவோம்.

இறைவன் அருளால் எல்லோரும் இனிது வாழ்க! வளர்க!!

டாக்டர் M.V.ஆச்சால் - A.அமர்நாத் வேலூர்

திரு. பேரா. M.V. சத்யநாராயணன்
பிசிக்ஸ் பேராசிரியர் ஐ.ஐ.டி. கிண்டி, சென்னை


கயிலைமணி வைராபாய்
அண்ணாநகர் மேற்கு, சென்னை - 40.

பிரம்மஸ்ரீ P.B. வெங்கட்ராமன்
ஆஷியானா ஆழ்வார்பேட்டை, சென்னை - 18

சித்தாந்த ரத்தினம் S. கிருஷ்ணமூர்த்தி
சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், நெய்வேலி

Koviloor Digital Library

அன்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு 2018
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!



பேரா. டாக்டர். N.சந்திரசேகரன்
மேனாள் பேராசிரியர் புனிதஜோசப்
நல்லூர் திருச்சி

பேரா.B.சுவாமிநாதன்
மேனாள் பேராசிரியர் சரஸ்வதி
நாராயணன் கல்லூரி மதுரை

சிவத்திரு. S.குருமூர்த்தி
ஸ்டாக் போக்கஸ், திருச்சி

லண்டன் C.வேதநாராயணன்
லால்குடி, இருப்பு கிழக்குத் தாம்பரம், சென்னை

P.T.T.ராஜன்
தேஜஸ் பவுண்டேஷன், சென்னை – 61
நங்கநல்லூர்.
சித்தாந்த ரத்தினம்.
டாக்டர். விஸ்வ. ஆறுமுகம்
மேனாள் விஞ்ஞானி CLRI இருப்பு, கிழக்குத் தாம்பரம், சென்னை

Koviloor Digital Library

அன்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு 2018
பொங்கல் நல்வாழ்த்துக்கள்

With Best Compliments From :

சண்டேசனே போற்றி! போற்றி!

புரிசடையோன் முடிக்கிடந்த கொன்றையம்தார்
முடித்த சிரம் போற்றி!
திருவுடை நன்குடுத்து அமலன் உண்ட பரிகலத்தின்
உண்ணும் திருவாய் போற்றி!
கருவிடை புக்குஉழலும் என்னை எடுத்தாண்ட
சண்டேசக் கடவுள் சோதி!
மருவும் மழுக் கரம்போற்றி! அருள்நிறை
செஞ்சரண மலர் வனசம் போற்றி!!

-திரு ஆப்பனூர் புராணம்


சண்டேசுவரப் பெருமானே! பொன்போலும் புரிசடைகளைக் கொண்ட சிவபெருமானின் முடிமேல் கிடந்த கொன்றை மாலையை அணிந்த உமது சிரத்தைப் போற்றுகின்றேன் அவர் அணிந்த ஆடைகளை உடுத்து மகிழும் உமது இடையையும் அமரனாகிய சிவபெருமான் உண்ட உண்கலத்தில் இருக்கும் உணவை உண்ணும் உமது திருவாயையும் போற்றுகின்றேன். கருவிடை புகுந்து உழலும் என்னை எடுத்து ஆண்டு கொண்ட சண்டேசுவரக் கடவுளே, சுடர்விடும் மழுவை ஏந்தும் உமது கரத்தைப் போற்றுகின்றேன். அருள் வழங்கும் சிவந்த தாமரைபோன்ற திருவடிகளைப் போற்றுகின்றேன்.

CPS

Cognitive Platform Solutions Pvt. Ltd.
NO. 100, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034.
www. cognitiveplatformsolutions.com

Koviloor Digital Library

தொண்டர்கள் நாயக போற்றி! தொழும்பர் தம் உள்ளத்து விளக்கே போற்றி !
சண்டீஸ்வரனே போற்றி! சங்கமர் தலைவனே போற்றி ! போற்றி !!



தொண்டர்கள் நாயகம் சண்டேசுவரர்

சிவபெருமானின் அணுக்கத் தொண்டனாகவும், சிவனடியார்களின் தனிப் பெருந் தலைவனாகவும், திகழ்பவர் சண்டேசுவரர். அவர் சிவபெருமானைச் சுற்றியுள்ள அஷ்ட பரிவாரங்களில் ஒருவராகவும், சிவாலயங்களில் பவனி வரும் பஞ்சமூர்த்திகளில் ஒருவராகவும் விளங்குகிறார். அன்பர்கள் தமது அளப்பரிய பக்தியால் தெய்வநிலைக்கு உயர்த்தப்படுவார்கள் என்பதை இவரது வரலாறு தெரிவிக்கிறது.

சிவபரிவாரங்களில் இடம் பெற்றுள்ள நந்திதேவர், இடபதேவர், விநாயகர், சப்த மாதர்கள் ஆகியவர்களைச் சிந்தித்த நாம், தொடர்ந்து இந்நூலில் சண்டேசுவர தேவரைப் பற்றி அறிந்து மகிழலாம்.

அவரது பெருமைகளைத் திருமுறைகள் விரிவாக எடுத்துக் கூறுகின்றன. அத்துடன் ஆகமம் போற்றும் சண்டீசர் பலரும் உள்ளனர். அவர்கள் பற்றிய விவரங்களை ஆகம நூல்கள் விரிவாகப் பேசுகின்றன.

இந்நூலில், பக்தசண்டீசர், சிவாலயங்களில் அவர் பெற்றிருக்கும் உன்னத இடம், அவருக்கான திருவிழாக்கள், சிற்ப ஓவியங்களில் அவரது வரலாற்றுக் காட்சிகள், ஆகமம் போற்றும் சண்டேசுவரர்கள் முதலான பலசெய்திகளை இயன்றவரையில் தொகுத்து அளித்துள்ளோம். இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு போனகமும் பொற்கோயிலும் அருளிப் பெருமைப்படுத்திய கபாலீசுவரப் பெருமானும் அவன் பங்கில் வளர் கற்பகவல்லியும் அன்பர்கள் அனைவருக்கும் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வை அளித்து எந்நாளும் இன்பமுடன் வாழ்விக்க வேண்டுமென்று அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வணங்குகின்றோம். வாழிய நலம் சூழ! அன்புடன்,

- சிவசுந்தரி

Koviloor Digital Library

சண்டிகேஸ்வரர் சிந்தனைத் துளிகள்

சிவாலயங்களுக்குச் சென்று சிவபெருமான் வீற்றிருக்கும் கருவறையை வலம் வருகிறோம். அவ்வேளையில் கருவறையில் இருந்து அபிஷேக நீர் வெளியேறிச் செல்லும் கோமுகிக்கு அருகில் சிறிய அளவிலான சந்நிதியொன்றைக் காண்கிறோம். அதில் இரண்டு கரங்களுடன் அமர்ந்த கோலத்தில் ஒரு தெய்வம் வீற்றிருக்கிறார் அவரே சண்டீசர் ஆவார்.

சிவாலயங்களில் கருவறை எத்திசையை நோக்கி இருந்தாலும், சண்டீசர் மட்டும் அதன் வடகிழக்கு முனையில், கோமுகிக்கு அருகில் அமைந்த சந்நிதியில், தெற்கு நோக்கியவாறு அமர்ந்திருப்பதைக் காண்கிறோம்.



ஸ்ரீ பக்த சண்டீசர்-நல்லூர்

சண்டம் என்பது ஒரு பதவியாகும். அது சிவபெருமானின் அருளைப் பெற்ற அடியவர்களுக்கு பெருமானின் அருளை அவரவர்களுடைய பக்குவத்திற்கு ஏற்ப வழங்குகின்ற அதிகாரம் கொண்டதாகும்.

ஆகமங்கள், சிவபெருமானின் அணுக்கத் தொண்டர்களாக இருக்கும் சண்டீசுவரர்களைப் பற்றிய அனேக செய்திகளைத் தெரிவிக்கின்றன.

சில ஆகமங்களில் ஒவ்வொரு சதுர் யுகத்தின் நான்கு யுகங்களிலும் யுகத்திற்கு ஒருவராக நான்கு சண்டீசர்கள் சொல்லப் பட்டுள்ளனர். ஒரு யுகம் முடிந்ததும் அந்த இடத்தில் வீற்றிருப்பவர் முக்தி அடைவார்.

அடுத்த யுகத்தில் தகுதி பெற்ற வேறொருவர் சண்டீஸ்வரராக வீற்றிருந்து சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டராக இருப்பார். இப்படியே கடந்த இருபத்துஏழு சதுர் யுகங்களிலும் சண்டீசராக 108 பேர்கள் வீற்றிருந்து முக்தி பெற்றுள்ளனர்.

இப்போது இந்த கலியுகத்தின் தொடக்கத்தில் சண்டீச பதத்தில் வீற்றிருந்தவர் முக்தி பெற்றுவிட்டார். அவருக்குப் பதில் சிவபெருமான் சேஞ்ஞலூரில் தோன்றிய விசாரசருமரை சண்டீசராக்கி, அவருக்கு போனகமும் பொற்கோயிலும் அளித்து சண்டீசராக இருக்கும்படிச் செய்தார்.

அதனால் அனைத்து தென்னகத்து சிவாலயங்களிலும் விசாரசர்ம சண்டீசரை எழுந்தருளி வைத்து வழிபட்டு வருகிறோம். இவரை பக்த சண்டீசர் என்பர். இவர் அறுபத்து மூன்றுநாயன்மார்களில் ஒருவராகவும் திகழ்கிறார்

Koviloor Digital Library

சிவாகமங்களின் அடிப்படையில் அமைந்த பூஜாபத்ததி நூல்களில் சிவ பெருமானின் அணுக்கத் தொண்டராக த்வனி சண்டேசுவரர் என்பவர் கூறப்பட்டுள்ளார். அவர் நான்கு முகமும் நான்கு கரங்களும் கொண்டவராக இருக்கிறார்.

சிவபெருமானின் பஞ்சாவர்ண பூஜைகளிலும், யாக சாலைகளில் வைக்கப்படும் இருபத்தேழு (சதுர்விம்சதி) மூர்த்திகளில் ஒருவராகவும் இந்த நான்முகச் சண்டியே பூசிக்கப்படுகிறார்.

சிவபெருமானைச் சுற்றியுள்ள முதன்மை பெற்ற எட்டு பரிவார தெய்வங்களில் அவரும் ஒருவராக இருக்கிறார். அவரை வடகிழக்குத் திசைப் பரிவார தெய்வமாகக் கொள்கின்றனர். சிவபெருமானின் அஷ்ட பரிவாரங்கள் என்பது நந்தி, ப்ருங்கி, மகாகாளர், விநாயகர், இடபர், முருகர், அம்பிகை, சண்டீசர் என்பவர்களாவர். (பிற்காலத்தில் இவர்களில் நந்தி, பிருங்கி, மகாகாளரை விலக்கி விட்டு, சூரியன், சப்தமாதர், பைரவர் ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர்). ஆகமவழிபாட்டின்படி சதுர்முக சண்டீசருக்குரிய மந்திரங்களை ஓதி அப்பூசைகள் பக்த சண்டீசருக்கு நடத்தப்படுகின்றன

சோழ மன்னர்கள் இந்த சண்டீசரை விலக்கிவிட்டு விசார சர்மரான பக்த சண்டீசரை சண்டீச பதத்தில் எழுந்தருளி வைத்து வழிபடும் வழக்கத்தை உருவாக்கினர்.

சிவாலயங்களில் தொனிசண்டீசரை வைக்கும் வழக்கம் போய், பக்த சண்டீசரை வந்து விட்டதால் அவருக்கென உலாத் திருமேனியும் அமைக்கப்பட்டுள்ளது. பெருந்திருவிழாவின் தொடக்கத்திலும் விழாவின் நிறைவிலும் அவருக்குத் தனியே விழா நடத்தப்படுகிறது. இவரை வணங்கி சிவபூசையின் பயனை நமக்கு அருளுமாறு வேண்டுகிறோம்.

சிவாலயங்களில் பவனி வரும் பஞ்ச மூர்த்திகளில் ஒருவராக பக்த சண்டீசரே இருக்கின்றார். சிவபெருமானின் சதுர்த்த பரிவாரம் என்பது விநாயகர், முருகன், அம்பிகை, சண்டீசர் ஆகிய நால்வராவர். சிவபெருமானும் இவர்கள் நால்வரும் சேர்ந்து பஞ்சமூர்த்திகள் என்று அழைக்கப்படுக்கின்றனர்.

சோழர்கள் காலத்தில் நான்முகச் சண்டியை விலக்கிவிட்டு, பக்த சண்டீசரை கோயில்களில் வைத்து வழிபடும் வழக்கம் வந்து விட்டது என்றாலும் சில கோயில்களில் இப்போதும் நான்முகச் சண்டி வழிபாட்டில் இருப்பதைக் காண்கிறோம்.

சிதம்பரம் ஆலயத்தில் ஒரே சந்நிதியில் தொனி சண்டீசரும், பக்த சண்டீசரும் இருக்கக் காண்கிறோம். ❀



ஸ்ரீ நான்குமுக சண்டீசர்

Koviloor Digital Library

இந்நூலில், மண்மீது வாழ்ந்து ஒப்பற்ற சிவபக்தியால் சிவபெருமானால் தழுவப் பட்டு, சண்டிபதம் அளிக்கப்பட்ட பக்த சண்டீசர் வரலாறு சிவபூஜைகளில் அவர் பெற்றுள்ள சிறப்புகள் ஆகியவை விரிவா கப் பேசப்பட்டுள்ளன.

கோயிலில் நடைபெறும் நிலப் பரி வர்த்தனைகள் விற்பனை, வாங்குதல் போன்றவை பக்தசண்டியின் பெயராலேயே நடைபெற்றன. அதற்காக அளிக்கப்பட்ட விலை சண்டீசுவரப் பெருவிலை எனப் பட்டது. கோயிலில் இருந்து வெளியிடப் பட்ட அழைப்புகள் அறிவிப்புக்கள் யாவும் இவர் பெயராலேயே வெளியிடப்பெற்றன.

சைவசமயத்தில் பக்த சண்டீசுவரர் அதி உன்னத இடத்தைப் பெற்றுள்ளார்

சிவபெருமானுக்கு அணுக்கத் தொண் டராக சண்டீசர் இருப்பது போலவே சூரியன், அம்பிகை, முருகன், விநாயகர் ஆகியோருக்கும் தனித்தனியே சண்டீசு வரர்கள் உள்ளனர். மேற்படி தெய்வங்க ளுக்கான பூஜைகளின் நிறைவில் அந்தந்த சண்டேசுவரர் பூசிக்கப்படுகின்றார்.

இவ்வகையில் பக்த சண்டீசர், ஆகமம் போற்றும் சண்டீசர், சூரியன் முதலான தெய்வங்களின் சண்டிசுவரர்கள் எனப் பலரையும் இந்த நூலில் தரிசித்து மகிழ லாம்.

தொடர்ந்து வரும் பக்கங்களில் மேலே குறித்த செய்திகளை விரிவாக அறிந்து மகிழலாம்.

பொற்கோயில் கொண்ட பிரான்

கோயில் என்பதற்குத் தலைவனின் இல்லம் என்பது பொருளாகும். உயிர்களுக்குப் பெருந்தலைவனான சிவபெருமான் வீற்றிருக்கும் இடம் கோயில் எனப்பட்டது. அது பூஞ்சோலைகளுக்கு நடுவே இருந்தபோதும் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த போதும் பூங்கோயில் என்று அழைக்கப்பட்டது. பொன்னால் வேயப்பட்டபோது பொற்கோயில் எனப்பட்டது. பொற்கோயில் என்பது உயர்ந்ததிலும் உயர்ந்த சிறப்புகளைக் கொண்ட கோயில் என்ற பொருளையும் தருவதாகும். மேலும் குளிர்ந்த சோலைகளுக்கும் அருவிகள் பொய்கைகள் சூழ்ந்த குளிர்ச்சியான இடத்தில் இருந்த கோயில்கள் குளிர்கோயில்கள் எனப்பட்டன. அது கல்லால் கட்டப்பட்டபோது கல்தளி (கற்றளி) எனப்பட்டது அந்நாளில் கோயிலில் இருந்த ஆடல் மகளிர் **குளிர்கோயில், பொற்கோயில் நங்கை, பூங்கோயில் பாவை, கற்றளி** போன்ற பெயர்களைச்சூடி இருந்தனர்.

அடியார்களே தெய்வங்களுக்கு அவர்கள் மனம்மகிழ தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப கற்றளி, பொற்கோயில், பூங்கோயில் பொற்கோயில் ஆகியவற்றை எடுத்தனர். புலவர்கள் சொல்லால் ஆன சொற்கோயிலை அமைத்தனர். அடியவர்கள் மனக்கோயிலில் மகாதேவனை இருத்தி வழிபட்டனர்.

இதற்குமாறாக, இறைவன் தன் அடியவர் மகிழ ஒரு கோயிலை அளித்தான் என்பதை யும் அதுவும் உயர்ந்த பொற்கோயிலாக அளித்தான் என்பதையும் சண்டீசர் வரலாற்றில் மட்டுமே காண்கிறோம் சண்டீசரை பொற்கோயில் கொண்டபிரான், பொற்கோயில் தம்பி ரான் என்று அழைக் கின்றனர். சோழர்கள் கருவறைக்கு அருகில் சிறிய அளவிலான தனிக் கோயிலாகவே சண்டீசர் சந்நிதியை அமைத்துள்ளனர்.

Koviloor Digital Library

திருத்தொண்டர் புராணம் (எ) பெரியபுராணத்தில்
இடம்பெற்றுள்ள
சண்டேசுவர நாயனார் வரலாறு

சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் வரிசையில் இருபதாவது நாயன்மாராக சண்டேசுவரரைப் போற்றுகின்றார். திருக் குறிப்புத்தொண்ட நாயனாரின் புராணத்தை அடுத்து சண்டேசுவர நாயனார் புராணம் பாடப்பட்டுள்ளது.

எந்நாளும் பொய்யாது பாய்ந்து கொண்டிருக்கும் காவிரி ஆற்றின் தண்ணீர் கொடையால் புனல் நாடு என்னும் பெருமை பெற்றது சோழநாடு. அந்நாட்டில் ஓடும் மண்ணியாறு என்னும் ஆற்றின் கரையில் சேய்ஞலூர் என்னும் திருத்தலம் உள்ளது.

அது முன்னாளில் வேல் ஏந்தி வெற்றிப் படை நடத்தி, அசுரர்களை அழித்த முருகப் பெருமான் வேதம் வல்ல பிராமணர்களுக்கு பிரமதேயமாக அளிக்கப்பட்ட பழம் பெருமை மிக்கதும் செல்வச்செழிப்பு மிக்கதும் ஆன திருவூர் ஆகும்.

அந்த ஊரில் வாழும் மறையவர்கள் செம்மை அளிக்கும் திருநீற்றை மேனியில் ஒரு மனதுடன் பூசுபவர்கள். இரு பிறப்பாளர்கள். மூன்று சந்நிதிகளிலும் தீயோம்பி வேள்வி செய்பவர்கள். நான்கு வேதங்களையும் முறையாகப் பயின்றவர்கள். ஐம்புலன்களையும் அடக்கி, அவற்றைத் தன் வழியே செலுத்துபவர்கள். பார்ப்பனர்களுக்குரிய அறுவகைத் தொழிலையும் முறையாகச் செய்பவர்கள். தம் மெய்மை ஒழுக்கம் முதலிய சிறந்த புண்புகளால் ஏழுலகமும் போற்றும் பெருமை மிக்கவர்கள்.



சண்டேசுவர நாயனார்

அந்த ஊரில் திருமடங்களில் வேதங்கள் முழங்குகின்றன. விண்ணளவு எழும் அந்த ஒலியால் மேகங்கள் ஒதுங்கிச் செல்கின்றன. அம்மடங்களில் பெருமை மிக்க ஆசிரியர்களும் அவர்களிடம் பயிலும் மாணவர்களும் நிறைவாக இருக் கின்றனர். அது வானில் நட்சத்திரங்கள் சூழ சந்திரனை ஒளி வீசிக் கொண்டிருப்பது போல் இருக்கின்றது. அந்த சிறுவர்கள் தழைத்த குடுமி கொண்டவராக மான் தோல் கட்டிய முன்னூலை மார்பில் அணிந்துள்ளனர்.

அவ்வூரில் உள்ள வேள்விச் சாலைகளில் நடைபெறும்

Koviloor Digital Library

வேள்விகளில் மறையோர் தேவர்களுக்கான ஹவிசை வழங்குகின்றனர். அதைப் பெறுவதற்காக பிரமன் திருமால் ஆகியோர் தத்தம் வாகனங்களில் வருகின்றனர்.


அங்குள்ள வேள்வித் தூண்களான யூபத் தூண்கள் இந்திரன் வந்திருக்கும் போது அவனது ஐராவதம் என்னும் யானையைக் கட்டும் தறிகளாக இருக்கின்றன.

வீதிகளில் ஹோமங்களுக்கான நெய்யைப் பெற உதவும் பசுக்கள் தன் மடியில் பெருகும் பாலைச் சொரிந்து கொண்டே செல்கின்றன. சாம வேதம் ஓதுபவர்கள் வேள்விக்கான சமித்துக்களை (குச்சிகள்)ச் சுமந்து செல்கின்றனர். பூக்களால் நிறையப் பெற்ற பெரிய குளிர்ந்த நீர்த்தடங்களில் மூழ்கிக் களித்த மறையோர் குல மகளிர்கள் ஈரம் சொட்ட நடந்து செல்கின்றனர்.

அந்த ஊரினை அடுத்து அலைகள் வீசி ஓடும் மண்ணியாற்றங்கரையில் உள்ள வயல்களின் எல்லையில் வேள்விச் சாலைகள் அமைந்துள்ளன. அதனைச் சூழ்ந்துள்ள இடங்களில் வேள்விச்சாலைக்கு வந்து சடங்குகளை முடித்துக் கொண்டு மன நிறைவுடன் செல்லும் வேள்வித் தலைவர்களின் (யஜமான்) தேர்களும், தேவர்களின் விமானங்களும் உள்ளன.

இவ்வூர் சோழர்கள் முடிசூட்டிக் கொள்ளும் ஐந்து பெருநகர்களில் ஒன்றாகும்.பெருந்தலைவனும் அபயனும் தில்லை சிற்சபையைப் பொன் மயமாக்கியவனும், வளவர்குலத்தில் தோன்றிய போர் ஏறு (காளை) போன்றவனும், புவிகாக்கும் மன்னர் பெருமான் என்று போற்றப்பட்டவனும் ஆகிய குலோத்துங்க சோழனின் பெருமைமிக்க குடியாகிய சோழர்களோடு தொடர்புடைய பதி இதுவாகும்.


பண்களின் பயனாகத் தோன்றும் நல்ல இசையும், பாலின் கண் உள்ள இன்சுவையும், கண்களில் காணப்படும் பேரொளியும், கருத்தில் வைத்துப் போற்றுவதால் பலன் தரும் பஞ்சாட்சரமும் (நமசிவாய) விண்ணில் இருந்து கொடையாகப் பொழியும் பெருமழையும் வேதத்தின் பயனைத் தரும் சைவசமயப் புண்ணியமும் எல்லையற்றுப் பயன்தருவது போல் மண்ணில் தோன்றி வாழ்வாங்கு வாழ்ந்து பெரும் மேன்மையை அவ்வூர் எல்லோருக்கும் அளிக்கிறது.



எல்லையற்ற பெருமைகளை உடையதான அந்தத் தலத்தில் மறையோர்கள் வாழும் பகுதியில் தருமம் செழித்த காசிப கோத்திரத்தில் தோன்றிய எச்சதத்தன் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் பாம்பிடம் கொடிய நஞ்சும், ஒப்பற்ற மணியும் ஒரு சேர இருப்பது போல் நன்மை தீமை ஆகிய இரண்டு குணங்களும் கொண்டவராக இருந்தார்.

அவனுடைய மனைவியின் பெயர் பவித்ரை என்பதாகும். அவள் உயர்ந்த

Koviloor Digital Library



பெருமை மிக்க மரபில் வந்தவள். சுற்றத்தினர் போற்ற இல்வாழ்வு வாழ்பவள். பொன் போல் புதல்வரைப் பெரும் தவத்தைச் செய்தவள். எல்லையற்ற பயன் தரும் புண்ணியம் நிறைந்தவள்.

உயர்ந்த ஒழுக்கம் நிறைந்த அவர்களிடத்தில் ஒரு மகன் வந்து பிறந்தான். அவ னால் மறையவர் குலம் பெருகிய பெருமை பெற்றது. ஏழு புவனங்களும் உய்வடைந்தன. சிவபெருமானைப் போற்றும் சைவ நீதி மேன்மை பெற்றது. மாதவம் செய் பவர்களின் தவம் வெற்றி பெற்று அவர்கள் வரபலன்களை அடைந்தனர். அப்படி உதயம் செய்த குமாரனுக்கு **விசாரசர்மன்** என்று பெயர் சூட்டினர்.

அவருக்கு ஐந்து வயதானது. அவருக்கு சந்தங்கள் நிறைந்த வேதங்களும், அவற்றின் ஆறு அங்கங்களும், முன்னோன் என்று போற்றப்படும் சிவபெருமான் மொழிந்த எண்ணில் ஆகமங்களும் முந்தையஅறிவின் தொடர்ச்சியால், மொட்டு அவிழும்போதே மலரின் வாசனை வெளிப்பட்டு, அதை அறிவிப்பது போல் அவரது சிந்தை மலர சிறந்த உணர்வுடன் அவை வெளிப்பட்டன.

அவருக்கு ஏழு வயதானபோது அந்தணர்களுக்குப் பெருமை அளிப்பதும் புகழ் தருவதுமான உபநயனச் சடங்கை அவருக்குச் செய்து வைத்தனர். அவருக்கு இயல்பிலேயே உயர்ந்த ஞானம் இயைந்து வந்துவிட்டது என்றாலும், குல மரபின்படி அவருக்குப் பெற்றோர்கள் வேதம் ஓதுவிக்கும் செய்கையை மேற்கொண்டனர்.

பலவகையாக விரித்துச் சொல்லப்படும் வேதங்களையும், ஆகமம் முதலான அருங்கலை நூல்களையும் போதிப்பதற்கு முன்பாகவே விசாரசர்மன் அறிவாலும் உணர்வாலும் பெற்றுள்ள நிலையைக் கண்டு அங்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் அவ்வூர் மறையவர்களும் அதிசயித்தனர். எல்லையற்றுப் பரந்து பட்டுக் கிடக்கும் கலைகளின் நுண்பொருளாகிய ஞானம் சிவபெருமானின் ஆடும் திருவடிகளே என்று கருத்திற்கொண்டு, அதற்கேற்ப வயதால் சிறியவனாகவும், அறிவில் பெருந்தகைவு உடையோனுமான சிறிய பெருந்தகை விசாரசர்மர் சிவபூசையில் ஈடுபட்டு, அதில் சிந்தையைச் செலுத்தினார்.

ஆனந்த நடனம் புரியும் சிவபெருமான் தம்மை உடைமைப் பொருளாகக் கொண்டு தம் தலைவனாக இருக்கிறார் என்பதை நெஞ்சால் உணர்ந்து அதனால் பெருகும் பேரன்பில் சிவசிந்தனையோடு சிவநேயச் செம்மலாக விசாரசர்மர் விளங்கி வரும் நாளில்...

மறையோதும் சிறுவர்களுடன் செல்லும் போது,ஊர்ப் பசுக்களின் கூட்டம் ஒன்று செல்லக் கண்டார். அப்போது புனித மிகு பசு ஒன்று மேய்ப்பவன் மீது தனது கொம்புகளை உரசிச் சென்றது.மேய்ப்பவன் அது புனிதம்மிகு பசு என்பதையும்

Koviloor Digital Library

மறந்து, கூசாமல் தன் கையில் இருந்த நீண்ட கொம்பால் அதை அடித்தான். அதைக் கண்ட விசாரசர்மர் பசுவின் மீது கொண்ட பேரன்பால் கோபம் கொண்டு ஆயனைத் தடுத்து விலக்கினார்.

பின்னர் ஆகம நூல்களின் அருந்துணை யோடும், வேதங்களில் சொல்லப்பட்ட கருத்துக்களோடும் உலகியல் கருத்துக்க ளோடும் தாம் உணர்ந்த உணர்வோடும் அறிந்த பசுக்களின் பெருமையை அந்த பசுமேய்ப்பவனுக்கு உள்ளத்தில் பதியுமாறு கூறினார்.

உலகத்தில் தோன்றிய உயிர்கள் யாவி னுக்கும் மேலான பெருமை மிக்கவை பசுக்கள். உலகத்திலுள்ள பெருமை மிக்க தீர்த்தங்கள் யாவும் அதன் உடலில் இருக் கின்றன. தேவர்கள், முனிவர்கள், பதி னெட்டு கணங்கள் முதலானவர்கள் அதன் அங்கங்களில் வாழ்கின்றனர்.

அதற்கும் மேலாக, நாளும் வளரும் பிறைச்சந்திரனும்,கங்கையும், வெண் தலை மாலைகளும் அணிந்த ஜடாபாரத் தை உடைய சிவபெருமானின் தன் திருமுடி மேல் விரும்பி ஆடி அருளும் ஆன்அஞ்சு எனப் படும் பஞ்சகௌவ்யத்தை அளிக்கும் உரிமையைப் பசுக்குலம் பெற்றுள்ளது.

புனிதம் நிறைந்த பசுக்குலங்கள் தேவர் களோடு சேர்ந்து, இந்தஉலகத்தை தோற்றம் முதல் முடிவு வரை காக்கும் தொழிலை மேற்கொண்டுள்ளன. தேவர்களைக் காக்க கடலில் தோன்றிய விடத்தை உண்டு கண்டம் கருத்து நீலகண்டராக விளங்கும் தியாகப் பரம்பொருளான சிவபெருமான் திருமேனி யில் அணியும் திருநீற்றை வழங்கும் அவ தார மூர்த்தமாகவே அவை திகழ்கின்றன.

மான், மழு ஏந்திப் பாம்புகளை ஆபர ணங்களாக அணிந்து ஒளிவீசும் மணி களைச் சிதறும் மணிக்கங்கையைத் திருமுடி மேல் தாங்கிய சிவபெருமானும் தேவர்தம் பிராட்டியான உமாதேவியும், பவனிவரும் இடபதேவர்(மாக்காளை) குலத்தைச் சேர்ந்தவர் என்பதால் மேலும் பெருமை பெற்றுள்ளது இக்குலம்.

இதுபோன்ற பசுக்குலத்தைக் குறித்த எண்ணற்ற அருஞ்செயல்கள், பெருமை களை நினைந்து, கன்றுகளோடு கூடிய பசுக்களை மேய்ப்பதற்கு மேலான செயல் வேறு இல்லை. இதுவே சிற்சபையில் ஆடும் பெருமானின் திருவடிகளைப் பூசித் துப் போற்றும் மேலான செயல் என்பதை நினைந்தார். விசாரசர்மர் ஆயனிடம் " இனி மேல் இப்பசுக்களை நீ மேய்க்க வேண்டாம் நானே மேய்ப்பேன் " என்றார்.

வயதில் சிறுவனாக இருந்தாலும் தன் அறிவினாலும் சிவபக்தியினாலும் ஒளி பெற்று விளங்கும் அவரது ஆணையைக் கேட்டு மாடுமேய்ப்பவனான அந்த ஆயர் மகன் அவரை வணங்கி அவ்விடத்தை விட்டு அகன்றான்.

விசாரசர்மர் அந்த ஊர் அந்தணர்களின் அனுமதியைப் பெற்று, அந்த பசுக்கூட் டத்தை மேய்த்து வரத் தொடங்கினார்.

மார்பில் மான்தோல் கட்டிய பூணூல் தவழ, இடையில் அரைக்கோவணம் விளங்க, கட்டப்பட்ட குடுமி அலைபாய, கோலும் கயிறும் ஏந்தி, பசுக்களை மேய்த்தார். பாலும் அதன்பயனான ஆன் ஐந்தும், புண்ணிய பலனும் பெருக மேய்க்கும் தொழிலை மேற்கொண்ட அவர், அவற்றிற் குத் தேவையான புல்லோடு வேண்டிய அத்தனையையும் குறைவறப் பெறும்படிச் செய்தார்.

வெயில் குறைவான காலங்களில் மேய விட்டும், தழை இலைகளைப் பறித்துப்

Koviloor Digital Library

போட்டும், அவற்றின் அயர்ச்சியை நீக்கிப், நல்ல நீர்த்துறைக்கு அழைத்துச் சென்று தண்ணீர் காட்டி, மரநிழலில் ஓய்வெடுக்கும். படிச் செய்தார்.

மேயும் போதும் ஓய்வெடுக்கும் போதும் பாம்பு, சிறுவிலங்குகள், காட்டு விலங்குகள், வண்டுகள் முதலியவற்றால் உண்டாகும் அச்சத்தை நீக்கி பாதுகாத்துப் பால் சுரக்கும் வேளையில் அவற்றை அவற்றின் வீட்டிற்குக் கொண்டு சென்று விடுத்தார்.

மண்ணி ஆற்றங்கரைகளிலும் புறப்படுகைகளிலும் பசுக்களை மேய்த்ததுடன் தினமும் நடத்தும் வேள்விக்கான சமித்துக் களைச் சேர்த்துக் கொண்டு இருட்டுவதற்குள் வீடு திரும்பினார். இப்படி நாட்கள் பலவும் கடந்தன.

அந்தப் பசுக்கூட்டம் மனமகிழ்ச்சியின் காரணமாகக் கூடுதல் அழகைப் பெற்றன. பல்கிப் பெருகின. இனிய புல்லையும் மனம் விரும்பும் தழைகளையும் பெற்று உண்ட மகிழ்ச்சியால், இரவும் பகலும் தூய இனிய பால் மடியில் பெருகத் தாமே பாலைப் பொழிந்தன.

அவ்வூர் அந்தணர்கள் தாங்கள் மேற்கொண்டுள்ள வேள்விச் சடங்குகளுக்குப் பாலைத் தரும் ஓமப்பசுக்கள் காண்பதற்கு முன்னைவிட அழகு பெற்றிருப்பதையும், முன்னிலும் பல மடங்கு பால் கறப்பதையும் அறிந்தனர். இந்த பிரம்மச்சாரியான விசாரசர்மனின் அன்பு கலந்த மேய்த்தல் தொழிலாலேயே பசுக்கள் மேன்மையைப் பெற்றன என்பதை உணர்ந்து மனம் மகிழ்ந்தனர்.

அனைத்து வகையான பசுக்களும் கன்றுகளை வீட்டில் விட்டுவிட்டுப் பிரிந்து வந்திருந்த போதிலும், அளவற்ற மகிழ்ச்சியில் திளைத்திருந்ததால் தம்மை மேய்க்கும் வேதக் கன்றாக விளங்கும் விசாரசர்மரிடம் சென்று தாயின் மனத்தால் உருகி கனைத்துக் கறக்காமலே பாலைப் பொழிந்தன.


தம்மிடம் வந்து தானே முலைப் பாலைப் பொழியும் பசுக்களைக் கண்ட விசாரசர்மனின் சிவமெனும் செம்மைசேர் உள்ளத்தில் அவை சிவபெருமானுக்குத் திருமஞ்சனம் செய்து வேண்டும் என்ற குறிப்பை உணர்த்துவதாக உணர்ந்தார். உடனே சிவபூசையைச் செய்ய ஆசை கொண்டு விரைந்தார்.

முன்னாளில் செய்த அர்ச்சனையின் பயனாக பெருகிய அன்பால், அங்கிருந்த மணல் மேட்டின் மேல் செழித்து வளர்ந்திருந்த ஆத்தி மரத்தின் கீழ் மண்ணைக் குவித்து, விடைமேல் மகிழ்ந்து பவனி வரும் சிவபெருமானின் திருமேனியான சிவலிங்கத்தை அமைத்தார். சுற்றிலும் கோபுரம் பிராகாரம் ஆகியவற்றை விளையாட்டாகச் செய்தார்.

ஆத்தி மலர்களையும் பலவகையான செடிகொடிகளின் தளிர்களையும், அருகு முதலானவற்றையும், அங்கு புதர்களிலும் மணல் மேடுகளிலும் பூத்துக் குலுங்கிய மலர்களையும் பறித்து வந்து குடலையில் வைத்துக் கொண்டார். புதிய கலசங்களை எடுத்துக்கொண்டு நாணற்காட்டில் மேயும் பசுக்களிடம் சென்றார்.அவற்றிடம் சென்றார் அவற்றின் முலைகளைத் தொட்டபோதே அவை கனைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவாறு பாலைப் பொழிந்தன.

அந்தப் பாற்குடங்களை எடுத்துக் கொண்டு தாம் நிலைப்படுத்திய மணல் ஆலயத்திற்குச் சென்று முன்வைத்தார். வண்டுகள் மொய்க்கும் பூக்களைக் கொண்டு பழம்பிறப்புக்களில் பெற்றிருந்த பயிற்சியால் அன்புடன் அர்ச்சித்து, பாலை எடுத்து

Koviloor Digital Library



மணல் லிங்கத்திற்குத் திருமஞ்சனம் ஆட்டினார்,

மீண்டும் மீண்டும் விசாரசர்மர் அன்பின் மிகுதியால் பாலால் திருமஞ்சனம் செய்ய அதைச் சிவபெருமான் ஏற்று மகிழ்ந்தார்.

பெருமைகள் நிறையப் பெற்றவரான சேய்ஞலூர் பிள்ளையார் தன் உள்ளம் ஒருமைப்பட நின்று சிவபெருமானை விரும்பும் பூசைகளில் திருமஞ்சனமே உயர்ந்தது என்று எண்ணி நாளும்நாளும் பாலாபிஷேகம் செய்து வழிபட்டு வந்தார்.

சிவபெருமானின் திருவடிக்கீழ் இருக்கும் பேறு பெற்றவரான விசாரசர்மர் செய்யும் சிவபூசைக்கு வேண்டிய அளவு பாலை அளிக்கும் அந்தப் பசுக்கள் மறையோர் வீடுகளுக்குச் சென்ற பின்னும் குறைபாடு இல்லாமல், மடியில் பெருகும் பாலின் பெருகிய வளங்களை நிறைய அளித்து வந்தன.

இப்படியே பூணூல்அணிந்த திருமார்பனான விசாரசர்மர் விளையாட்டாகப் பல நாட்கள் தமது பூசைகளைத் தொடர்ந்து செய்து வந்தார். அவரது செயலின் மேன்மையை அறியாத அயலான் ஒருவன் சேய்ஞலூர் அந்தணர்களிடம் அவர் (மணலில் பாலைக் கொட்டி விளையாடுவதாக) கோள் சொன் னான்.


அவனது வார்த்தைகளைக் கேட்ட அவ்வூர் அந்தணர்கள்," பசுமேய்ப்பவனுக்கு பசுக்களின் மேன்மைகள் தெரிய வில்லை. அதனால் இவற்றின் ஆசைப்படி நானே மேய்க்கிறேன்" என்று சொல்லி, "எம் பசுக்களை அழைத் துச் சென்று மாணியான அவன் பாலைக் கறந்து விளையாடுகிறான் அவன் தந்தையை அழைத்து பேசுவோம்" என்று தீர்மானித்தனர். அதன் படி, எச்சதத் தனை அழைத்து வரும் படி ஒரு ஆளை அனுப்பி ஊர்ச்சபையைக் கூட்டி அமர்ந்தனர்.

சபைக்கு அழைத்து வரப்பெற்ற எச்சத் ததனிடம் சபையோர் " ஊர்ப் பசுக்களை மேய்க்கும் உன் மகன் செய்துள்ள தீங்கை கேள், என்று சொல்லி, அந்தணர்களின் வேள்விக்குரிய பசுக்கள் எல்லாம் மன மகிழ்வுடன் திரளாக ஒட்டிச் சென்று அன்பு கொண்டு மேய்ப்பவன் போல் நடித்து மண்ணியாற்றங்களால் பாலைக் கறந்து மணலில் கொட்டி விளையாடுகின்றான் " என்றனர்.

அந்தணர்கள் கூறியதைக் கேட்டு அஞ்சிய எச்சதத்தன், "சிறு வயதினனான அவன் செய்த செயலை இதுவரை யான் அறியேன். பெருமை உடைய அந்தணர்களே பொருத்துக் கொள்ளுங்கள். இனி இவ்விதம் நேராத வகையில் பார்த்துக் கொள்கிறேன் " என்று கூறி விடைபெற்றுக் கொண்டு வீட்டிற்கு வந்தான்.

இப்படிப்பட்ட பழிநேர்ந்ததே என எண்ணி வருந்தினான். மகனிடம் கேட்டால் உண்மையைச் சொல்லமாட்டான். உண்மையை நானே கண்டுபிடிப்பேன் என்று நினைத் தான். இரவு கழிந்து பொழுது புலர்ந்தது. விசாரசர்மர் பசுக்கூட்டத்தை அழைத்துக்

Koviloor Digital Library



கொண்டு மேய்க்கச் சென்ற பின்னர் எச்ச தத்தன் அவர் அறியாமல் அவரைத் தொடர்ந்து மறைந்து சென்றான்.

பசுக்களை ஓட்டிச் சென்ற விசாரசர்மர் இனிமை தரும் புறவில் மேய்த்தார். பிறகு மண்ணியாற்றின் மணற்குன்றில் மேயவிட் டார். அவர் பின்னே சென்ற எச்சதத்தன் அங்கு நடப்பதை அறிய எதிர்பார்த்து ஆங்கி ருந்த குராமரத்தின் மீதேறி ஒளிந்திருந்தான்.

விசாரசர்மர் மண்ணியாற்றில் மூழ்கி எழுந்தார். ஆத்தியின் கீழ் **மணலில் வழக் கப்படி திருக்கோயிலைச்** சமைத்தார். மலர் கள் மொட்டுக்கள் தழைகள் ஆகியவற்றைச் சேகரித்து வைத்துக் கொண்டார் பின்னர் குடங்களில் பசுக்களிடமிருந்து பெருகும் பாலைப் பெற்று வந்து வைத்தார்.

பிறகு விதியின்படி விளையாட்டாக நிறைவான அரும் பூசனையைத் தொடங்கி, சிவலிங்கத்தின் மீது மலர்கள் பள்ளித் தாமம் சார்த்தி, சுவை நிறைந்த பாற்குடங் களை எடுத்து,திருமஞ்சனமாட்டத் தொடங் கினார்.

வழிபடும் வகைமேல் கொண்ட பரிவும், மிகுந்த பண்பு நலமும், சிவன்பால் அவர் கொண்டுள்ள பேரன்பும் பக்தியும் வெளிப்படும் காலம் வந்தது. அதுவே மறைந்து நின்று பார்த்துக் கொண்டிருந்த எச்சதத்தனிடம் சினமாக வெளிப்பட்டது. அவன் விரைந்து மரத்தினின்று குதித்து, தம் கைத் தடியால் தனது மகனின் முதுகில் ஓங்கி அடித்தான். கொடியமொழிகளால் வைதான். சிவத்தொண்டு புரியும் சிறிய பெருமை மிக்க தோன்றலான விசாரசர்மா சிவபூஜையில் மூழ்கிக் களித்திருந்ததால் அவனது செய்கைகளை அறியவில்லை.

மேலும், மேலும் அவன் கோபம் கொண்டு முதுகில் அடிப்பதை உணராமல் விசாரசர்மர் திருமஞ்சனம் ஆட்டிக் கொண் டிருந்தார்.

அதைக் கண்ட எச்சதத்தன் மிகவும் கோபித்துத் திருமஞ்சனப் பாற் குடங்களைக் காலால் உதைத்து, அவை உருண்டோடி பாலைச் சிதறச் செய்தான்.திருமஞ்சனப்

Koviloor Digital Library

பாற்குடங்கள் சிதறிய தையும் பால் பூமியில் வழிவதையும் கண்டு கோபித்தார். தெய்வ நலம் இல்லாத அவன், தன் தந்தை என்று அறிந்தே இருந்தும், பாற் குடங்களை இடறிய அவனது கால்களை வெட்ட வேண்டும் என்று கருதி, அருகில் கிடந்த கோலை எடுத்தார். அது கனல் வீசும் மழுவானது. அதைக் கொண்டு வெட்ட, மறையவனான அவன் தந்தை மண்மேல் வீழ்ந்தான்.

அர்ச்சனையான சிவபூசைக்கு இடையூறாக இருந்த தனது தந்தையின் தாள்களை வெட்டிய பின்,இனிய பூசைக்கு எந்த இடையூறும் இல்லை என்று நிச்சயித்து, முன் போல் தனது பூசனையைத் தொடர்ந்தார்.

அந்த வேளையில் கங்கை, மதமத்த மலர், பிறை செறிந்த சடைமுடியை உடைய சிவபெருமான் தேவியோடும் விடை வாகனத்தில் தோன்றினார். அக்கணத்தில் பூத கணங்கள் புடைசூழ, பழம்பெருமை மிக்க முனிவர்கள், தேவர்கள் வந்து வேத மந்திர வாழ்த்துக்களை முழங்கினார்கள்.

சிவபெருமானின் திருவுள்ளம் அன்புடன் வெளிப்பட, பக்தியில் முதிர்ந்த பாலகனான விசாரசருமர் மனம் மகிழ்ந்து நெகிழ்ந்து கண்களிப்ப, கண்டு தொழுது அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்.

கொன்றை மலர்களைச் சூடிய சிவ பெருமான் தன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கும் விசாரசர்மரிடம் "எனக்காக உன் தாதை மாளும்படி வெட்டி எறிந்தாய். அடுத்ததாக இனி உனக்கு நானே தந்தை யானேன்" என்று சொல்லியதுடன் அவரை எடுத்து அணைத்து கருணை பெருக உச்சி மோர்ந்தார்.


சிவந்த கண்களைக் கொண்ட இடப வாகனத்தைக் கொண்ட சிவபெருமானின் மலர்க்கரங்களால் தீண்டடப்பட்ட சிறுவனார் உடல் ஐம்பூதங்களின் சேர்க்கையால் உண்டான மாய நிலையில் இருந்து உயர்ந்து சிவமயமாய் ஆனது. அவர் சிவபெருமானின் அருள் வெள்ளத்தில் மூழ்கி எழுந்து பிரமன் முதலான தேவர்கள் போற்றும்படியான ஒளி வடிவம் பெற்றார்.

அன்பர்கள் பதியான சிவபெருமான் விசாரசர்மானாரை சிவத்தொண்டர்கள் தமக்கு அதிபதியாக்கி, " இனி அனைத்தும் உண்பனவும், கலனும், உடுப்பனவும் சூடுவனவும் உமக்காகத் தந்தோம். சண்டீசனுமாம் பதந்தந்தோம் " என்றதுடன் அதை உறுதிப்படுத்த தம் சடையில் சந்திரனோடு சூடியிருந்த கொன்றை மாலையை எடுத்து அவர் தலைமீது சூட்டினார்.

எல்லா உலகங்களும் மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்தன.எங்கும் தேவர்கள் மலர் மழை பொழிந்தனர். பல்லாயிரக்கணக்கான கணநாதர்கள் பாடி ஆடிக் களித்தனர். சொல்ல முடியாத வேதங்கள் துதி செய்ய பல்லியங்கள் முழங்க, சைவ வழியானது மேன்மை அடைய தொண்டர்கள் நாயகமான சண்டேசர் சிவபெருமானைத் தொழுதார்.உலகம் எல்லாம் அறியும்படியாகப் பிழை புரிந்தபோதும் சிவபெருமான் அருளால் நான்கு மறைகளும் முழங்கும் சேய்ஞலூர் பிள்ளையார் கையால் வெட்டுண்டதால் அவர் தந்தை குற்றம் நீங்கி தம் சுற்றத்துடன் சிவலோகம் சேர்ந்தான்.

அடாத செயலைச் செய்த தாதையை மழுவால் வெட்டிய மறைச் சிறுவனாகிய (விசாரசர்மரான)சண்டேசர் அந்த உடம்புடனே சிவபெருமானின் மகன் ஆனான். இந்நிலையை யாரால் அறிய முடியும். முடிவற்ற அன்புடைய அடியார்கள் செய்யும் எல்லாச் செயலும் தவமே ஆகும் என்பதனை இதனால் அறிகிறோம்.

Koviloor Digital Library



மலர்முடி சூடியமாணி

முன்னாளில் ஊர் மக்கள் தங்களுக்கென வகுக்கப்பட்ட விதிமுறைகளுடன் கட்டுக்கோப்பாக வாழ்வு நடத்தினர். அவர்கள் பொது நலன் கருதி ஒன்றாகக் கூடி முடி வெடுக்கும் நிகழ்ச்சிகளின் போது பொது இடத்தில் கூடுவர். அக்கூட்டங்களில் மணமானவரே பங்கு பெற முடியும். தான் திருமணமானவர் என்பதைக் குறிக்க அவர்கள் தலையில் நீண்ட துணியால் ஆன தலைப் பாகையை அணிந்தனர். இந்த தலைப்பாகைகள் அவரவர் தகுதி நிலைக்கேற்ப அமைந்திருந்தன.

அரசர்கள், வணிகர், வீரர்கள் என அனைவரும் தலைப்பாகை அணிந்தனர். அரசன் அணியும் தலைப்பாகை மணிமுடி என்று அழைக்கப்பட்டது. அதனை, கிரீடம் எனவும் அழைப்பர்.

தலைப்பாகை அணிவித்தல் என்பது ஒரு கூட்டத்தின் செயல்பாடுகளில் பங்கு பெற ஒருவருக்கு உரிமைகள் வழங்குவதைக் குறிக்கும் நிகழ்ச்சியாகும். மணமகன் திருமண மேடையில் ஏறும்போத ஊர்ப் பெரியவர் அல்லது குடும்பப் பெரியவர் தம் தலைப்பாகையை எடுத்து மணமகள் தலையில் வைப்பர். சில இடங்களில் நீண்ட துணியைத் தலைப்பாகையாகக் கட்டும் வழக்கமும் இருந்தது. அதையொட்டி இதனைத் தலைக்கட்டு எனவும் அழைத்தனர். அதன் பிறகே ஊர்க் கூட்டங்களில் அவர் பங்கு பெற முடியும்.

சிவபெருமான் தன் தலைமீதிருந்த மலர்ச்சரத்தை எடுத்து, சண்டீசர் தலையில் சூட்டி, அவருக்குத் தொண்டர் நாயகம் என்னும் பதவியை அளித்தார் என்று புராணம் கூறுகிறது. இது தன் தலைப்பாகையை எடுத்து அவர் தலையில் வைக்கும் நிகழ்வாகவே கொள்ளவேண்டும்.

இதன்மூலம் தன் உடைமைகள் மீதுள்ள உரிமைகளை சண்டீசருக்கு வழங்கி அருள் பாலித்துள்ளார் என்பதை உணர வேண்டும். இதுபோன்ற நிகழ்வைப் பெருமான் யாருக்கும் செய்ததில்லை அதனால் இது அரிய செயலாக அமைகிறது. அதையொட்டியே சோழர்கள் இக்காட்சியை அற்புதச் சிற்பமாக அமைத்து மகிழ்ந்தனர்.

சிவபெருமான் சண்டீசருக்கு மலர் மாலையை மணிமகுடமாகச் சூட்டி அருள் பாலித்த தலம் திருஆப்பாடியாகும். திரு ஆப்பாடியில் சிவராத்திரிக்கு அடுத்த நாளான அமாவாசையன்று சண்டீசருக்குப் பட்டம் சூட்டும் பட்டாபிஷேக விழா நடைபெறுகிறது. இதனை **சண்டேசுவரர் பட்டாபிஷேக விழா** என்கின்றனர்.

சண்டேசுவரரின் அவதாரத் தலமான சேய்ஞலூரிரும் பட்டாபிஷேகத் தலமாகும். சோழர்கள் மணிமுடி சூட்டும் விழாவை நடத்திக்கொள்ளும் ஐந்து தலங்களில் சேய்ஞலூரும் ஒன்றாகும்.

சண்டேசுவரர் சிவ பெருமானால் ஆட்கொள்ளப்பட்டு சண்டீசபதவியை அடைந்த நாள் தைமாதத்து உத்திர நட்சத்திராமாகும்.

Koviloor Digital Library

சிந்திக்கச் சில....

பாலகர்களாக இருந்து முக்தி பெற்றவர்கள் பலர். புராணங்கள் போற்றும் ஹரிபத்தர்கள் வரிசையில் உள்ள துருவன், பக்தபிரகலாதன் போன்றவர்கள் பாலகர் நிலையிலேயே திருமாலால் ஆட்கொள்ளப்பட்டவர்கள். சைவ நன் உலகில் நந்தீசுவரர், சண்டீசர், கண்ணப்பர் போன்றவர்கள் சிறுவயதிலேயே முக்தி பெற்றவர்களாவர். அதிலும் சண்டீசர் பெருமானால் தழுவப் பெற்றதுடன் இனி நாமே உனக்குத் தந்தையானோம் என்று கூறும் பெருமையைப் பெற்றவர்.

மகாராஜாதிராஜனான சிவபெருமான் எண்ணற்ற பரிவாரங்களுடன் விளங்குபவர். அவர்கள் அவ்வளவு பேரையும் சிலையாக அமைத்து வழிபட முடியாது என்பதால் அவர்களில் முதன்மை பெற்ற எண்மரை அஷ்டபரிவாரம் என அழைத்து முதல் சுற்றில் கல் திருமேனிகளை எழுந்தருளுவித்து வழிபடுகிறோம்.

சிவபெருமானைச் சுற்றி அமைந்துள்ள எட்டுத் திக்கிலும் எட்டு பரிவாரங்கள் வீற்றிருக்கின்றனர். கிழக்கில் இடபரும், தென்மேற்கில் சூரியனும், தெற்கில் சப்த மாதர்களும், தென் மேற்கில் விநாயகர், மேற்கில் முருகப்பெருமானும், வடமேற்கில் அம்பிகையும் வடக்கில் சண்டேசுவரரும், வடகிழக்கில் பைரவரும் அஷ்டபரிவாரங்களாகத் திகழ்கின்றனர்.

இவ்வகையில் வடதிசைப் பரிவாரமாக சண்டீசர் விளங்குகின்றார். பரிவார தெய்வங்களை திருமாளிகைப் பத்தி எனப் படும் சுற்றிவரும் மேடை மீது உரிய திக்கில் அமைப்பதே வழக்கம். என்றாலும் சிவபெருமானுக்கும் சண்டீசருக்கும் நடுவில் செல்லக் கூடாது என்பதால், அவரை கோமுகிக்கு அருகில் கருவறை ஒட்டி அமைத்துள்ளனர். வீதியுலா செய்து வழிபடுவதற்கு ஏதுவாக அவர்களில் நால்வரை மட்டும் எடுத்து சிவபெருமானுடன் பவனிவரச் செய்கின்றனர். சிவபெருமானும் இந்த சதுர்த்த பரிவாரம் எனப்படும் விநாயகர், முருகன், அம்பிகை, சண்டேசுவரர் ஆகிய ஐவரையும் சேர்த்து பஞ்சமூர்த்திகள் என அழைக்கிறோம். சிவாலயங்களில் அஷ்ட மூர்த்திகளில் ஒருவராகவும், பஞ்சமூர்த்திகளில் ஒருவராகவும் சண்டேசுவரர் விளங்குகிறார்.

சிவாலயங்களில் கருவறைக்கு அருகில் அஷ்டபரிவாரங்களில் ஒருவராகக் கல்திருமேனியாகவும், வீதிகளில் பஞ்சமூர்த்திகளில் ஒருவராக உலாத் திருமேனியாகவும் விளங்கும் சண்டேசுவர நாயனார் அறுபத்து மூவர் வரிசையிலும் இடம் பெற்றுள்ளார். அறுபத்துமூவர் வரிசையில் கற்திருமேனியாகவும், உலாத் திருமேனிகள் வரிசையில் உலாத் திருமேனியாகவும் அமைக்கப்படுகின்றார்.

பெருந்திருவிழா நடைபெறும் போது விழாவை நடத்திவைக்கும் ஆச்சாரியருக்கு எதிர்பாராத விதமாக தீட்டு நேர்ந்தால் அவர் கட்டியுள்ள காப்பை சண்டே்சவரருக்கு அணிவித்து விட்டு ஆச்சாரியர் சென்று விடுவார். தொடர்ந்து சண்டேசுவரர் முன்னிலையிலேயே அந்தவிழா நடத்தி நிறைவு செய்யப்படும்.

சில ஆலயங்களில் பெருந்திருவிழா முடிந்து கொடி இறக்கம் நடைபெற்றதும் சண்டிகேஸ்வரர் கொடிச் சீலையுடன் வீதியுலா வந்து அருள்பாலிக்கிறார். இவர் வரும் போது வாத்தியங்களை முழக்காமல் முக வீணையை மட்டும் இசைக்கின்றனர் இது **மௌன உற்சவம்** என்று அழைக்கப்படுகிறது.

Koviloor Digital Library

சண்டேசுவர நாயனார் திருத்தலங்கள்

சிவபெருமானால் தொண்டர்கள் நாயகம் என்று மலர் மகுடம் சூட்டப்பட்டவர் சண்டேசுவர நாயனார். அவர் சோழநாட்டில் காவிரியின் சிற்றாறான மண்ணியாற்றங் கரையில் விசாரசர்மன் என்னும் பெயரில் பிறந்து வளர்ந்து அதற்கு அருகில் இருந்த ஆப்பாடியில் சிவனருள் பெற்று மனித உடலோடே திருக்கயிலை சென்று சிவனடியில் வீற்றிருக்கின்றார். அவர் அவதரித்த தலத்தையும், சிவபூசை செய்து பேறு பெற்ற தலத்தையும் இப்பகுதியில் சிந்தித்து மகிழலாம்.

நாயனார் அவதரித்த தலம் சேய்ஞலூர் என்பதாகும். அங்கு முருகப்பெருமான் சக்தி கிரி என்னும் மலைமீது சிவ பெருமானை அமர்த்தி வழிபாடு செய்தார். அத்தலத்தில் அம்பிகை அவருக்கு சக்தி ஆயுதத்தை வழங்கினாள் என்று புராணம் கூறுகிறது. மண்ணியாற்றின் கரையில் சேய் ஆன முருகப்பெருமான் உண்டாக்கி வழிபட்டு பின்னர், அந்தணர்களுக்குப் பிரம தேசமாக வழங்கிய நல்ல ஊர் என்பதால் அது சேய்ஞலூர் என்னும் பெயரைப் பெற்றது. இதுவே இந்நாளில் சேங்கனூர் என வழங்குகிறது.

கும்பகோணத்தில் இருந்து சென்னை செல்லும் சாலையில் திருப்பனந்தாளுக்கு முன்பாக 5கி.மீ. தொலைவில் சேங்கனூர் உள்ளது. கும்பகோணத்தில் இருந்து வருபவர்கள் சேங்கனூர் வந்து வலப்புறம் ஒரு கி.மீ. சென்றால் திருக்கோயிலை அடையலாம்.

சாலையோரத்தில் மகாத்மா என்று அன்பர்களால் கொண்டாடப்படும் கிருஷ்



Koviloor Digital Library

ணப் பிரேமி சுவாமிகளின் பெயரால் வளைவு அமைக்கப்பட்டுள்ளது. அதன் தூண்களில் கிழக்குப்புறம் உள்ளதில் சண்டேசுவரர் அவதாரத்தலம் என்றும், மேற்குப் பகுதியில் உள்ளதில் வைணவப் பெரியாரான பெரிய வாச்சான் பிள்ளை யின் அவதாரத் தலம் என்ற குறிப்பும் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்த வரவேற்பு வாயிலைக் கடந்து சென்றால்,ஊரின் நடுவே கிழக்கு நோக்கிய வாறு சிவன் கோயிலும், அதற்கு எதிரில் மேற்கு நோக்கியவாறு ஸ்ரீநிவாசப் பெரு மாள் கோயிலும் அமைந்துள்ளன. இவை இரண்டிற்கும் நடுவே தேரடிப் பிள்ளை யார் கோயில் கொண்டுள்ளார். இவரை வணங்கி மேற்கே சென்றால் சிவாலயத்தை அடையலாம்.

ஊரின் நடுவில் உள்ள சக்திகிரீசர் ஆலயம்சுமார் 12 அடி உயரத்தில் விசால மாக அமைந்த மேடையின்மீது உள்ளது. இந்த மேடை அமைப்பே சக்திகிரியாகும். முருகப்பெருமான் இமயமலையின் நடுவில் இருந்த சக்தி கிரியை எடுத்து வந்து



சேங்கனூர் (சேய்ஞலூர்) சிவாலயத்தின் தோரணவாயில்

இங்கே அமைத்து வழிபட்டதாகக் கூறு கின்றனர்.

கோச்செங்கட்சோழன் இந்த மலை யை உள்ளே வைத்து சுற்றிச் சுவர் எழுப்பி மேடையாக்கி மாடக்கோயிலாக்கினான் என்று கூறுகின்றனர். மலைமீது கருவறை அமைந்துள்ளது. அதில் சக்தி கிரீசர், குமார கிரீர், சத்யகிரீசர் என்னும் பெயர்களில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். இந் நாளில் இவரை சக்திகிரீசர் என்று அழைக் கின்றனர்.

வாயிலின் முகப்பில் தோரணவாயில் அமைந்துள்ளது. இதன்மீது இடபாரூட ராகச் சிவபெருமானும் அவரைச் சண்டீசர் வழிபடும் காட்சியும் சுதைச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன. இந்த வாயிலைக் கடந்து சென்றால் பெரிய தோட்டம் அமைந்துள்ளது. இதில் நிறைய மரங்கள் உள்ளன. இந்தக் தோட்டத்தின் ஊடே வலம் வரும் போது மேற்கில் மதிலை ஒட்டி மேற்கு நோக்கியவாறு விநாயகர் எழுந்தருளியுள்ளார். இவரை திருமதில் பிள்ளையார் என்கின்றனர். இவரை வணங்கி வலம் வரும்போது வடகிழக்கு முனையில் சண்டீசர் வரலாற்று ஐதீகக் கோயில் அமைந்துள்ளது.

இங்குள்ள மரத்தடியில் சிறிய மண் ட பத்தில் சிவலிங்கம் அமைந்துள்ளது. அருகில் மேற்கு நோக்கிய சிற்றாலயத்தில் சண்டீசுவரர் கும்பிட்டவாறு நின்று கொண் டிருக்கிறார். இந்த சிற்றாலயத்தின் மீது ஸ்ரீ விமானம் அமைந்துள்ளது.

இனி உள்வாயிலைக் கடந்து செல்ல லாம். வாயிலைத் தாண்டியதும் பெரிய மண்டபம் அமைந்துள்ளது. இதில் சண்டீ சுவரர் வரலாற்று ஓவியங்களைப் பெரிய தாக வரைந்து மாட்டியுள்ளனர். படங்களின் கீழ் அதில் இடம் பெற்றுள்ள காட்சியை

Koviloor Digital Library

விளக்கும் பெரிய புராணப் பாடல்கள் கல்வெட்டாகப் பதிக்கப்பட்டுள்ளன. இந்த முற்றத்தில் தெற்குநோக்கியவாறு அமைந்த சந்நிதியில் பால சுப்பிரமணியர் எழுந்தருளியுள்ளார். இவர் சிவபெருமானைப் பூசித்து சக்தி இடம் சக்தியாயுதம் பெற்றதை நினைவுகூரும் வகையில் இங்கு எழுந்தருளியுள்ளார்.

இவரை வணங்கி, பதினாறு படிகள் ஏற் சக்திகிரீசுவரர் சந்நிதியை அடைகிறோம். முதலில் நாம் காண்பது மகா மண்டபமாகும். இதில் வடக்குப் பகுதியில் தெற்கு நோக்கி அமைந்த சந்நிதியில் அன்னை பராசக்தி எழுந்தருளியுள்ளாள். இவளை சத்திய தயாக்ஷி என்கின்றனர். சகிதேவி என்பது இப்போது வழங்கும் பெயராகும்.

இங்குள்ள மண்டபத் தூண்களில் சண்டீசர் வடிவமும் அவரை வணங்கி மகிழும் கோலத்தில் காசிமடத்து அதிபரின் சிலையும் செதுக்கி அமைக்கப்பட்டுள் ளன. இனி பிராகாரத்தை வலம் வரலாம். பிராகாரத்தில் வலம் வந்து கருவறையில் சக்திகிரீசர் என்னும் பெயரால் அழகிய சிவலிங்கமாகக் காட்சி தந்து கொண்டிருக்கும் சிவபெருமானைக் கண்டு மகிழலாம். கருவறை மீது ஒற்றைக் கலசம் கொண்ட ஸ்ரீவிமானம் அமைந்துள்ளது.

கருவறையைச் சுற்றி திறந்த வெளிப் பிராகாரமும் அதைச் சுற்றி திருமாளிகைப் பத்தி மண்டபமும் உள்ளன. இந்த பக்தி மேடையில் மேற்கில் விநாயகர், சுப்பிரமணியர், காசிவிசுநாதர், மகாலட்சுமி ஆலயங்கள் உள்ளன. வடக்கு பிரகாரத்தில் கோமுகிக்கு அருகில் சிறிய சந்நிதியில் சண்டேசுவரர் எழுந்தருளியுள்ளார்.

ஒவ்வொரு மாதமும் உத்திரநாளில் சண்டேசுவரருக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. மீனராசியில் பிறந்தவர்கள் இத்தலத்தில் வழிபட்டால் மேன்மைகள் கிடைக்கும் என்கின்றனர்.

இக்கோயிலையும் இதன் அருகே அமைந்துள்ள பெருமாள் கோயிலையும், ஸ்ரீகிருஷ்ணப்பிரேமி சுவாமிகள் பெரும் பொருட்செலவில் திருப்பணிகள் செய்துள்ளார். தினப்பூசைகளுக்கு வேண்டி ஏற்பாடுகளையும் கவனித்து வருகின்றார். இவ்வூரில் பிறந்த சுவாமிகள் இவ்வூர் கோயில்களைத் திருப்பணி செய்ததுடன் கிராம முன்னேற்றத்திற்கும் பெருந்தொண்டாற்றி வருகின்றார்.



சேங்கனூர் (சேய்ஞலூர்) சிவாலயத்திலுள்ள சண்டீஸ்வரர்.இவர் சிவபெருமானைப்போல வலது காதில் மகரகுண்டலத்தையும் இடது காதில் குழையையும் அணிந்திருப்பது வேறெங்கும் காணமுடியாத காட்சியாகும்.

Koviloor Digital Library

முருகப்பெருமானால் வேதம் வல்ல பிராமணர்களுக்குத் தானமாக வழங்கப் பட்ட சேய்ஞலூர் காலங்காலமாக ஞானபூமி யாகவே விளங்கி வருகிறது. சைவ சமய நாயன்மார் தோன்றி முத்தி பெற்ற தலமாக இருப்பதைப் போலவே வைணவ சமயத் தில் பெரும் ஞானியாகத் திகழ்ந்த பெரிய வாச்சான்பிள்ளை அவதரித்த தலமாகவும் இருக்கிறது.

சண்டேசுவர நாயனார் அவதரித்த தலத் தைத் தரிசித்த நாம் அவர் முக்தி பெற்ற தல மான திருஆப்பாடிக்குச் செல்லலாம். திருஆப்பாடி சேங்கனூருக்கு அருகிலேயே உள்ளதாகும்.

கும்பகோணத்திலிருந்து வருபவர்கள் முதலில் சாலைக்கு வடக்கில் அமைந் துள்ள சேங்கனூருக்குச் சென்று சத்தியகிரீசப் பெருமானையும் முருகனையும் சண்டீசுவ ரையும் திருமலை வரதனான ஸ்ரீநிவாச பெரு மாளையும் வணங்கிய பிறகு மீண்டும் முதன்மைச் சாலைக்குச் சென்று மேலும் சிறிது தூரம் சென்றால் சாலையோரத்தி லேயே அமைந்துள்ள ஆப்பாடியை அடை யலாம்.

சாலையோரத்தில் அமைந்துள்ள மாரி யம்மன் கோயிலை ஒட்டித் தெற்கு நோக்கிச் சென்றால் சுமார் 1 கி.மீ. தொலைவில் ஆப் பாடியார் சிவாலயம் உள்ளது. (முதன்மைச் சாலையின் வடபுறம் சேங்கனூரும் தென் புறம் ஆப்பாடியும் உள்ளன.)

ஆலயத்தின் முன்புறத்தில் கோபுரமற்ற நுழைவாயில் உள்ளது. வாயிலின் மீது இடபாரூடர் வடிவமும், அவர் சண்டீசரை வணங்கி மகிழ்வதும் கோலமும் அழகிய சுதைச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள் ளன.

வாயிலின் இடப்புறம் சிறிய வளை வுக்குள் தட்சிணாமூர்த்தியின் கல்திருமேனி நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இவரை வணங்கி வாயிலைக் கடந்து உட்சென்றால் பெரிய முற்றத்தை அடைகிறோம். இதில் நந்திதேவர், பலிபீடம் ஆகியவை உள்ளன. இவரை வணங்கி உட்சென்றால் பெரிய மண்டபம் உள்ளது. மண்டபத்தின் வடக் கில் தெற்கு நோக்கியவாறு அம்பிகை பெரிய நாயகியின் சந்நிதி உள்ளது.

இவளை வணங்கி மேலும் உள்ளே சென்றால் மகாமண்டபத்தை அடைகி றோம். இங்கு மகாமண்டபத்தில் தெற்கு நோக்கியவாறு சண்டேசுவரர் எழுந்தருளி யுள்ளார்.

வழக்கமாக கருவறையின் வட கிழக் கில் சிறிய கோயிலில் எழுந்தருளும் சண்டேசுவரர் இங்கு மகாமண்டபத்தில் எழுந்தருளுகின்றார். கருவறையில் தீபாரா தனை செய்த உடன் இவருக்கு வழிபாடு செய்வது வழக்கம்.

இது சண்டீசர் முத்தி பெற்ற தலம் என்பதால், சிவபெருமானுக்குப் பூசை முடிந்ததும் இவருக்கு வழிபாடு செய்வதா கக் கூறுகின்றனர்.இவரை வணங்கி, கருவறையில் எழுந்தருளி இருக்கும் ஆப்பாடியார் என்னும் பெயரில் விளங்கும் சிவபெருமானை வணங்கி மகிழலாம். பிராகாரத்தில் விநாயகர், முருகர் சந்நிதிகள் உள்ளன.கருவறை முன்னுள்ள மகாமண்ட பத் தில் உலாத்திருமேனிகள் எழுந்தருளி யுள்ளனர். இது திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்பெற்ற திருத்தலமாகும்.

இத்தலத்தில் மகாசிவராத்திரிக்கு மறு நாளான அமாவாசை நாளில் சண்டேசுவர ருக்குத் **தொண்டர்கள் நாயகமாகப் பட்டாபிஷேகம் செய்யும் விழா** நடைபெற்றதாகக் கூறுகின் றனர்.

திருஆப்பாடியும் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலமே ஆகும்.

Koviloor Digital Library

திருமுறை நூல்களில் சண்டேசுவரர்

*[முனைவர் திரு.சேதுராமன் அவர்கள் **தேவாரத்தில் தொன்மம்** என்ற நூலில், தேவாரத்துள் இடம் பெற்றுள்ள சண்டேசுவரரின் வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்தளித்துள்ளார். அவை இங்கே இடம் பெறுகின்றன.]*

சைவ சமயம் மறுமலர்ச்சியுடன் புத்துணர்ச்சி பெற்றுப் பொலிவு பெறத் தொடங்கிய காலம் தேவாரம் தோன்றிய காலமாகும்.


அந்நாளில் தமிழகத்தின் வடபகுதியைப் பல்லவர்களும், காவிரிக்குத் தெற்கேயுள்ள தென்தமிழகத்தைப் பாண்டியர்களும் ஆண்டு வந்தனர். இவ்விரு மன்னர்களுமே சமண சமயச் சார்புடையவர்களாக இருந்தனர். காலம் அறிய முடியாத காலத்தில் தோன்றிய சைவசமயம் இடைக்காலத்தில் களப்பிரர்கள் ஆட்சியில் தளர்ச்சியுற்றுத் தன் பெருமை மங்கியிருந்தது. அதைப் போற்றி மீண்டும் பொலிவுபெறச் செய்தவர்கள் தேவார மூவராவர்.

தேவாரத்தை அருளிச் செய்த திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர்களுடைய காலங்களுக்கு முன்பாகவே வாழ்ந்து இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர் சண்டேசுவர நாயனார், காரைக்கால் அம்மையார் , கண்ணப்பர் முதலியோராவர்.

தேவாரத்தை அருளிய மூவருமே சண்டீசரைப் பெருமைப்படுத்திப் போற்றிப் புகழ்ந்து உரைத்துள்ளனர்.

இவர்களின் திருவாக்கு மூலம் விசார சருமராக இருந்த சண்டேசுவரர் ஆத்தி மரத்தின்கீழ் வெண்மணலைக் கூட்டி சிவலிங்கம் அமைத்தது, அதை ஆவின் பாலால் அபிஷேகம் செய்தது, அந்த மணல் லிங்கத்தினைப் பலவிதமான மலர்களால் அர்ச்சித்து வழிபட்டு வந்தது.

அதை அறிந்த அவரது தந்தை அதைக் காண, குராமரத்தின் மேல் ஒளிந்திருந்து



Koviloor Digital Library

பார்ப்பது, அவன் விசாரசர்மர் சிவபூசைக்கு வைத்திருந்த பாற்குடங்களைக் காலால் இடறியது;

விசாரசர்மர் வெகுண்டு அருகிலிருந்த கோலை எடுக்க, அது மழுவாகி, தந்தையின் கால்களை வெட்டியது, அவன் அலறி வீழ்ந்து மாள்வது;

இறைவன் விசாரசர்மரைஅழைத்துச் சண்டீசன் என்னும் பெயர் சூட்டுதல், சிவனடியார்களுக்குத் தலைவனாகவும், அணுக்கத் தொண்டனாகவும் இருக்கும் பேற்றை அருளியது, அதை உறுதிப்படுத்தத் தன் தலையில் சூடியிருந்த கொன்றை மாலையை எடுத்து அவருக்குச் சூட்டியது, அவர் திருமேனியைத் தடவி மேன்மை அடையச் செய்தது முதலான செய்திகளை அறிய முடிகிறது.

இனி, இவற்றைத் தேவாரத் தொடர்கள் மற்றும் அதன் விளக்கங்கள் மூலம் காணலாம்

இறைவன் சண்டிக்கு அருளிய தன்மையை யாரும் அறிய இயலாது. அதை மற்றவர் சொல்லக் கேட்டுத் தான் கூறுவதாகத் திருஞானசம்பந்தர் திருப்பாசுரப் பாடலில்,

கடி சேர்ந்த போது மலர்ஆன
கைக் கொண்டு, நல்ல
படி சேர்ந்த பால்கொண்டு,
அங்கு ஆட்டிட, தாதை பண்டு
முடிசேர்ந்த காலை அற வெட்டிட,
முக்கண்மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம்[ம்] அறிவார்
சொலக் கேட்டும் அன்றே!

என்று குறிப்பிடுவதால் அறியலாம்.

ஆவின் பாலினால் திருமஞ்சனம் ஆட்டிச் சண்டீசர் இறைவனைப் பூசித்த போது அவர் தந்தை பாற்குடங்களை இடற, அவரது தாளைத் தடிந்த சண்டீசருக்கு இறைவன் தலைமைப் பதவி அளித்தமையை,

பீர் அடைந்த பால்அது ஆட்ட,
பேணாது, அவன்தாதை
வேர் அடைந்து பாய்ந்த தாளை
வேர்த் தடிந்தான் தனக்குத்
தார் அடைந்த மாலை சூட்டித்
தலைமை வகுத்தது என்னே..
சீர்அடைந்த கோயில் மல்கு
சேய்ஞலூர் மேயவனே.

என்றும், மணலால் இலிங்கம் தாபித்துப் பூசித்து ஆவின் பாலைச் சொரிந்த போது பாலினைத் தந்தை காலால் இடறியமையைச் சாடியமையும், சிவபெருமான் சண்டீசன் என்ற உயர்ந்த சண்டீசப் பதம் அளித்து, கொன்றை மாலையைச் சூட்டி அருளியமையையும்,

வந்த மணலால் இலிங்கம் மண்ணி
யின்கண் பால்ஆட்டும்
சிந்தை செவ்வோன்தன் கருமம்
தேர்ந்து சிதைப்பான்வரும் அத்
தந்தைதனைச் சாடுதலும்,
சண்டீசன் என்று அருளி,
கொந்து அணவும் மலர் கொடுத்தான்..
கோளிலி எம்பெருமானே என்றும்,

சண்டீசருக்குச் சிவபெருமான் தன் எழில் மாலையும் போனகமும் (உணவு) அளித்தமையை,

எண்திசையோர் மகிழ, எழில் மாலையும்
போனகமும், பண்டு,
சண்டி தொழ அளித்தான் அவன்...என்றும்,

சிவபெருமான் தன் திருக்கைகளால் சண்டியின் ஆகம் தடவி, தெய்வ வடிவம் ஆக்கியமையை,

சென்று தாதை உகுத்தனன் பாலையே
சீறி, அன்பு செகுத்தனன்பாலையே

Koviloor Digital Library

வென்றி சேர் மழுக்கொண்டு, முன் காலையே,
வீட வெட்டிடக் கண்டு, முன்காலையே,
நின்ற மாணியை ஓடின கங்கையால்
நிலவ மல்கி உதித்து, ஆகம் கையால்,
அன்று நின் உருஆகத் தடவியே!
ஆலவாய், அரன்நாகத்து அடவியே.

என்றும் திருஞானசம்பந்தர் போற்றிப் புகழ்வர்.

இவ்ஆலவாய்த் திருஇயமகப் பதிகப் பாடல் அடிகளுக்கு,

முன்னொரு காலத்தில் விசாரசருமனுக்குத் தந்தையாகிய எச்சதத்தன் போய் இலிங்கத்தின் திருமஞ்சனத்திற்கு வைத்திருந்த பாலைக் கீழாகக் கவிழ்த்தனன். அன்போடு செய்யும் சிவபூசையைக் கோபித்து, அழித்த, தன் தந்தையை வியக்கத் தக்க வகையில் வெற்றி தரும் மழு ஆயுதத்தால் முன்கால் துண்டித்து விழுமாறு வெட்டியதனைப் பார்த்து,

அங்ஙனம் வெட்டிய பிரமசாரியான விசாரசருமனை, பரந்த கங்கையோடு எல்லாச் சிறப்புக்களும் நிறைந்து விளங்க இடப வாகனத்தில் தோன்றி, தன் பாவம் அற்ற தூய கைகளாலே, அந்நிகழ்ச்சி நடந்த அன்று, புனித வடிவினை விடுத்துத் தெய்வ வடிவம் உறுமாறு தடவினவனே! ஆலவாயில் அமர்ந்த சிவபெருமானே! உன் உடம்பில் அணியும் மாலை முதலியவற்றையும், உனக்கு என்று சமைத்து நிவேதித்த உணவையும் அருளினாய் என்று கூறுவர்.

சிவபெருமான் சண்டிக்கு அருளிய திறங்களை,

நிறைந்த மா மணலைக் கூப்பி,
நேசமோடு ஆவின் பாலைக்
கறந்து கொண்டு ஆட்டக் கண்ட
கறுத்த தன் தாதை தாளை
எறிந்த மாணிக்கு அப்போதே எழில்
கொள் தண்டீசன் என்னச்
சிறந்த பேறு அளித்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே

சண்டீசருக்குச் சிவபெருமான் கொன்றை மாலையை ஈந்தமையை,

ஆ மலி பாலும் நெய்யும் ஆட்டி
அர்ச்சனைகள் செய்து
பூ மலி கொன்றை சூட்டப் பொறாத தன்
தாதை தாளைக்



பெரிய புராண நூலொன்றில் இடம் பெற்றுள்ள சண்டீஸ்வரர் வரலாற்றை விளக்கும் ஐதீகக் கோட்டோவியம்

Koviloor Digital Library

கூர்மழு ஒன்றால் ஓச்ச, குளிர் சடைக்
கொன்றை மாலைத்
தாமடம் நல் சண்டிக்கு ஈந்தார்
சாய்க்காடு மேவினாரே என்றும்,

சண்டிக்குச் சிவபெருமான் அமுதம் ஈந்தமையை,

தழைத்தது ஓர் ஆத்தியின்கீழ்த்
தாபரம் மணலால் கூப்பி,
அழைத்து அங்கே ஆவின் பாலைக்
கறந்துகொண்டு ஆட்டக் கண்டு
பிழைத்த தன் தாதை தாளைப் பெருங்
கொடுமழுவால் வீசக்
குழைத்தது ஓர் அமுதம் ஈந்தார்
குறுக்கை வீரட்டனாரே

என்று போற்றுவர். மேல் நிறைந்த மா எனத் தொடங்கும் பாடலில் இடம் பெறும் தண்டீசன் சண்டியைக் குறிக்கும் சண்டி - தண்டி - ஒரு பொருள் நீர்மைய.

மேலும், திருநாவுக்கரசர் வஞ்சப் புகழ்ச்சி அணியில்,

கரும்பு பிடித்தவர் காயப்பட்டார்;
அங்கு ஓர் கோடலியால்
இரும்பு பிடித்தவர் இன்பு
உறப்பட்டார்; இவர்கள் நிற்க

என்று இரும்பினும் மென்மையான கரும்பு வில்லைப் பிடித்த காமன் நீறாகியமையும், இரும்பு பிடித்த சண்டி உயர் பதவி அடைந்தமையும் பாடுவர்.

சிவபெருமான் சண்டிக்குக் கொன்றை மாலை ஈந்த சிறப்பினை,

கோ தனங்களின் பால் கறந்து ஆட்டக்
கோல வெண்மணல் சிவன்தன் மேல் சென்ற
தாதை தாள் அற அறிந்த தண்டிக்கு உன்
சடைமிசை மலர் அருள்செயக் கண்டு,
பூதஆளி! நின் பொன்அடி அடைந்தேன்--
பூம்பொழில் -- திருப்புன்கூர் உளானே!

எனவும்,

சண்டியை அண்டர்கள் யாவரும் தொழுதமையை,

இண்டைமலர் கொண்டு,
மணல்இலிங்கம்அது இயற்றி,
இனத்து ஆவின் பால் ஆட்ட,
இடறிய தாதையைத் தாள்
துண்டம் இடு சண்டி அடி அண்டர்
தொழுது ஏத்தத்தொடர்ந்து

அவனைப் பணிகொண்ட விடங்கன் எனவும், சண்டியைச் சிவபெருமான் தம்மோடு வைத்துக் கொண்டமையை,

தஞ்சம் கொண்டார்,அடிச்சண்டியை, தாம்
என வைத்து உகந்தார் எனவும்,

சிவபெருமானுக்குச் சாத்திய ஆடை, அணிகலன், மணிமாலை ஆகியனவும், இறைவனுக்கு நிவேதித்த உணவும் சண்டீசர் பெற்று உய்ந்தமையை,

அணிகொள் ஆடை,அம்பூண், மணிமாலை
அமுதுசெய்த அமுதம் பெறு சண்டி;

என்றும், சுந்தரர் புகன்றுள்ளார்.

சண்டீசருக்கும் அடித்தொண்டர் ஆவர் சுந்தரர் என்ற கருத்தினைத் திருத்தொண்டத் தொகைப் பதிகத்துள்,

மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க,
வெகுண்டு எழுந்த
தாதைதாள் மழுவினால் எறிந்த,
அம்மையான் அடிச்சண்டிப்
பெருமா னுக்கு அடியேன்;
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே

என்று சண்டிக்கு இறைவன் அருள்புரிந்த சிறப்புக்களை சுந்தரர் போற்றிப் புகழ்வர்.

மூவர் முதலிகளைத் தொடர்ந்து திருமுறை ஆசிரியர்களும், பின்வந்த சமய இலக்கியம் அருளிய சான்றோர்களும் தத்தம் நூலில் சண்டீசரைப் பலவாறுபோற்றியுள்ளனர்.

Koviloor Digital Library

அறுபத்துமூவர் வரிசையில் சண்டேசுவரர்

சிவனடியே சிந்தித்துத் தமது செயற்கரிய செயலால் சிவன் சேவடியை அடைந்த பெருமக்கள் நாயன்மார்கள். அவர்களில் அறுபதின்மரை வரிசைப்படுத்திப் பட்டியலிட்டுத் **திருத்தொண்டத் தொகை** என்னும் நூலாக அருளிச் செய்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

அந்த திருத்தொண்டத் தொகை நூலை சற்று விரித்து அதில் கூறப்பட்டுள்ள நாயன்மார்கள் பற்றிய செய்திகளைத் **திருத்தொண்டர் திருவந்தாதி** எனும் பெயரில் அழகிய நூலாக அருளிச் செய்தவர் நம்பியாண்டார் நம்பிகள்.

சுந்தரரின் திருத்தொண்டத் தொகையையும், அதன் விரிநூலான திருத்தொண்டர் திருவந்தாதியையும் துணை கொண்டு அடியவர்கள் வரலாற்றைத் திருத்தொண்டர் மாக்கதை எனும் பெயரில் பெரிய புராணமாகப் பாடியவர் குன்றத்தூர் சேக்கிழார் சுவாமிகள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்துள் பல இடங்களில் சண்டீசர் வரலாற்றை விரிவாகக் குறித்துள்ளார். திருப்புன்கூர் பதிகத்தில்,


தழைத்ததோர் ஆத்தியின் கீழ்த்
தாபரம் மணலால் கூப்பி
அழைத்து எங்கே ஆவின்
பாலைக் கறந்துகொண்டு ஆட்டக்கண்டு

என வரும் தொடர்களால் இதை அறியலாம்.

அவர் திருத்தொண்டத்தொகையில்
மெய்மையே திருமேனி வழிபடநிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள்
மழுவினால் எறிந்த அம்மையான் அடிச்
சண்டிச் பெருமா னுக்கு அடியேன்

என்று குறித்துள்ளார். இதிலும் ஓரளவு அவரது புராணம் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

விரிநூலான திருத்தொண்டர் திருவந்தாதியில்



சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் ஆலய ராஜகோபுரத்தில் இடம் பெற்றுள்ள சண்டீஸ்வரர் வரலாறு

Koviloor Digital Library

குலம் ஏறிய சேய்ஞ்ஞு லூரில் திரைகடல்
தலம்ஏறிய விறல் சண்டிகண்டீர் தந்தைதாள் இரண்டும்
வலம் ஏறிய மழுவால் எறிந்தான் மணிமுடிமேல்
நலம் ஏறிய பால் சொரிந்தார் சூட்டி நன்னிதியே

என அவரது வரலாற்றுக் குறிப்புக்களை நம்பியாண்டார் நம்பிகள் குறித்துள்ளார்.

இவற்றைத் தொடர்ந்து பாடப்பட்ட பெரிய புராணத்தில் சண்டேசுவரர் வரலாறு விரிவாக 59 பாடல்களில் குறித்துள்ளார். அறுபத்து மூவர் வரிசையில் 20-ஆவது நாயன்மாராக சண்டேசுவரர் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறார். தலையில் மகுடம் விளங்க தோளில் மழுவைச் சாய்த்துக் கொண்டு கூப்பிய கரங்களுடன் காட்சியளிக்கின்றார்.


பெரியபுராணத்தைத் தொடர்ந்து வந்து பெரிய புராணசாரம்,பெரியபுராண வசன நூல்கள் ஆகியவற்றிலும் சண்டீசர் வரலாற்றைக் காண்கிறோம். ❀

திருமந்திரத்தில் சண்டேசுவரர்

தமிழ்வேதமான பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகத் திகழ்வது திருமந்திரமாகும். அதில் இரண்டாம் தந்திரத்தில் லிங்கபுராணம் என்னும் பகுதியில் ஆறு பாடல்களை அருளிச் செய்துள்ளார். முதல்பாடலில் அம்பிகை சிவலிங்க பூஜை செய்தது, மூன்றாம் பாடலில் தன்னை வணங்கிய திருமாலுக்கு சக்ராயுதத்தையும் பிரம்ம தேவனுக்கு வாளாயுதம் அளித்தது, நான்காம் பாடலில் இராவணனுக்கு அருள்செய்தது, ஐந்தாம் பாடலில் சண்டேசுவரருக்கு மாலை அளித்தது ஆறாம் பாடலில் தேவர்கள் நமவென்று பணிந்தபோது மேன்மை பெருக என்று அருள் செய்தது ஆகிய செய்திகளைக் குறித்துள்ளார்.

சிவனருளே மேன்மை தரும் என்று அறிந்தவனாகிய தண்டி சிறந்த மணலைக் கூட்டி சிவலிங்கம் அமைத்து ஐவகை பசுக்களின் ஐவகைப் பொருளால் அபிஷேகம் செய்யும்போது அவனது தந்தை பூஜையைக் காலால் சிதைக்க, கோபம்கொண்டு சிறுமழுவால் வெட்டினான். சிவபெருமான் அங்கு வெளிப்பட்டு அவனுக்கு மாலை அணிவித்து அருள்புரிந்தார் என்பது திருமூலர் தரும் செய்தியாகும். ❀

திருவாசகத்தில் சண்டேசுவரர்



மாணிக்கவாசகப் பெருமான் தில்லையில் அருளிய திருவாசகப் பகுதியான திருத் தோள் நோக்கம் என்பதின் ஏழாம் பாடலில்...

தீதில்லை மாணி சிவகருமம் சிதைத்தானை
சாதியும் வேதியன் தாதை தன்னை தாள் இரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர் தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்.

என்று சண்டீசர் வரலாற்றைக் குறித்துள்ளார். இதில் குற்றமற்றவனாகிய விசாரசர்மன் வேதியனான காதையில் தாள்களை வெட்டிய போது அப்பாதத்திற்கு பரிசுபோல் ஈசன் தேவர்கள் தொழும்படியான மேன்நிலையை அளித்தான் என்று போற்றுவகைக் காண்கிறோம். ❀

Koviloor Digital Library

தலபுராணங்களில் சண்டேசர் துதிகள்

பதினெட்டுபுராணங்களைத் தொடர்ந்து எழுந்தவை தலபுராணங்கள் ஆகும் இப் புராணங்கள் குறிப்பிட்ட ஒரு தலத்தின் பெருமைகளை விளக்க எழுந்தவையாகும். தலபுராணங்களில் அத்தலத்தில் பெருமான் கோயில் கொண்ட வரலாறு, அவரை முனிவர்கள் அரசர்கள்,மக்கள் போன்றவர்கள் வழிபட்டுப் பேறு பெற்ற வரலாறு, அத்தலத்திலுள்ள தலமரத்தின் சிறப்புக்கள், தீர்த்தங்களின் மகிமைகள் போன்றவற்றை விவரமாகக் கூறுவன ஆகும்.

இத்தலபுராணங்களின் தொடக்கத்தில் தெய்வங்களைப் போற்றும் துதிகள் இடம் பெற்றுள்ளன. விநாயகர், தலத்து இறைவன், இறைவி, சுப்பிரமணியர், நால்வர், சந்தானக் குரவர் போன்றவர்களுக்குத் துதிகள் கூறப்பட்டுள்ளன.


இவ்வரிசையில் சில தலபுராணங்களில் சண்டீசருக்கும் துதி சொல்லப் பட்டுள்ளது. இவ்வகையில் சேது புராணம் திருவாரூர் புராணம், மச்ச புராணம், செவ்வந்தி புராணம், விநாயகபுராணம் திருத்தணிகை புராணம், பேரூர் புராணம், திருவாசகர் புராணம், பூவாளூர் புராணம், திருஆப்பனூர்புராணம், அவிநாசி புராணம், முதலான புராணங்களில் சண்டேசுவரர் துதி சொல்லப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

குற்றால புராணம், திருப்பெருந்துறைப் புராணம் ஆகிய புராணங்களில் சொல்லப்பட்டுள்ள துதியை இங்கே காணலாம்.(சிவபெருமானின் பெருமைகளைப் பேசும் புராணங்களில் இருந்து அவற்றிலுள்ள துதிப்பகுதியில் சொல்லப்பட்டுள்ள, பாடல்களைத் தொகுத்து சிவ புராணாதி தோத்திர மஞ்சரி என்னும் நூல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் வெளியாகியுள்ள பாடல் இதுவாகும்)

திருக்குற்றாலப் புராணத்தில்
சண்டீசர் துதி

தான் பிறந்த தந்தையையும்
இனிப்பிறக்கும்நிந்தையையும்
தடிந்த சேய்என்
நான் பதங்கு மழவிடைமேல்
ஒருவரை அழைத்து
இடஇருவர் உயர்ப்ப ஏகி
கான் பொலி அரிபிரமாதியர்க்கும்
ஏய்தா இருக்கைஎய்திக்
கடவுள்சேடம்
வான் புலவர் பெறாப் பேறு
பெற்றவனை நற்றவனை
வழுத்தல் செய்வாம்

சிவ அபராதம் செய்த தன் தந்தையையும், அதனால் தனக்கு உண்டான நிந்தனை



Koviloor Digital Library

களையும் அழித்து, இடபவாகனத்தில் சிவபெருமானை வரும்படி அழைத்து திருமால், பிரமன் முதலியவர்களுக்குக் கிடைக்காத உயர்ந்த சண்டபதத்தைப் பெற்ற கடவுளின் சேடத்தை உண்ணும் பெரும் பேற்றைப் பெற்று, வானவர்க்கும் கிடைக்காத பெரும்பேற்றை அடைந்த நல்ல தவத்தினை உடைய சண்டீசப் பெருமானை வணங்குவாம்.

திருப்பெருந்துறை புராணத்தில்
சண்டேசர் துதி

ஆத்திமுதல் இடைஇல்லா
ஆத்திதன் தாபத்தே
ஆத்திகமும் பாலாட்டி வழிபடும்
கால் அடுபவம் போல்
ஆத்தியக்கம் என்றறுப்பான்
அடிஅறுத்து விடைமேல்
ஆத்தியொடு ஆத்தனைக் கண்டு
அமர்ந்தபிரான் பதம் பணிவாம்.

தோற்றம் - நடு - முடிவு இல்லாத சிவ லிங்கத்தை நிறுவி, ஆவின் பாலால் வழி படும் வேளையில், தொடர்ந்து வரும் பவ வினைபோல், வந்தவனை வெட்டி, விடை மேல் உமாதேவியுடன் தோன்றும் அத்தனைக் கண்டு அவன் திருவடியில் அமர்ந்த பிரானான சண்டீசரின் திருவடிகளைப் போற்றுவோம்.

(திருப்பெருந்துறையில் நந்திதேவர், துவார பாலகர், சண்டீசர் போன்றவர்கள் இல்லா விட்டாலும், புராண மரபுப்படி தொடக்கத்தில் அமையும் கடவுள் வாழ்த்தில் அவர்கள் பாடப்பட்டுள்ளனர்) ❀

சண்டேசுவரரைப் பற்றுமா பிரம்மஹத்தி...

பாடல் பெற்றபதி ஒன்றின் சிறப்புக்களை விளக்கும் வகையில் அண்மைக் காலத்தில் சிறிய நூல் வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலில் தன் தந்தையின் கால்களை வெட்டியதால், சண்டிகேசுவருக்குப் பிரம்மஹத்தி தோஷம் பற்றியதாகவும்,அவர் பல இடங்களுக்குச் சென்று வழிபட்டும் அது தீராது பெருந்துன்பம் தந்தது என்றும், இறுதியில் இவ்விடத்திற்கு வந்து வழிபட்டபோது அது ஏற்படும் நீங்கியதாகவும் குறிப்பிடப்பட்டு உள்ளது. இது சரியானதல்ல.

இந்தக் குறிப்பை எழுதியவர் புராண வரலாறு அறியாதவர் என்று தோன்றுகிறது. சண்டீசர் சிவபூசை செய்யும் வேளையில் பாற்குடங்களை இடறி, இடையூறு செய்த எச்சதத்தனை தனது குரு என்றும், தந்தை என்றும், பாராமல் அவனது காலை வெட்டி வீழ்த்தினார். அக்கணத்திலேயே சிவபெருமான் சண்டீசரை ஆட்கொண்டார்.

தன் தலைமீதிருந்த கொன்றை மாலையை எடுத்து அவருக்கு சூட்டித் தமது தொண்டர்களின் தலைவனாக இருக்கும் பொறுப்பையும் அளித்தார். அதனால் அவரை எந்தப் பாவமும் பற்றித்தொடரவில்லை என்பதே சரியானது. இதனாலேயே அடியவர்கள் இவர் செய்தது பாதகம் என்றாலும் அதற்குச் சிவபெருமான் போனகமும் பொற் கோயிலும் பரிசளித்ததை பெரிதும் போற்றிப் பாராட்டுகின்றனர். திருப்பல்லாண்டில் சேந்தனார் , " *பாதகத்திற்கே பரிசு வைத்தானுக்கு பல்லாண்டு கூறுதுமே* " என்று போற்றுவதைக் காண்கிறோம். ❀

Koviloor Digital Library

சண்டீசர் வரலாற்றால் பெறப்படுவது

உலகில் தெரிந்தோ தெரியாமலோ பாவங்களைச் செய்வதால், உயிர்களைத் தீவினைகள் சூழ்ந்து அதற்குக் கேடு தருகிறது. நன்மை செய்தால் அதன் பலன் பெருகிக் கோடி நன்மையாகிச் சுகம் தருவது போலவே, பாவமும் பல்கிப் பெருகி உரிய காலத்தில் உடன் வந்து துன்பத்தைத் தருகிறது. நீதி நூல்கள் மக்கள் செய்யும் பாவங்களைப் பட்டியலிட்டு அவற்றிலிருந்து விலகியிருக்கும்படி மக்களை வலியுறுத்துகின்றன.



காதுகளில் குழை, தோடுடன் காட்சி தரும் அருள்நிறை சண்டீஸ்வரர்

பாவங்களில் பெரும்பாவமாகக் கருதப் பபவை வேதம் வல்ல அந்தணனைக் கொல்வதாகும். அதனால் உண்டாகும் பிரம்மஹத்தி தோஷம் அவனை மட்டுமல்லாது, அவனைச் சார்ந்தவர்களையும் துன்பப்படுத்துகிறது. அதுபோல் குருவைக் கொல்பவன், மாதா, பிதாக்களைக் கொல்பவன் முதலானவர்கள் கொடிய பாவியாகக் கருதப்படுகின்றனர்.அவர்கள் மரணத்திற்குப் பின் கடும்நரகத்தில் வீழ்ந்து கொடுந் துன்பங்களை அனுபவிப்பார்கள் என்று சாத்திர நூல்கள் கூறுகின்றன.

இந்த மூன்று பாவங்களையும் ஒரே சமயத்தில் செய்தவர் சண்டீசர். தனது பிதாவும், தனக்கு வேதங்களை உபதேசித்த வகையில் குருவாக இருப்பவனும், மறையோனுமாகிய எச்சதத்தனை அவர் மழுவால் வெட்ட அவன் மாண்டு போனான்.

அதனால் மும்மடங்கு பாவம் அவரைப் பற்றியிருக்க வேண்டுமல்லவா? ஆனால், அவை ஏதும் அவரைப் பற்றவில்லை. அதற்கு மாறாக, உடனே சிவ தரிசனம் கிடைக்கப் பெற்றார்.

மேலும் சிவனால் தழுவப் பெற்று, அவரால் மகனாக ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு, அவரது தலைமீது சூடியிருந்த கொன்றை மலராலான இண்டை மாலையை எடுத்துச் சூட்டப்பட்டார்.

இப்படி பாவமே புண்ணியமானது எதனால் என்றால் அது அவரது ஒப்பற்ற சிவபூசையால் ஆகும்.

Koviloor Digital Library



அருள்நிறை சண்டீஸ்வரர்

தந்தை, குரு, வேதியன் என்ற மூன்று நிலைகளிலும் இருந்த அவனைக் கொன்றிருந்தாலும் அவரைப் பாவம்சூழவில்லை.அந்தப் பாதகத்திற்குத் தண்டனை பெறுவதற்குப் பதிலாக இறைவனால் மகனாக ஏற்றுக் கொள்ளப்பட்டார் சிவபெருமானால் அவருக்குப் போனகமும் பொற் கோயிலும் தரப்பட்டன.

இதைக் குறிக்கும் வண்ணம் சிவபெருமானை **சண்டியின் பாதகத்திற்கே பரிசு வைத்தவன்** என்று திருப்பல்லாண்டில் பாடுகிறார் சேந்தனார்.

சிவபூசைக்கு இடையூறு செய்பவன், அந்தணன் ஆயினும், பிதாவாயினும், குருவாயினும் வேறு எவராயினும்அவரைக் கடுமையாக தண்டிக் கலாம். அப்படி தண்டிப்பதால் எவ்வித பாவமும் நம்மை அணுகாது என்பதே சண்டீசர் வரலாறு தரும் செய்தியாகும்.

சோழமன்னர்கள் கோயில் சொத்துக் களைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் அதற்குரிய தெய்வமாகச் சண்டீசரையே கொண்டாடினர். கோயில் சொத்துக்களைக் கொள்ளையிட்டவர்களையும், அபகரித்தவர்களையும் நிர்வாகத்தை ஏமாற்றி அனுபவிப்பவர்களையும் கடுமையாகத் தண்டித்தபோது அப்பாவம் தம்மைச் சேராது என்றும் அவை சண்டீசர் பணியால் நீங்கும் என நம்பினர்.

அதனால் எல்லாவற்றிற்கும் காவலராக அவரை அமைத்து வழிபட்டனர். உறுதி மிக்க சிவவழிபாட்டிற்குத் தொல்லை நேரும் போது அதை விலக்கச் செய்யும் பாவமும் புண்ணியமாகிப் பலன் தரும் என்பதே சண்டேஸ்வரர் வரலாறு காட்டும் பாடமாகும் . ❀

பஞ்சாயதன பூஜையில் சண்டேஸ்வரர்

சிவன், திருமால், அம்பிகை, சூரியன், விநாயகர் ஆகிய ஐவரையும் ஒன்றாக வைத்துக் செய்யப்படும் பஞ்சாயதன பூஜையின் முடிவில் நிர்மால்யத்தை எடுத்து **பாண , இராவணேச சண்டிடேச, நந்தி ப்ருங்கி இடபா தயக: மகாதேவ பிரசாதோய சர்வே க்ரணந்து சாம்பவஹ:** என்ற மந்திரத்தை ஓதி நந்திதேவருக்கு நிவேதிக்கின்றனர். பாணன், இராவணன், சண்டேசர், நந்தி ப்ருங்கி, இடபர் ஆகிய அறுவரும் சிவபெருமானனின் பிரசாதத்தை பெறுகிறார்கள் என்கின்றனர். ❀

Koviloor Digital Library

மழு வலன் ஏந்திய வீரன்

தெய்வங்களை அவை ஏந்தும் ஆயுதங்களின் பெயரால் அழைப்பதும் வழக்கம். சிவபெருமான் சூலத்தை ஏந்துவதால் சூலபாணி என்றும், சக்கரத்தை ஏந்துவதால் திருமால் சக்ரபாணி என்றும், கோதண்டம் என்னும் வில்லை ஏந்துவதால் ராமபிரான் கோதண்டபாணி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இவ்வாறே சண்டேசுவரர் மழுவலன் என்றும், மழுவேந்திய மாணிக்கம் என்றும் அழைக்கப்படுகின்றார். இது பற்றிய செய்திகளைத் தொடர்ந்து காணலாம்.

மழு என்பது ஆயுதத்திற்கு மட்டும் இன்றிக் கனன்று சிவந்து உருகும் நிலையில் உள்ள இரும்புக்கும் தீயகலுக்கும் பெயராகும். சிவபெருமானுக்குரிய ஆயுதங்களில் சூலத்திற்கு அடுத்தபடியாக மழு விளங்குகிறது. அவர் அழல் வடிவான மழுவை ஏந்துவதால் மழுவாளன் என்று அழைக்கப்படுகின்றார்.

மழுவினான் உறையும் மழபாடி ,
நெய்யணிகலமொடு நிறைவெண்மழுவும்,
படைநவில் வெண்மழுவான்,

எனவரும் தேவாரத் தொடர்கள் இங்கு சிந்தித்தற்குரியனவாகும். மழுவை ஏந்தியாடும் சிவபிரானின் நடனம் மழு நடனம் எனப்படுகிறது.

சிற்பங்களில் மழுவானது, தலை கனத்த கோடரி போல காட்டப்படுகிறது. கோடரியும் மழுவும் ஏறத்தாழ பார்ப்பதற்கு ஒன்று போல் இருந்தாலும், குணத்தாலும் செயலாலும் வேறுபட்டவை. ஆனால், புலவர்கள் இரண்டையும் ஒன்றாகவே கருதிப் போற்றியுள்ளதையும் காண்கிறோம். கோடரியை வடமொழியில் பரசு என்பர். புலவர்கள் சிவபெருமானை மழுவலன் என்று அழைப்பது போலவே பரசுபாணி என்றும் அழைக்கின்றனர்.

சிவபெருமான் தன்னிடமிருந்த மழுவிலிருந்து ஒரு மழுவைத் தோற்றுவித்து, அதைத் தன்னை நோக்கித் தவம் செய்த ஜமதக்னியின் குமாரனான ராமனுக்கு



ஸ்ரீ பரசுராமன் ஆலந்துறை

Koviloor Digital Library

அளித்தான். அதைப் பெற்றுக் கொண்டது முதல் அவன் பரசுராமன் என்று அழைக்கப் பட்டான். கம்பஇராமாயணத்தில் அவனைப் பரசுராமன் என்று அழைப்பதுடன் மழு வாளன், கனல் மழுவாளன், மழுவுடை யான் என்று குறிப்பதைக் காண்கிறோம். இவற்றின் மூலம் புலவர்கள் பரசு, (கோடரி) மழு ஆகிய இரண்டையும் ஒன்றா கவே கொண்டு பாடியுள்ளதை அறிகிறோம்.

சண்டேசுவரப் பெருமானும் மழு ஏந்தியுள்ளார். அவர் சிவபூசைக்கு ஊறு செய்த தனது தந்தை எச்சதத்தனைத் தண்டிக் கும் பொருட்டு அருகிலிருந்த மாடு மேய்க் கும் கோலை எடுத்தார். (அவர் பசுக்கள் மீது மிகுந்த அன்பு கொண்டவராதலால், பசுக் களை அதட்டி அடிக்கும் கோலை அவர் வைத்திருக்கவில்லை என்றும், அந்த நாளைய பிரம்மச்சாரிகள் ஏந்தும் கோலை யே வைத்திருந்தார் என்றும், அக்கோலை யே எடுத்தார் என்றும் கூறுகின் றனர்)

அந்நிலையில் அவர் சிவனின் அம்ச மான உருத்திரநிலையை அடைந்து விட்டார். அதனாலேயே அவர் கைப்பட்ட மாத்திரத்தில் கோல் சிவாயுதமான மழுவாக மாறி விட்டது. அந்த மழுவால் அவர்,தனது தந்தையான எச்சதத்தனின் கால்களை வெட்டினார். (சிவாயுதம் தன்மீது பட்ட மாத்திரத்திலேயே எச்சதத்தன் புண்ணிய உலகம் சேர்ந்தான்)

சண்டீசர் திருவுருவங்களில் அவரை மழுவுடன் அமைத்து வழிபடுகின்றனர். மூலவர் வடிவங்களில் மழுவை வலக் கரத்தில் ஏந்தி இடது கரத்தை (சிம்ம கர்ண முத்திரை தாங்கியவராக அமைத்துள்ள னர்.)சில வடிவங்களில் கரத்தைத் தொடை மீது வைத்துக் கொண்டிருப்பவராகவும் காட்சியளிக்கிறார்.

மூலவராக அமைக்கும் போது சுகா சனத்தில்வீற்றிருப்பவராக அமைக்கின் றனர். உலாத் திருமேனிகளில் அவர் பெரும் பாலும் நின்ற கோலத்திலேயே காட்சி தருகிறார். கரங்கள் கூப்பியிருக்க வலது தோளில் மழுவாயுதத்தைத் தாங்கியுள்ளார்.

சண்டீசரின் ஆயுதம் மழுவாகும். அவர் மழுவலன் ஏந்திய வீரன் என்று போற்றப் படுகிறார். ❀

சண்டீசர் கௌத்துவம்



நடன உலகில் கௌத்துவம் என்பதும் ஒன்றாகும். பாடல் வரி களோடு ஜதிகளைக் கூறும் சொற்கட்டுகள் இணைத்து, நடன மேடை யில் ஆடுவதற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட இசை நாட்டிய வடிவமே கௌத்துவம் ஆகும். சிவாலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழா வின்போது நவசந்தி கௌத்துவங்கள் என்பன ஆடப்பட்டன. மேலும் பஞ்ச மூர்த்தி கௌத்துவம் என்பதும் தஞ்சைப் பெரிய கோயிலில் வழக் கத்தில் இருந்து வந்துள்ளது. இது சந்திரசேகரர் (சிவன்), திருஞான சம்பந்தர், முருகன், விநாயகர், சண்டிகேசுவரர் ஆகிய ஐவரின் மீது இயற்றப்பட்டதாகும்.

இதிலுள்ள சண்டேசுவரர் கௌத்துவம் வேறெங்கும் காணப்பட வில்லை. இறை இயற்றியவர் தஞ்சை நால்வர் என்று போற்றப்படு பவர்களாவர். ❀

Koviloor Digital Library

ஆத்தி நிழலில் கொன்றை அணியப்பெற்றவன்

பழந்தமிழ் நூல்களுள் ஒன்றான ஆத்திச்சூடி குழந்தைகளுக்கு ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் கற்பிக்கும் நூலாகும். அகர வரிசையில் தொடங்கும் இதன் தொடர்கள் மக்கள் சிறந்த குணத்தைப் பெற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. இந்நூலைப் பாடியவர் தமிழ் மூதாட்டியான ஔவையார்.

இது, அறம் செய விரும்பு, ஆறுவது சினம், இயல்வது கரவேல், ஈவது விலக்கேல், ஏற்பது இகழ்ச்சி, ஐயம் இட்டு உண், ஒப்புரவு ஒழுகு, ஓதுவது ஒழியேல், ஔவியம் பேசேல், அஃகம் சுருங்கேல் என குழந்தைகள் மனதில் ஒழுக்க நெறிகளைப் பசுமரத்தாணிபோல் பதிய வைக்கும் திறம் கொண்டது.

இதைத் தொடர்ந்து எழுந்த நூல் கொன்றை வேந்தன் என்பதாகும். இதுவும் ஔவையாரால் பாடப்பட்டதே ஆகும் ஆத்திச்சூடியைப்போலவே இதுவும் குழந்தைகளுக்கு நல்லறிவை போதிக்கும் நூலாகும். இவை இரண்டும் தொடக்கக் கல்வியில் சமீப காலம் வரை பாட நூல்களாக இருந்தவைகளாகும்.

இந்நூல்களின் பெயர்களான ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் என்ற இரண்டும் சிவபெருமானின் அருட்பெயர்களாகும். ஆத்தி மலர்களையும் கொன்றை மலர்களையும் அவன் விரும்பிச் சூடுவதால் அன்பர்கள் அவனை இப்பெயர்களால் அழைத்து மகிழ்கின்றனர்.

ஆத்திசூடியும், கொன்றை வேந்தனும் சிறுவர்கள் சிந்தனையில் பதிந்து, அவர்களை மேன்மைப்படுத்த உதவுவது போல ஆத்திமர நிழலும், கொன்றை மாலையும் ஒரு சிறுவன் வாழ்வில் மேன்மை அளித்துள்ளன. அவனை சைவ உலகம் போற்றும் 63 நாயன்மார்களுள் ஒருவராக்கியுள்ளது.

அச்சிறுவன் ஆத்திமர நிழலில் வெண் மணலால் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்துவந்தான். அவனது ஒப்பற்ற வழிபாட்டின் மேன்மையை அறியாத அவனது தந்தை அதைத் தடுத்தான்.

சிவ பூசைக்கு இடையூறு செய்ததால் சிறுவன் கோபம் கொண்டு தந்தை என்றும் பாராமல் அவனது காலை வெட்டி அவனை மாளச் செய்தான். அச்சிறுவன் தனது வழிபாட்டில் கொண்டுள்ள உறுதியைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் அவன் இருக்கும் ஆத்தி மரத்தின் கீழ் தோன்றினார். அவனை அணைத்தெடுத்தார். தனது தலையில் இருந்த கொன்றை மலர் மாலையை எடுத்து அவனுக்குச் சூட்டினார். பிறகு எந்நாளும் தனது இடப்பால் இருக்கும்படியான வரத்தை அளித்தார்.

ஆத்தியும் கொன்றையும் சண்டீசர் வரலாற்றில் நீங்காத இடம்பெற்றுள்ளன.



Koviloor Digital Library

மகேஸ்வர வடிவங்களில் சண்டேச அனுக்கிரகர்

சிவபெருமான் அடியவர்களுக்கு அருள் புரிய எண்ணற்ற வடிவங்களைத் தாங்கி வருகின்றார். அவர், சம்பு பட்சங்கள் எனப்படும் சிவவடிவங்கள், அடியவர்கள், வலைஞன், வேடன் எனப் பலவகையான மானுட வடிவங்களோடு,' பறவைகள் விலங்குகள் என கணக்கிட முடியாத வடிவங்களை மேற்கொண்டு வந்து அருள் பாலித்ததைப் புராணங்கள் கூறுகின்றன.

அவற்றில் சிவமாகவே வெளிப்பட்டு அருள்பாலித்த வடிவங்களை மகேசுவர வடிவங்கள் என்பர். அதில் 108 வடிவங்களைத் தேர்ந்தெடுத்து வழிபடும் வழக்கம் உள்ளது.

சிவபெருமானோடு எட்டு என்ற எண் தொடர்புடையது என்பதால், எட்டின் மடங்கான 64 சிவவடிவங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றிற்கு அட்டாட்ட விக்கிரகங்கள் என்று பெயரிட்டும் வழிபடுகின்றனர். பாம்பன் சுவாமிகள் அட்டாட்ட விக்கிரக லீலை என்னும் பாடலில் இந்த அறுபத்து நான்கு மூர்த்தங்களையும் பட்டியிலிட்டுப் பாடியுள்ளார்.

ஆகம நூல்களில் சிவபெருமானின் ஐந்து முகங்களில் இருந்து ஐந்து ஐந்தாக வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் பாலித்த சிவவடிவங்களான இருபத்தைந்து வடிவங்களைப் போற்றி வழிபடும்முறை விளக்கப்பட்டுள்ளது. இந்த இருபத்தைந்து சிவவடிவங்களையும் மகேசுவர வடிவங்கள் என்று அழைக்கின்றனர்.


மேற்குறித்த சிந்தைக்கினிய சிவ வடிவங்களில் 108-ல் ஒன்றாகவும் அஷ்டாட்ட விக்கிர லீலை கூறும் வடிவங்களில் ஒன்றாகவும், பின்னர் குறித்த மகேசுவர வடிவங்களில் ஒன்றாகவும் சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தி இடம் பெற்றுள்ளார்.

காரணாகமம் முதலான நூல்கள் இந்த வடிவத்தைச் சிறப்பித்துப் பேசுகின்றன. இது பக்த சண்டிக்கு அருள்செய்த கோலமாகும். இதில் உயர்ந்த பீடத்தில் சிவபார்வதியர் அமர்ந்திருக்க அவர்களுக்கு முன் பாகச் சண்டீசர் வணங்கியவாறு நிற்பதையும். சண்டீசருக்குச் சிவபெருமான் தன் தலையில் இருந்த கொன்றை மாலையை எடுத்து சூட்டி, சண்டி பதம் அருள்வதும் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது.

சண்டேஸ்வர அனுக்கிரக மூர்த்தியில் அவரோடு இருக்கும் அம்பிகைக்கு **மகாபாத கணாகினி** என்பது பெயர்.



Koviloor Digital Library



பஞ்சமூர்த்திகளில் சண்டேசுவரர்

சிவாலயங்களில் சிவபெருமானின் பலவிதமான உலாத்திருமேனிகள் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், பிட்சாடனர், நடராஜர், பிரதோஷ நாயகர் ஆகிய மூர்த்தங்கள் அனைத்துக் கோயில்களிலும் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளன.

பெருந் திருவிழாவின் போது சிவபெருமானின் சோமாஸ்கந்தர் என்னும் உமை, முருகனுடன் கூடிய வடிவமே முதன்மை மூர்த்தமாகக் கொள்ளப்படுகிறது. பெருந் திருவிழாவின் இரண்டு வேளைகளிலும் சோமாஸ்கந்தமூர்த்தமே வீதிகளில் பலவிதமான வாகனங்களில் வருகின்றது.

சோமாஸ்கந்தரை எழுந்தருளிவைத்தே கொடியேற்றமும், கொடி இறக்கமும் நடைபெறுகின்றன. தீர்த்தவாரிக்கு எழுந்தருள்வதும் அவரே.

சோமாஸ்கந்தருடன் தனியம்மன் எனப்படும் அம்பிகை, வள்ளி தெய்வயானை உடனாய சுப்பிரமணியர், விநாயகர், சண்டீசர் ஆகிய நால்வரும் எழுந்தருள்கின்றனர். சிவன், அம்பிகை, முருகன், விநாயகர், சண்டேசுவரர் ஆகிய ஐவரே பஞ்ச மூர்த்திகள் என்று அழைக்கப்படுகின்றனர். அனைத்து ஆலயங்களிலும் பெருந்திருவிழாவில் இந்தப் பஞ்ச மூர்த்திகளே வீதிகளில் பவனி வந்து அருள்பாலிக்கின்றனர்.

பஞ்சமூர்த்திகளில் ஒருவராகப் போற்றப்படும் சண்டேசுவரர் வீதி பவனியில் ஐந்தாவதாக வருகிறார்.

ஆலயங்களின் முகப்பில் ஐந்து வளைவுகள் அமைத்து அதில் இந்த ஐந்து மூர்த்திகளையும் சுதைச் சிற்பங்களாக அமைக்கின்றனர். இந்தச் சிற்பங்கள் வண்ணம் தீட்டப்பட்டு பொலிவுடன் காட்சி தருகின்றன. இந்த ஐந்து மூர்த்திகளுமே தத்தம் வாகனங்களில் அமர்ந்து காட்சி தருகின்றனர். சண்டேசுவரர் இடப வாகனத்தில் அமர்ந்துள்ளார்.

சிவாலயங்களில் வெளியிடப்படும் அழைப்பிதழ்களின் முகப்பிலும் இந்தப் பஞ்ச மூர்த்திகளின் உருவங்கள் அச்சிடப்படுகின்றன.

Koviloor Digital Library

நாயன்மார் வரிசையில் உள்ள இருபெரும் பாலபக்தர்கள்

அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரிசையில் இடம் பெற்றுள்ள கண்ணப்பரும் சண்டீசரும் வயதில் மிகவும் இளையவர்கள். சிவபக்தி மிக்க பாலகர்கள்.

சேக்கிழார் சண்டீசுவரைப் போற்று மிடங்களில்,

தெய்வமறைச் சிறுவர் - மறைச் சிறுவர் .
சேஞ்சலூர் பிள்ளையார்
சிறுமானன் அகவன்
செங்கண் விடையார் திருமலர்க்கை
தீண்டப் பெற்ற "சிறுவனார்"

என்று கூறுவதைக் காண்கிறோம். ஏழு வயதில் உபநயனம் செய்விக்கப் பெற்றுச் சில நாட்களிலேயே சிவனால் ஆட்கொள்ளப் பெற்றவர், ஏறத்தாழ எட்டு வயதிலேயே சிவனோடு இணைந்தவர்.

கண்ணப்பர் பத்து வயதில் பரமனடியை



சண்டீஸ்வரர்கள்

அடைந்தவர். ஐந்துவயதில் வில் பிடி விழா கண்ட அவர் பத்தாம் வயதில் கன்னி வேட்டைக்குச் சென்றார். வேட்டைக்குச் சென்ற முதல்நாளிலேயே காளத்தியப்பரைக் கண்டு அவர் வசமானார். ஆறாம் நாளில் தமது கண்ணைத் தோண்டி அளித்து இறையருள் பெற்றார்.

சண்டீசரைச் சிவபெருமான் அருகழைத்து அணைத்துக் கொண்டதுடன், அவர் திருமுடி மீது தம் முடியில் இருந்த கொன்றை மாலையை எடுத்துச் சூட்டினார். அத்துடன் "எப்போதும் என்னுடன் இருப்பாய்" என்றார்.

கண்ணப்பரின் கரத்தைப் பற்றிக் கொண்ட இறைவன் அவரை "எப்போதும் என் வலப்பக்கத்தில் இருப்பாய்" என்றார். சிவபெருமானுக்கு வலப்பக்கத்தில் கண்ணப்பரும் இடப்பக்கத்தில் சண்டீசரும் உள்ளனர்.

இறைவனால் திருக்கரம் தீண்டப்பெற்ற சிறுவர்களாகவும் தமது ஒப்பற்ற செய்கையால் பெருமை மிக்கவர்களாகவும் உள்ள இவர்கள் எப்போதும் சிவபெருமான விட்டு நீங்காது இருக்கின்றனர்.

திருநாவுக்கரசர், திருச்சாய்க்காடு தலத்தில் தோடுலா மலர்கள் தூவி எனத் தொடங்கும் பதிகத்தை அருளிச் செய்துள்ளார்.

இதிலுள்ள பத்துப் பாடல்களும் பத்து புராணக் கதைகளைக் கூறுகின்றன. இதில் ஆறாவது பாடல் சண்டேசுவரர் வரலாற்றையும், எட்டாவது பாடலில் கண்ணப்பர் வரலாற்றையும், மூன்றாம் பாடல் கோட் செங்கட் சோழர் வரலாற்றையும் விளக்கிக் கூறுகின்றன. இதில் கண்ணப்பர் வரலாறும், சண்டேசுவரர் வரலாறும், அடுத்தடுத்துக் கூறப் படுவது சிந்தித்து மகிழ்தற்குரியது.

அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர் ஆலயம்

Koviloor Digital Library



கண்ணப்பர் வரலாறு, அச்சிறுபாக்கம்.


மிகத் தொன்மையானதும், காலங்கள்தோறும் அரசர்களால் கொண்டாடப்பட்ட பெருமையும் உடையதாகும். சோழர்குல மன்னர்களின் பெரும்பாலான கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன.

இக்கோயிலில் இறைவன் அளித்த ஆணைப்படி, கண்ணப்பர், பெருமானுக்கு வலப்புறத்திலும், சண்டீசர் இடப்புறத்திலும் நிற்கின்றார்கள் என்பதை நினைவுகூர, கருவறை வாயிலின் இடப்புறம் சண்டீசர் வரலாற்றையும், வலப்புறம் கண்ணப்பர் வரலாற்றையும் புடைப்புச் சிற்பமாக அமைத்துள்ளனர். இரண்டிலும் சிவலிங்கத்திலிருந்து கையொன்று வெளிப்படுவது குறிக்கப்பட்டுள்ளது.

வடக்கிலுள்ள துவாரபாலகனின் அருகில் இடம் பெற்றள்ள சண்டீசுவரர் வரலாற்றில் சண்டீசர் வலது கரத்திலுள்ள மழுவை ஓங்கி வெட்டிவிட்டு, மறுபடியும் வெட்ட ஓங்கியுள்ளார். வெட்டுண்டதால் அவர் தந்தை எச்சதத்தன் நிலை தடுமாறி வீழ்ந்து கிடக்கிறார். அவரது குடையும், கோலும் அருகில் கிடக்கின்றன. சண்டீசர் வழிபடும் லிங்கத்திலிருந்து ஒரு கரம் வெளிப்பட்டு, ஆணையிடும் கோலத்தில் உள்ளது.

கண்ணப்பர் வரலாற்றில் மரத் தின் கீழ் சிவலிங்கம் அமைந்துள்ளது. அதில் முகம் அமைந்துள்ளது. மரத்தின் பின்புறம் சிவகோசரியார் வீற்றிருக்கின்றார்.

கண்ணப்பரும் அவரது தோழர்கள் நால்வரும் இதில் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் ஐவரும் தோளில் வில்லையும் அம்புக் கூட்டையும் தாங்கியவாறு கரங்களைக் கூப்பி வணங்குகின்றனர். இவர் களுக்குப் பின்னணியில் நாய் ஒன்று நிற்கிறது. சேக்கிழார் நாயின் காற்சுவடுகள் அங்கு இருந்ததைத் குறிப்பிடுவதால் நாய் அவர்களுடன் வந்ததை அறிகிறோம். இதை வடித்த கலைஞன் பெரிய புராணத்தை ஆழ்ந்து படித்தபின் இதை வடித்துள்ளான்.



சண்டீஸ்வரர் வரலாறு, அச்சிறுபாக்கம்.

Koviloor Digital Library

நாயன்மார் - கலை வடிவில் வடித்த நாயன்மார்


(ராஜசிம்ம பல்லவன் அமைத்த சண்டேசுவர வடிவம்)

பல்லவர்கள் காஞ்சிபுரத்தைத் தலை நகராகக் கொண்டு வட தமிழ்நாட்டை ஏறத் தாழ 300 ஆண்டு காலம் பெருஞ்சிறப்புடன் ஆண்டு வந்த மாமன்னர்கள்.

இவர்களில் ஐயடிகள் காடவர்கோன் எனப்படும் முதலாம் பரமேஸ்வர வர்ம னும் அவரது மகனான காடவர்கோன் கழற் சிங்கன் எனப்படும் இரண்டாம் நரசிம்ம வர்மனும் அறுபத்து மூன்று நாயன்மார்கள் வரிசையில் இடம் பெற்றுள்ளனர்.

மாபெரும் சிவபக்தர்களாகவும்,கலைக் குரிசில்களாகவும் விளங்கிய இந்த மாமன் னர்கள் பல அற்புதமான கலைக் கோயில் களைப் படைத் துள்ளனர். காஞ்சிபுரத்தில் பல்லவர்கள் அமைத்த அற்புதக் கோயில் கள் பலவாகும். இவற் றுள் தலை சிறந்த கலைப் பெட்ட மாகத் திகழ்வது காஞ்சிபுரத் துக் கயிலாயநாதர் ஆலயமாகும்.

காஞ்சிபுரம் கயிலாயநாதர் ஆலயம் பல்லவ மன்னன் ராஜ சிம்மனால் கட்டப் பட்டதாகும்." **கடல் சூழ்ந்த உலக மெல்லாம் காக்கின்ற பெருமான் காடவர் கோன் கழற் சிங்கன்** "என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாராட்டப்பட்ட இம்மன்னன் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரா வார்.



மாபெரும்கலை வேந்தனான இவர் படைத்த கயிலாயநாதர் ஆலயம் அற்புதச் சிற்பக் களஞ்சி யக் கலைக் கோயிலாக வே திகழ்கிறது. இதில் சுற்றுப்பிரா காரத்தில் வரிசைத் துணைக் கோயில்கள் அமைக்கப்பட்டு, அதில் தெய்வங்களின் அருட் கோலத்தை விளக்கும் அற்புதச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. திரிபுரங்களை அழித்த திரிபுரசம் ஹாரம், இரணியன்-நரசிம்மர் யுத்தம், அர்ச்சுனன்-கிராதகன் யுத்தம், பிரம்ம சிரச்சேதம், இரா வண கர்வபங்கம், சலந்தர பதம், காலசம்ஹாரம் முதலிய வீரட்ட காசக் காட்சிகள் இடம் பெற்றுள் ளன.


Koviloor Digital Library

அவ்வரிசையில் தாதையைத் தாளற வீசி வீரம் விளைத்த சண்டீசர் வரலாற்றுச் சிற்பமும் இடம் பெற்றுள்ளது. சிவபெருமான் வலது காலை நிலத்தில் ஊன்றிஇடது காலை உயர்ந்த பீடத்தின் மீது வைத்துக் கொண்டிருக்கின்றான். வலது மேற்கரத்தில் ஆச்சர்ய முத்திரையும் பாம் பும் உள்ளன.

அவரது வலப்புறம் சண்டீசர் மழுவுடன் நிற்கின்றார். பெருமானின் கால் வைத்துள்ள மேடையின் கீழ் சண்டேஸ்வரர் பூஜித்த லிங்கம் உள்ளது. சண்டீசருக்கு முன்பாக கால்களை இழந்த எச்சதத்தன் துன்பத்தால் முகத்தை மூடிக்கொண்டிருக்கின்றான்.

சிவபெருமானின் கையில் பூமாலை இருந் திருக்க வேண்டும்தொடர்ந்து செய்யப்பட்டு வந்த புனரமைப்புகளில் அது சிதைந்துள்ளது.

இந்த அற்புதமான பெரிய சுதைச் சிற்பம் பல்லவர்காலத்தில் சண்டேசுவரர் வரலாறு பெற்றிருந்த பெரும் சிறப்பை விளக்குகிறது.




மாமல்லபுரம் தர்மராஜ ரதத்தில்
இடம் பெற்றுள்ள சிவபெருமானும் சண்டேஸ்வரரும்

மேலும் இம்மன்னன் மாமல்லபுரத்திலும் பல ஆலயங்களை அமைத்தான். அவற்றில் கடற்கரையில் அமைந்துள்ள கோயில்கள் இவன் பெயரால் ராஜசிம்மேசுவரம் என்றும் க்ஷத்திரிய சிம்மேசுவரம் என்றும் அழைக்கப்படுகின்றன.

பாண்டவரதங்கள் என்னும் ஐம்பெரும் கோயில்களும் இவனால் உருவாக்கப்பட்டதே ஆகும். இதில் சிவபெருமானுக்கு என அமைக்கப்பட்டதும், மக்களால் தர்மராஜ ரதம் என்று போற்றப்படுவதுமான ஆலயம் சிறந்த கலைப்படைப்பாகத் திகழ்கிறது. இதில் உள்ள எழில்மிகு சிற்பங்களில் ஒன்றாக சண்டேச அனுக்கிரக மூர்த்தியும் இருக்கிறார். சண்டேசர் வலக்கையால் வாய்புதைத்து நிற்க, சிவபெருமான் அவரைத் தழுவிக் கொண்டுள்ளார். இந்த அற்புதக் கோலத்தையே மேலே காண்கிறோம். ❀


அதிரண சண்டேசுவரக் கிருகம்



பல்லவ மாமன்னனான பரமேஸ்வரவர்மனுக்குரிய பட்டப் பெயர்களில் அதிரண சண்டன் என்பதும் ஒன்றாகும். அப்பெயரால் அவன் மாமல்லபுரத்திற்கு வடக்கே உள்ள சாளுவன் குப்பம் என்னுமிடத்தில் அதிரண சண்டேசுவரக் கிர கம் என்னும் குடைவரைக் கோயிலை உருவாக்கியுள்ளான். இதற்கும் பக்த சண்டேசுவரருக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ❀

Koviloor Digital Library

திருநாவலூர் புராணத்தில் சண்டேசுவரர்



சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதரித்த திருத்தலமான திருநாவலூரில் புகழ்பெற்ற தான இரண்டு சிவாலயங்கள் உள்ளன. இவற்றில் தொன்மையானது திருத்தொண்டீசர் ஆலயமாகும். தொண்டீச்சரம் என்பதற்கு மிகப் பழமையான சிவாலயம் என்பது பொருள். அது இப்போது பக்தஜனேஸ்வரர் ஆலயம் என்று அழைக்கப்படுகிறது. இது சுந்தரர் பாடிப் பரவிய பதியாகும்.

இக்கோயிலில் மகாமண்டபத்தின் வட புறச் சுவரில் சண்டேசுவரர் வரலாற்றுச் சிற்பம் தொடர்சிற்பமாக செய்யப்பட்டுள்ளது.

இங்கு மேலும் கீழுமாக அமைந்த இரண்டு தொடர்சிற்பங்களையும் தனிச் சிற்பம் ஒன்றையும் காண்கிறோம்.

இந்தச் சிற்பத்தின் இடப்பகுதியில் உள்ள தனிச்சிற்பத்தில் மரத்தின் மீது ஏறி அமர்ந்துள்ள மனிதனைக் காண்கிறோம். இவரே சண்டீசரின் தந்தையாவார்.

அடுத்ததான தொடர்சிற்பத்தில் ஒரு மாடு நிற்கிறது. அதன் பக்கத்திலுள்ள அடுத்த மாட்டில் இருந்து சண்டீசுவரர் பால் கறக்கிறார். அந்தப்பசு சண்டீசுவரரின் முதுகை நக்குகிறது.

அடுத்த தொகுப்பில் ஆத்தி மரத்தடியில் இருக்கும் சிவலிங்கத்திற்கு விசாரசர்மன் (சண்டேசுவரர்) பால் அபிஷேகம் செய்கிறார்.

அடுத்து நீண்ட கோலை ஏந்தி வயோதிக வடிவு கொண்ட அவரது தந்தை எச்சதத்தன் பாற்குடங்களைக் காலால் எத்துகிறான். மூன்று பாற்குடங்கள் உருண்டு கிடக்கின்றன.

அடுத்த காட்சியில் சண்டீசர் தந்தையின் காலை வெட்டியதால் தந்தை வீழ்ந்து கிடக்கிறார். வெட்டுண்ட வலியின் மிகுதியால் வலதுகாலை வலது கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டு இடது கையைத் தரையில் ஊன்றியுள்ளார். அவனது நீண்ட கோல் சாய்ந்து கிடக்கிறது.

இதற்கு மேலே உள்ள வரிசையில் முதலில் சுந்தரர் நிற்கிறார். அடுத்ததாக

Koviloor Digital Library

நடன கோலத்திலான திருஞானசம்பந்தரைக் காண்கிறோம்.

அடுத்ததாக, உழவாரப் படையுடன் கூப்பிய கரங்களுடன் அப்பர்சுவாமிகள் இருக்கின்றார்.

அடுத்ததாக, சிவபெருமான் தன் முன் நிற்கும் சண்டீசரின் தலையில் கொன்றை மாலையைச் சூட்டுகின்றார். அவருக்கு அருகிலுள்ள அம்பிகை தன் பின்னால் நிற்கும் நந்தியின் மீது தனது வலது கையை வைத்துக் கொண்டுள்ளார். அவரது மேற் கரங்களில் மான், மழு ஆகியவை உள்ளன.

சண்டீசுவரருக்கு அருள்செய்யும் உமாமகேசுவரருக்கு முன்பாக ஒருவர் தலை மீது கரங்களைக் கூப்பி வணங்கியவாறு உள்ளார். அவருக்கு முன்புறம் காளாஞ்சியும், அதன்மீது கலசமும் உள்ளன. இவரை சண்டீசுவரரின் தந்தை என்கின்றனர். சிலர் சோழமன்னன் என்றும் கூறுகின்றனர்.

சண்டீசுவரர் வரலாற்றைத் தேவார மூவரும் பாடிப் பரவியுள்ளனர். அப்பர் சுவாமிகள் அவரது வரலாற்றை அறிந்து நெகிழ்ந்து நிற்பதாகவும், திருஞானசம்பந்தர் ஆனந்த நடனம் புரிவதாகவும், அவர்கள் இருவரையும் தொடர்ந்து சுந்தரர் சிந்தித்து வணங்கி நிற்பதாகவும் கூறுகின்றனர். சண்டீசுவரர் வரலாற்றை விளக்கும் இந்தச் சிற்பத் தொகுதி தனித்தன்மை கொண்டதாக இருக்கிறது.

இந்தச் சிற்பத்தை அடியொற்றி இவ்வூர்த் தலபுராணத்தில் சண்டீசர் வரலாறு சொல்லப்பட்டுள்ளது.

அதன்படி, இக்கோயிலில் பணியாற்றி வந்த கல்யாண சிவாச்சாரியார் என்பவரின் குமாரன் மாடு மேய்த்து சிவபூசை செய்ததாகவும், அவன் தந்தை சிவபூசைக்கு இடையூறு செய்ததால், அவன் தந்தையின் காலை வெட்டியதாகவும் சிவபெருமான் வெளிப்பட்டு, அந்தக் குமார னுக்கு சண்டீசபதம் அளித்ததாகவும் குறித் துள் ளார். இது இவ்வூர் புராணத்தைப் பாடி யவர் இத்தலத்தின் மீது கொண்ட ஈடுபாட்டால் எழுதிய வரலாறாகவே கொள்ள வேண்டும்.

சிறிய அளவு சிற்பமாக இருந்தாலும் கலை நுணுக்கம் கொண்ட அரிய சிற்பமாக இச்சிற்பம் இருக்கிறது. ❀

நவநிவேதனமும் சண்டீசரும்

பெருந்திருவிழாக்கள் தவிர அறுவடைத் திருவிழாவிற்கும் சண்டேசுவரர் எழுந்தருள்கிறார். பயிர்கள் அறுவடைக்குத் தயாரானதும் ஊர் மக்கள் கூடி அறுவடைசெய்ய நல்ல நாளைக் தேர்ந்தெடுப்பர். அந்நாளில் கோயிலில் இருந்து சண்டீசுவரை அலங்கரித்து எடுத்துக் கொண்டு வயல் வெளிக்குச் செல்வர். அங்கு சண்டீசுவரரிடம் அறுவாளை வைத்து வழிபட்டபின் அறுவடையைத் தொடங்குவர். அவரவர் தம் வயலில் இருந்து ஒருபிடி நெல் கதிரை அறுத்து வந்து சண்டீசரிடம் வைப்பர். அதை எடுத்துக் கொண்டு சண்டேசுவரர் கோயிலுக்குத் திரும்புவார்.

கோயிலில் நெல்லைக் காய வைத்து குத்தி அரிசியாக்கி அமுது சமைத்து நிவேதிப்பர். இதற்கு நவநிவேதனம் என்பது பெயர்.(நவம்- புதியது)

சண்டீசரை முன்வைத்து வயல்களை பொன்னேர் பூட்டி உழத்தொடங்குதல், நாற்று நடுதல் இறுதியில் அறுவடை செய்தல் என்ற அனைத்திற்கும் சண்டீசரை முன்னிருத்தி நடத்தும் வழக்கம் இருந்ததாகக் கூறுகின்றனர். ❀

Koviloor Digital Library

சோழமன்னர்களும் சண்டேசுவரரும்

தமிழகத்தை ஆண்ட மன்னர்களில் பிற்காலச்சோழமன்னர்களே அதிக அளவு சண்டேசுவரரைப் போற்றியுள்ளனர். அவர்கள் காலத்தில் கோயில்கள் பெரிய சொத்துக்களின் இருப்பிடமாக இருந்தன. அவர்களுக்கு முன்னதாக ஆட்சிபுரிந்த பல்லவர்கள் காலத்திலும் அதற்கு முன்பாகவும் கோயிலுக்கு நிரந்தரமான சொத்துக்கள் இருந்ததாக அறிய முடியவில்லை. பூசைக்குத் தேவையான பொருட்களை அன்பர்களே அளித்து வந்தனர்.

சோழ மன்னர்கள் காலத்தில்தான் கோயில்கள் பெரும் செல்வக்களஞ்சியமாக மாறின. அன்பர்களும் அரசர்களும் நிலங்களையும், விலையுயர்ந்த அணிகலன்களையும் ஆலயங்களுக்குக் கொடையாக அளித்தனர். இதனால், ஏராளமான நிலங்களும், விலையுயர்ந்த அணிகலங்களும் கோயில்களுக்குச் சொந்தமாக இருந்தன. அவற்றின் ஒட்டுமொத்த அதிகாரியாகச் சண்டேசர் போற்றப்பட்டார்.

கோயில் நிலங்களை விற்பது, புதிய நிலங்களை வாங்குவது, யாவும் சண்டேசர் பெயராலேயே நடைபெற்றன. கோயில்களில் நிலம் வாங்கவும், விற்கவும் நிர்ணயிக்கப்பட்ட தொகை சண்டேசுவரப் பெருவிலை என்றே அழைக்கப்பட்டது.

கோயில்களில் சண்டேசருக்குப் பெரிய மதிப்பு அளிக்கப்பட்டு சிற்றாலயங்கள் அமைக்கப்பட்டன. கங்கை கொண்ட சோழபுரம், தஞ்சாவூர், தாராசுரம், திருக்கடவூர் முதலிய தலங்களில் காணப்படும் விமானத்துடன் கூடிய பெரிய சண்டேசர் சந்நிதிகள் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

மாமன்னன் ராஜராஜன் எடுப்பித்த தஞ்சைப் பெரிய கோயிலில் சண்டேசரின் வரலாற்றை விளக்கும் வகையில் பெரிய உலாத்திருமேனி தொகுதி அமைத்து வழிபடப்பட்டது. (பார்க்க பக்கம் 43)

அவரது மகன் ராஜேந்திர சோழன் தாம் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம் கங்கை கொண்ட சோழீசுவரர் ஆலயத்தில் உலகப் புகழ்பெற்ற சிற்பமாகச் சண்டேஸ்வரப் பிரசாததேவரை அமைத்துள்ளான்.

இரண்டாம் ராஜராஜன் தான் எடுப்பித்த ஐராவதேசுவரர் ஆலயத்தில் அறுபத்து மூவர் வரலாற்றின் வரிசையில் (மேற்குறித்த வகையிலேயே) சண்டேசுவரப் பிரசாத தேவரை அமைத்துள்ளான்.

சோழர்காலக் கோயில்கள் அனைத்திலும் சண்டேசுவரர் வரலாறு புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. திருநாலூர் பக்தஜனேசுவரர் ஆலயம், திருவலஞ்சுழி வலஞ்சுழிநாதர் கோயில், திருவையாறு ஐயாறப்பர் கோயில் என பல ஆலயங்களில் சண்டேசர் வரலாற்றைக் காட்டும் தொடர் சிற்பங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

இவை சோழர்கள் சண்டேசர் மீது வைத்திருந்த பக்திக்கும் அன்பிற்கும் அடையாளமாகத் திகழ்கின்றன. ❀

Koviloor Digital Library

இராஜராஜ சோழன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் எழுந்தருளி வைத்த சண்டேசுவரப் பிரசாததேவர்

தமிழரின் அதியுன்னத கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாக இருப்பது தஞ்சைப் பெரிய கோயிலாகும். மாமன்னன் ராஜராஜ சோழன் சிவபெருமானிடம் கொண்டிருந்த பெரும்பக்தியின் வெளிப் பாடாக இந்தக் கோயில் உருப்பெற்று காலத் தை வென்று அன்பர்களுக்குக் கலை விருந்தாகவும், பக்தியின் சங்கமமாகவும் விளங்கி வருகிறது. யுனஸ்கோ அமைப் பால் உலகில் உயர்ந்த தகுதியோடு வாழும் கலைச் சின்னமாக இது போற்றப்படுகிறது.

மாமன்னன் ராஜராஜன் இக்கோயிலை அமைத்ததுடன், இது பெருஞ்சிறப்புடன் திகழப் பல்வேறு கொடைகளை வாரி வழங்கினான். பூசைகள் நடைபெறவும், திருமுறைகள் ஓதவும் நாட்டியமாடவும், பலவிதமான இசைக்கருவிகளை இயக்க வும் பெரும் செல்வத்தையும் நிலங்களை யும் வழங்கினான். தெய்வங்களின் உரு வங்களைக் கல்லிலும் செம்பிலும் செய்து வைத்தான். அத்திருவுருவங்களுக்கு அணி விக்க ஏராளமான ஆபரணங்களை வழங்கி னான். நவமணிகள் இழைத்துச் செய்யப் பட்ட அந்த ஆபரணங்களின் அமைப்பை யும், எடையையும், அதில் பதித்த நவமணி களின் அளவுகளையும் கூட கல்வெட்டில் பதித்து வைத்தான்.

இராஜராஜன் காலத்தில் இக்கோயில் சைவசமயத்தின் பெருநிலையமாகவும் கலைமகளின் கொலுமண்டபமாகவும், இசைக்கலைஞர்களின் ஞானபீடமாகவும் திகழ்ந்ததை அவன் இக்கோயிலில் வெட்டி வைத்துள்ள கல்வெட்டுச் செய்திகள் மூலம் அறிகிறோம்.

ராஜராஜன் இக்கோயிலில் சண்டீசர் வரலாற்றை விளக்கும் வகையிலான செப்புத்திருமேனியை செய்தளித்தான். சண் டேசுவரப் பிரசாத தேவர் என்று அழைக்கப் பட்ட அந்த உலாத்திருமேனிகளின் அமைப் பையும் உயரம் எடை ஆகியவற்றையும் அவன் கல்வெட்டாகப் பதித்து வைத்துள் ளான். இப் பகுதியில் இராஜராஜன் இந்தக் கோயிலுக்கு அளித்த அந்த சண்டேசுவரப் பிரசாததேவர் குறித்த கல்வெட்டு வாசகத் தையும், அதைத் தொடர்ந்து அதன் விளக்கத் தையும் காணலாம்.

ராஜராஜதேவர் குருத்த சண்டேச்வர பிரசாத தேவர் உடையார்

ஸ்ரீராஜராஜதேவர், ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத் தொன்பதாவது வரை எழுந்தருளுவித்து செப்புத் திருமேனிகள் உடையார் கோயிலில் முழத்தால் அளந்து கல்லில் வெட்டின.

பாதாதி கேசாந்தம் இருபத்திற்று விரலே நாலு தோரை உசரத்து நாலு ஸ்ரீ ஹஸ்தம் உடையராகக் கனமாக எழுந்தரு ளிவித்த **சண்டேச்வர பிரசாத தேவர்** திரு மேனி ஒருவர்.

ரத்நநியாசஞ் செய்து இவர் எழுந்த ருளி நின்ற ஒரு விரலே இரண்டு உசரத்து ஸ்ரீபாதத்தோடும் கூடச்செய்த பத்மம் ஒன்று.

செவிக்கு மேல்கேசாந்தத் தளவுஞ் செல்ல மூவிரல் உசரத்து இரண்டு கைய் உடையவராகக் கனமாக செய்த **முசலகன்** ஒன்று.

Koviloor Digital Library

பாதாதிகேசாந்தம் பதின் கைய்விரலே மூன்று தோரை உசரத்து கனமாகச் செய்த இவர் **நம்பிராட்டியார் உமாபரமேச்சுவரியார் திருமேனி** ஒருவர்;

ரத்தின நியாசஞ் செய்து இவர் எழுந்தருளி நின்ற விரலே ஒரு தோரை உசரத்து பத்மம் ஒன்று;

தேவரும் நம்பிராட்டியாரும் எழுந்தருளி நின்ற ஒரு முழம் இருவிரல் நீளத்து பதின் அறுவிரல் அகலத்து அறுவிரல் உசரத்து பீடம் ஒன்று

ஸ்ரீபாத பீடத்துக்கு மேல் சிரோவர்த்த னையளவுஞ் செல்ல ஒரு விரலே இரண்டு தோரை உசரத்து மூவிரல் அரைச் சுற்றி புறப்பட்ட ஒரு ஸ்ரீ ஹஸ்தம் உடையவராக கனமாக செய்த மஹாதேவர் ஒருவர். இவரோடுங் கூடச் செய்த இரு விரல் உசரத்து கனமாகச் செய்த **பீடம்** ஒன்று.

பாதாதிகேசாந்தம். ஐய்விரரே ஐஞ்சு தோரை உசரத்து இரண்டு கையுடையராக கனமாக செய்த **சண்டேச்வரர்** ஒருவர்.

பாதாதிகேசாந்தம் அறு விரலேய் ஏழு தோரை நீளத்துஇரண்டு கையுடையராய் வீழ்ந்து கிடந்தாராக கனமாக செய்த இவர் **பிதா** ஒருவன்.

பாதாதிகேசாந்தம் ஒன்பதிற்று விரல் நீளத்து இரண்டு கையுடையாராக பிரஸாதம் **பெறுகின்றாராக கனமாக செய்த சண்டேச் வரர்** ஒருவர்.

இவனுக்கு பிரஸாதம் குடுத்த பதின் அறு விரலே நாலு தோரை நீளத்து அரை விரல் கலத்து இரண்டு தோரை கனத்து **புஷ்பமாலை** ஒன்று;

இவர்களைக் கவித்த இரு முழமாய் இருபத்து மூவிரல் சுற்றின கனமாகச் செய்து கவித்த **பிரபை** ஒன்று.

இதன்படி நான்கு திருக்கரங்களை உடைய **சண்டேசுவரப் பிரசாதர்** என்னும் **சிவபெரு மானும்**, இவர் எழுந்தருளி நிற் பதற்கு ஒரு பத்ம பீடம் அமைக்கப்பட் டிருந்தது. அவர் அருகில் **முயலகன்** திரு வுருவம் அமைக்கப்பட்டிருந்தது.சிவபெரு மானின் அருகில் பத்ம பீடத்தில் நிற்கும் இரண்டு கரங்களைக் கொண்ட அம்பிகை அமைக்கப்பட்டிருந்தாள்.

சிவனும் உமையும் ஒருசேர எழுந்த ருளியிருக்கும் பீடம் அமைக்கப்பட்டிருந் தது.இவர்களுக்கு முன்னால்பெரிய லிங்கம் இடம் பெற்றது. அந்த லிங்கத்திலிருந்து ஒரு கை வெளிப்படுவது போல் அமைக்கப் பட்டிருந்தது. இவரை வழிபடும் நிலையில் சண்டேசுவரர் அமைக்கப்பட்டிருந்தார்.


இவருக்கு முன்னால் வீழ்ந்து கிடப்பது போல் செய்யப்பட்ட இவனது தந்தை உருவம் இடம் பெற்றிருந்தது.

சிவபெருமானிடமிருந்து பூமாலைப் பிரசாதமாகப் பெரும் கோலத்திலான சண் டேசுவரர் அமைக்கப்பட்டிருந்தார். இவருக் குச் சூட்டப்பட்ட கனமாகச் செய்த மாலை ஒன்றும் அளிக்கப்பட்டிருந்தது.

ஆக, இத்தொகுப்பில் சிவபெருமான், அம்பிகை உமாதேவியார், சிவலிங்கம் அவரை பூசிக்கும் சண்டேசுவரர். வீழ்ந்து கிடக்கும் எச்சதத்தன். புஷ்ப மாலையை வாங்கிக் கொள்ளும் கோலத்திலான சண் டேசுவரர் ஆகியோர் இடம் பெற்றிருந் தனர். ஐதீகத் திருவுருவங்களில் சிவலிங் கத்திலிருந்து சிவபெருமானின் வலது கை வெளிப்பட்டு அடியவர்க்கு அருளும் கோலத்தில் அமைப் பர். அந்த வழக்கத் தையொட்டி இத் தொகுதியில் இருக்கும் லிங்கத்திலிருந்தும் கை ஒன்று வெளிப் படும் கோலத்தில் அமைக் கப்பட்டிருந்தது.

இவ்வுலாத் திருமேனியை வைத்து ஐதீக விழாவை நடத்தியிருக்கிறான் என்று எண்ண வேண்டியுள்ளது.

Koviloor Digital Library



இராஜராஜன் சண்டேச்வர பிரசாத தேவர்

Koviloor Digital Library

சோழர்கள் காலத்திய வீரம் விளை விக்கும் நிகழ்ச்சிகளை விளக்கும், ஓவியங் கள், சிற்பங்கள், உலோகத்திருமேனிகள் ஆகியவற்றில் எதிராளியையும் சேர்த்தே அமைக்கும் வழக்கம் இருந்துள்ளது. கால சம் ஹார மூர்த்தி வடிவங்களில் அவரது பீடத்தில் மாண்டு கிடக்கும் யமனைக் காண்கிறோம்.

திருக்கடையூரில் அமைக்கப்பட்டுள்ள காலசம்ஹார மூர்த்தி உலாத் திருமேனியின் பீடத்தில் மாண்டு கிடக்கும் யமனும், அவன் உடலை அப் புறப்படுத்த ஒரு பூதம் அவனது காலில் கயிற்றைக் கட்டி இழுத்துச் செல்லத் தயாராக இருப் பதும் பொறிக் கப்பட்டுள் ளது.

வீரபத்திரர் வடிவங்களில் பீடத்தில் வீழ்ந்து கிடக்கும் தட்ச னைக் காண்கிறோம். சண்டேசுவர அனுக்கிரக உலாத் திருமேனி யிலும் இம்முறை கையாளப்பட்டுள்ளது. இதில் எச்சதத்தன் வீழ்ந்து கிடப்பவனாக அமைக்கப்பட்டிருந்திருக்கின்றான். **வீழ்ந்து கிடப்பானாக எச்ச தத்தன்** என வரும் தொடர் மாண்டு கிடக்கும் எச்சதத்தனின் திரு வுட லைக் குறிப்பதாக உள்ளது. இத்திரு வுரு வம் இப்போது இல்லை எனினும் இதைப் பற்றிய சொல்லோவியம் கேட்டு மகிழத் தக்கதாக இருக்கிறது.

தொடக்க கால சிற்ப ஓவியங்களில் சண் டீசருக்கு சிவபெருமான் மாலையை அளிப் பதாகவும், அவர் கரங்களை நீட்டி வாங்கிக் கொள்வதுமாகவே அமைக்கப் பட் டிருந் தது. அதுபற்றியே இதில் இறைவன் கரத்தி லிருந்து மாலையைப் பெற்றுக் கொள்ப வராக என்று சண்டேஸ்வரர் குறிக்கப்பட் டுள்ளார்.

இவருக்குப் பின்னால் வந்த இராஜேந் திர சோழன் காலம் முதல் திருவடியில் சண்டேசுவரரை அமர்த்தி அவரது திரு முடியில் மாலை சூட்டுவதாக சிலைகளை அமைக்கத் தொடங்கியுள்ளனர். ❀

கல்வெட்டுக்களில் சண்டேசுவரர்

அன்பர்கள் ஆலயங்களுக்கு விநாயகர், முருகன், அம்பிகை போன்ற வடிவங்களைச் செய்தளித்து நிலைப்படுத்தியதுடன் அவற்றிற்கான பூசைக்கு வேண்டிய பொருட்களையும் நிவந்தங்களையும் ஏற்படுத்தினர். அவற்றைக் கல்வெட்டாகவும் பொறித்து வைத்தனர்.

இவ்வகையில் அவிநாசியில் இருக்கும் அவிநாசியப்பர் ஆலயத்தில் சண்டீசர் எழுந்த ருளி வைக்கப்பட்டிருக்கும் செய்தியைக் அக்கோயிலிலுள்ள கல்வெட்டின் முலம் அறி கிறோம். சுந்தர பாண்டியன் ஆட்சி செலுத்திய 1346ஆம் ஆண்டில் இக்கோயிலைச் சுற்றி இருந்த மடவளாகத்தில் இருந்து **தவசியார் முத்தின் சிவிகை பெற்றான்** என்பவர் அவிநாசியப்பர் ஆலயத்தில் திரு நடைமாளிகை எனப்படும் உள்சுற்றுப் பிராகாரத்தில் சண்டேசுவரரை எழுந்தருளி வைத்துள்ளார் என்ற செய்தியைக் கல்வெட்டு கூறுகிறது.

திருவாவடுதுறை கோமுத்தீசுவரர் ஆலய கல்வெட்டும் சண்டீசர் உலாத்திருமேனி எழுந்தருளிவைத்த செய்தியைக் கூறுகிறது. சந்திரசேகரர், நம்பிராட்டியார், நடராசர், பிட்சா டனர் முதலான திருமேனிகளுடன் சண்டேசுவரர் சிலையும் செய்தளிக் கப்பட்டுள்ளது. இவர் பீடம் உட்பட ஒருமுழ உயரம் கொண்டவர் என்று அக்கல்வெட்டால் அறிகிறோம்.

மேலும் பல கல்வெட்டுகளில் சண்டீசரை எழுந்தருளுவித்த செய்தியும் அவருடைய பூசைக்கு அளிக்கப்பட்ட நிபந்தங்கள் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன. ❀

A. No. 27270
LIBRARY KOVILOOR

Koviloor Digital Library

கொன்றை மாலை

கொன்றை மலர் சிவவழிபாட்டில் அதி உன்னத இடத்தைப் பெற்றுள்ள மலராகும். இது மஞ்சள் நிறமானது. சரஞ்சரமாகப் பூப்பது. இதன் மகரந்தக் கேசரங்கள் ஓங்கார வடிவில் உள்ளன. இதனால் இதனை ஓங்கார புஷ்பம் என்றும் அழைக்கின்றனர். மேலும் இதன் இதழ்களைப் பொற் காசுகளுக்கு ஒப்பாகச் சொல்வர். இலக்கியங்கள் இதனை பொன்இதழி என்று போற்றுகின்றன. இது பூத்துக்குலுங்குவது பேரெழில் காட்சியாக இருக்கிறது. மரத் தடியில் வீழ்ந்து கிடக்கும் மலரின் இதழ்கள் பொற்காசுகளைக் கொட்டி வைத்ததுபோல் இருக்கும்.

சிவபெருமான் ஊமத்தம், கரந்தை, தாமரை போன்ற மலர்களைத் தலையில் சூடி இருந் தாலும் அவற்றில் உன்னதமான இடத்தைப் பெற்றிருப்பது கொன்றை மலர்களே ஆகும். சிவபெருமான் சண்டேசுவரருக்கு ஓங்காரத்தை உபதேசித்து, பொன் காசுகளால் அபிஷேகித் துத், தன் தலைமையை அவருக்கு அளித்தது போன்ற செயல்களைச் செய்து, அவரை மகனாக ஏற்றுக் கொண்டதைக் குறிக்கவே கொன்றை மாலையை எடுத்துச் சூட்டினார் என்கின்றனர்.

சிவபெருமான் கொன்றை மலர்களைக் கொண்டு சண்டிஸ்வரருக்குத் தலைமாலை சூட்டியது கொன்றை மலருக்குப் பெருமை சேர்ப்பதாக இருக்கிறது.

ஆனாய நாயனார் வரலாற்றிலும் கொன்றை மலர்கள் சிறப்பிடம் பெற்றுள்ளன. கொன்றை மலர்கள் பூத்துக் குலுங்குவதைக் கண்ட ஆனாயர் தனது வேய்ங்குழலில் பஞ்சாட்சரத்தை இசைத்தார். அதைக் கேட்டு சிவபெருமான் அவர்முன் தோன்றி முக்தி அளித்தார் என்கிறது புராணம். நாயன்மார்கள் இருவர் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றதாகக் கொன்றை மலர் விளங்குகிறது.

சண்டேசுவரர் சந்நிதியில் செய்யக் கூடாதவை...

ஆலயத்தை வலம் வரும் பக்தர்கள் சண்டேசுவரர் சந்நிதியில் வணங்கியதும் சொடுக்குப் போடுவது, ஆடையில் இருந்து நூலை உருவிப்போடுவது போன்ற செயல்களைச் செய்கின்றனர். அவை முறையானதல்ல. மேலும் சண்டேசுவரரை சிலர் செவிட்டுச் சாமி என்பதால் கையைத் தட்டி தன் வரவைத் தெரிவிப்பதாகக் கூறுகின்றனர். சிலர் தான் கோயிலில் இருந்து எதையும் எடுத்துச் செல்லவில்லை என்பதை கையைத்தட்டி அவரிடம் காண்பித்துவிட்டுச் செல்வதாகக் கூறுகின்றனர். இவை எல்லாம் சரியானதல்ல...

சிவன் அருள் பேரளவில் நமக்கு முழுமையாகப் பெற்று அனுபவித்து, அதன் மூலம் பயன் பெற்று மகிழ்ச்சி அடைய வேண்டுமானால் சண்டேசரின் அருள் இருக்க வேண்டும். பெரிய ஆற்று நீரை நாம் அப்படியே பயன்படுத்த முடியாதல்லா? நீரைப் பாத்திரத்தில் சேகரித்து பயன் படுத்துகிறோம். அதுபோலவே சிவனது பேரருள் ஆற்றலை முறைப்படுத்திப் பயன் பெற வைப் பது சண்டேசரின் அனுக்கிரகமாகும். அதனால் அவரிடம் நம் வருகையைத் தெரிவித்து சிவ பெருமானை வழிபட்ட பலனைத் தர வேண்டும் என்று பிரார்த்திக்க வேண்டும்.அவர் சதாகால மும் சிவத்தியானத்தில் மூழ்கி இருப்பதால் நம் வரவை, லேசாக மும்முறை கைதட்டி தெரிவிக்க வேண்டும். அதை விடுத்து ஆடையில் இருந்து நூலைப் பிய்த்துப் போடுவது. கைகளை அதிரத் தட்டுவது, சிவசந்நிதியில் நமக்குத் தரப்பட்ட பூக்களைப் போடுவது போன்றவற்றைச் செய்யக் கூடாது. அப்படிச் செய்வது சிவ அபராதமாக முடிவதோடு பாவம் வந்து சேரும்.


Koviloor Digital Library



கங்கை கொண்ட சோழபுரத்துச் சண்டேசுவரப் பிரசாததேவர்



உலகப் புகழ் பெற்ற ஆலயங்களில் கங்கை கொண்ட சோழபுரத்துக் கங்கை கொண்ட சோழீச்சரம் உடையார் ஆலயமும் ஒன்றாகும். சோழ மாமன்னன் இராஜராஜனின் மைந்தனான இராஜேந்திர சோழன் கங்கை வரை படையெடுத்துச் சென்று வழியிலுள்ள மன்னர்களை வென்று கங்கைக் கரையில் இறைவனை வழிபட்டு கங்கை நீருடன், திரும்பினான். அவ்வெற்றியின் நினைவாக கங்கை கொண்ட சோழபுரம் என்னும் புதிய நகரை நிர்மாணித்ததோடு பெரியஏரி ஒன்றையும் வெட்டுவித்தான். கங்கையிலிருந்து கொண்டு வந்த நீரைத் தான் வெட்டிய ஏரியில் விடுத்து அதற்குக் சோழகங்கம் என்ற பெயரைச் சூட்டினான். இதனை இராஜேந்திரசோழனின் ஜல மயமான வெற்றித்தூண் என்று அறிஞர்கள் பாராட்டியுள்ளனர்.



புதியதாக நிர்மாணித்த நகரான கங்கை கொண்ட சோழபுரத்தில் சிவபெருமானுக்கு அவன் எடுப்பித்த பெரிய சிவாலயமே கங்கை கொண்ட சோழீச்சரமாகும்.

தஞ்சை பெரிய கோயிலுக்கு இணையாகக் கட்டப்பட்டுள்ள இந்த ஆலயம் கலைகளின் இருப்பிடமாகவும், சிற்பக் கலைக்கு இலக்கணமாகவும் திகழ்கிறது. இக்கோயிலில் உள்ள இரண்டு சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவைகளாகும். இவற்றில் ஒன்று ஞானசரஸ்வதி, மற்றது சண்டேசுவரப் பிரசாத மூர்த்தியாகும். இத்தகைய சிற்பங்கள் வேறெங்கும் இல்லை.

சண்டேசுவரப் பிரசாத தேவர் சிற்பத்தில் உயர்ந்த ஆசனத்தில் சிவபெரு மான் பார்வதி தேவியுடன் வீற்றிருக் கின்றார். பெருமான் சடையை எடுத் துக் கட்டியுள்ளார். முன்பகுதியில் பூரிம அலங்காரத்துடன் திகழும் சடை மகுடத்தில் பிறைச் சந்திரன் திகழ் கிறான்.

சிவபெருமான் வலது காலை மடித்து இடது காலைத் தொங்க விட் டுள்ளார். பின் கரங்களில் மானும் மழுவும் திகழ்கின்றன. அவர் தன் முன் கரங்களால் தனது திருவடியில் அமர்ந்திருக்கும் சண்டீசுவரருக்குச் சண்டீச பதவியில் அமர்த்திப் பட்டம் சூட்டும் வகையில் கொன்றை மாலையை அவரது தலையில் சூட்டுகிறார். முன் இடது கை சண்டீசரின் சடையைப் பற்றிக் கொண்டிருக்க வலது கையால் அவனது தலையில் கொன்றை மாலையைப்

Koviloor Digital Library

பிடித்துச் சுற்றிக் கொண்டிருக் கும் கோலத்தில் உள்ளார். வலது பாதத்தின் கீழ் இடது காலை நோக்கி கைகளைக் கூப்பி வணங்கியவாறு சண்டேசுவரர் அமர்ந்துள்ளார்.


அம்பிகை இறைவனின் இடப்பாகத்தில் வீற்றிருக்கின்றாள். அவள் தனது வலது காலைக் குத்திட்டும், இடது காலைத் தொங்கவிட்டும் அமர்ந்துள்ளாள். வலது கை சிம்ம கர்ண முத்திரை தாங்க, இடது கையை இடது தொடை மீது ஊன்றியுள்ளாள். அம்பிகையின் தலையலங்காரம் எழில்மிக்கதாக உள்ளது.

இறைவனின் மழுவுக்கு அருகில் நாட்டியமாடும் தேவதையும் தலைக்கு மேல் கந்தர்வர்களும் அமைந்துள்ளனர்.

இறைவன், இறைவியின் பாதங்களுக்குக் கீழே பீடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சிற்பத்தைச் சுற்றி சண்டேசுவரர் வரலாற்றுக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

இந்த சிற்பத்தின் வலப்புறம் சிவலிங்கமும் அதன்மீது குருந்த மரமும் புடைப்புச் சிற்பமாக உள்ளன. மரக்கிளைகளுக்கு நடுவே எச்சதத்தன் ஒளிந்திருந்து பார்ப்பது செதுக்கப்பட்டுள்ளது. இதன்மீது சண்டேசுவரர் தன்னை வெட்டும் வேளையில் எச்சதத்தன் வலது கையை உயர்த்தித் தடுத்தவாறு இடதுகையை மண்ணில் ஊன்றி சாய்வதையும் காண்கிறோம். கீழே சிவலிங்கத்தை வழிபடும் சண்டேசுவரர் காட்டப்பட்டுள்ளார்.

இடப்புறம் மேலே இரண்டு முனிவர்கள் அமர்ந்துள்ளனர். அதற்குக் கீழே இரண்டு மாடுகளும் ஒரு கன்றும் உள்ளன. அதற்கும் கீழே மூன்று பசுக்களும் பாற்குடங்களை உதைக்கும் எச்சதத்தனும் உள்ளனர். அதற்கும் கீழே சண்டேசரும் அவரை பிரம்பால் அடிக்கும் எச்சதத்தனும் காட்டப்பட்டுள்ளனர்.



இது உலகப் புகழ்பெற்ற கலை வடிவமாகும்.(தாராசுரம்) ஐராவதேசுவரர் ஆலயத்தில் அமைந்துள்ள அறுபத்துமூவர் வரலாற்றுத் தொகுதியில் இடம் பெற்றுள்ள சண்டேசுவரர் வரலாற்றுச் சிற்பத்தில் இறைவன் சண்டீசருக்கு அருள்பாலிப்பது இந்தச் சிற்பத்தை அடியொற்றியே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

Koviloor Digital Library

தாராசுரம் ஐராவதேஸ்வரர் ஆலயத்து அறுபத்து மூவர் வரலாற்றுச் சிற்பத் தொடரில் சண்டேசுவரர் வரலாற்றுச் சிற்பங்கள்

சோழப் பேரரசர்களில் மூன்றாம் இராஜராஜன் என்று போற்றப்படும் மாமன்னனின் அதியுன்னதக் கலைப் படைப் பாகத் திகழ்வது தாராசுரம் ஐராவதேசுவரர் திருக்கோயிலாகும். தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம் பெருவுடையார் கோயில் போன்றவற்றை அடியொற்றியே இக்கோயிலும் அமைக்கப் பட்டுள்ளது என்றாலும், இது ஏராளமான கலைச் சிற்பங்களைக் கொண்டது. இதில் றியதும் பெரியதுமாக இடம்பெற்றுள்ள கணக்கற்ற சிற்பங்களின்சிறப்பைக் கருதி, அன்பர்கள் இதைக்கோடி சிற்பங்கள் நிறைந்த கோயில் என்று கொண்டாடுகின் றனர்.

இங்கே கோயிலின் முன்னே அமைந்த பலிபீடத்திற்கு சப்தசுவரங்கள் எழுப்பும் கற்களைக் கொண்டு படிகள் அமைக்கப் பட்டுள்ளன.

இக்கோயில் கருவறை புறச்சுவர்களில் அறுபத்து மூன்று நாயன்மார் வரலாறுகள், நந்திதேவர் வரலாற்றுக் காட்சிகள், அப்பர் வரலாறு ஆகியவை நெடுந்தொடர் புடைப் புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன. பெரிய புராணம் போற்றும் வரிசையிலேயே இங்குள்ள நாயன்மார் வரலாற்றுச் சிற்பங் களும் அமைந்துள்ளன.

இத்தொடரில் சண்டீசர் வரலாறும் இடம் பெற்றுள்ளது. இது நான்கு காட்சி களாகக் காட்டப்பட்டுள்ளது.வலமிருந்து இடமாக இக்காட்சிகளைக் கண்டால் முதல் காட்சியில் மரத்தடியில் தான் அமைத்த நெடிய மணல் லிங்கத்திற்கு சண்டீஸ்வரர் நின்றவாறு அபிஷேகம் செய்கிறார்.

இரண்டாவது காட்சியில் அவர் தந்தை யான எச்சதத்தன் காலால் பாற்குடங்களை உதைக்கின்றான். இரண்டு பாற் குடங்கள் எகிறி விழுகின்றன. மரத்தின் கீழ் இரண்டு மாடுகள் நிற்கின்றன.

மூன்றாவது தொகுப்பில் சண்டேசுவரர் வலது கையில் ஏந்தியுள்ள மழுவால் தந்தை யின் கால்களை வெட்டியுள்ளார். கால்கள் இரண்டும் வெட்டுண்டு இருக்க மறுபடி யும் வெட்ட முனைகிறார்.

நான்காம் தொகுப்பில் உயர்ந்த மேடை மீது உமையும் சிவனும் வீற்றிருக்கின்றனர். அம்பிகை வலக்கையில் மலரேந்தி இடது கரத்தை பீடத்தில் ஊன்றியுள்ளாள்.


இறைவன் மேற்கரத்தில் மான், மழு ஏந்தியுள்ளார். இறைவனுக்கு முன்பாகச் சண்டீசர் மண்டியிட்டு அமர்ந்துள்ளார்.

சிவபெருமான் முன் கரங்களால் அவன் தலையில் கொன்றை மலர் மாலையைச் சூட்டுகின்றார். சண்டேசுவரர் கைகளைக் கூப்பி வணங்கியவாறு பெருமான் செய்யும் அருளை ஏற்றுக் கொள்கின்றார்.

இந்த சிற்பம் தெற்குக் கோட்டத்தில் அமைர்ந்திருக்கும் தட்சணாமூர்த்தியின் திருவுருவத்திற்குக் கீழே அமைந்துள்ளது.

இந்த சிற்பத்தை தன் பாட்டன் இரா ஜேந்திரசோழன் கங்கை கொண்ட சோழ


Koviloor Digital Library



புரத்தில் அமைத்துள்ள சண்டீசுவரப் பிரசாத தேவர் வடிவத்தை அடியொற்றியே அமைத்துள்ளார். மேலும் இந்த ஆலயத்தின் மகா மண்டபத்தில் வடகிழக்கு முனையில் வடக்கு நோக்கி அமைந்த மாடத்தில் ஆதி சண்டீசர் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். *(அவரை 61ஆம் பக்கத்தில் பார்த்து மகிழலாம்.)*

சண்டேசுவரர் பூசித்த லிங்கம்

தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயிலில் கருவறையின் வடகிழக்கான ஈசான திக்கில் சண்டீசுவரர் ஆலயம் அமைந்துள்ளது. இந்தச் சந்நிதியில் பெரியதும் சிறியதுமான இரண்டு சண்டீசர் வடிவங்கள் உள்ளன. இந்தச் சந்நிதியின் கிழக்கில் இதனோடு இணைந் தவாறு சந்நிதி ஒரு அமைக்கப்பட்டு, அதில் அழகிய சிவலிங்கத்தை அமைத்துள் ளனர். இதனை சண்டேஸ்வரர் வழிபட்ட லிங்கம் என்கின்றனர். இப்படி சண்டீசர் சந்நிதியை ஒட்டி அவரால் வழிபட்ட லிங்கத்திற்கும் ஆலயம் அமைந்திருப்பதை வேறெங்கும் காண முடியவில்லை.



அன்பர்கள் இதனை சண்டீசர் பூசித்துக் கொண்டிருக் கும் சண்டேசுவரலிங்கம் என்பர். சிலர் பெரிய சிவலிங் கத்தை வழிபடும் போது அதன் ஈசான திசையில் ஒரு சிவலிங்கத்தை அமைத்து வழிபட்டால் வெற்றி மேல் வெற்றி கிடைக்கும் என்று கூறுகின்றனர். இந்த லிங்கத் தை ஈசானத்துப் பெருந்தேவர் என்று அழைக்கின்றனர்.

Koviloor Digital Library

தன்னுடலோடே சென்றவன்

உடல் என்பது உயிர் வாழும் கூடு, உயிர் பிரிந்த பின் அந்த வெற்றுக் கூடு மண்ணில் சாய்ந்து விடுகிறது. இந்தக் கூடு பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் ஆனது. உயிர் அதைவிட்டுப் பிரிந்தபின் அது மீண்டும் பஞ்ச பூதங்களில் கலந்து ஒன்றி விடுகிறது. உடலை அழியாத பொன்னாகும் வித்தையைத் தேடி சித்தர்கள் ஓயாது முயன்று, ஓரளவு வெற்றியும் பெற்றனர். அந்த வெற்றியும் நிலையானதல்ல. அதுவும் ஒருநாள் அழியக் கூடியதே.

பூத உடலையே பொன்னுடலாக்கிக் கொண்டு இறைவனடி சேர்ந்தவர் சிலர். அவர்களில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலாமவர்.

நாம் அறிந்த வரையில் பூத உடலோடேயே இறைவன் அடியில் நீங்காதிருந்து தொண்டு செய்து வாழும் பேறு பெற்றவர் சண்டீசர் ஒருவரேயாவார். சேக்கிழார் பெரிய புராணத்தில்,

வந்து மிகை செய் தாதை தாள்
மழுவால் துணித்த மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே
அரனார் மகன் ஆயினார்

என்று குறித்துள்ளார்.

இது மனிதன் தெய்வமாகலாம் என்ற கருத்தைக் காட்டுகிறது. இறையருளால் அவனது உடம்பு ஒளி பெற்றுப் பொன் உடம்பாகி விட்டால் அவன் தேவனாகி விடுகிறான். அந்நிலையில் அவன் மனிதனல்ல தேவனேயாவான்.

அப்படியின்றி, பூவுடலில் வாழ்ந்த உடலோடேயே பொன்னுலகம் புகுந்து அதற்கும் மேலாக இறைவனின் அருகிருந்து வாழும் வாழ்க்கையே மனிதன் தெய்வமாகி வீற்றிருக்கும் நிலையைக் குறிப்பதாகும். அது சண்டீசர் வாழ்வில் நடந்துள்ளது. ❀

பலி தேவராக விளங்கும் சண்டேசுவரர்

சில சிற்ப நூல்களும், பூஜாபத்ததி நூல்களும், ஆலய வழிபாட்டில் உள்ள சிவலிங் கங்களை 1. தைவிக லிங்கம், 2. மானுஷ லிங்கம், 3.சுயம்புலிங்கம், 4.ஆரிஷ லிங்கம், 5.பாண லிங்கம், 6.ராட்சசலிங்கம், 7.திவ்யலிங்கம் என ஏழுவகையாக வகைப்படுத்துகின்றன. இவ்வரிசையில் நான்காவதான ஆரிஷ லிங்கம் என்பது ரிஷிகளால் பூஜிக்கப்படும் லிங்கங்கள் ஆகும். அகத்தியர்,புலத் தியர், கண்ணுவர், கௌதமர் போன்ற ரிஷிகளால் பூஜிக்கப்படும் லிங்கங்கள் ஆரிஷ லிங்கம் எனப்படும்.



ரிஷிகள் என்பவர்கள் மனிதர்கள் சுகமாக வாழ்வதற்கான வழிகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்டவர்களாவர். இவர்கள் வழிபட்டுப் பேறு பெற்றி லிங்கங்களைச் சுற்றி அமையும் பலிபீடங்களில் இடபம், அக்னி, சப்தமாதர்கள், கணேசு வரர் சுப்பிரமணியர், ஜேஷ்டாதேவி, துர்க்கை சண்டேசுவரர் ஆகிய **எண்மர்** பலிதேவர்களாக இருந்து பலிபூசையை ஏற்கின்றனர். ❀

Koviloor Digital Library

சண்டேசுவரர் ஓலை


சிவனடியார்களுக்கு அவர்கள் செய்யும் சிவபூஜையின் பயனால் செல்வம் கிடைக்கிறது. அப்படிக் கிடைக்கும் செல்வத்தை முறையாகச் செலவிட்டு அதன் பயனாகக் கிடைக்கும் இன்பத்தை அடையச் செய்பவர் சண்டேசுவர நாயனார்.

அவர் சிவபெருமானின் அணுக்கத் தொண்டராகவும், சிவாலயங்களின் தலைமைப் பொறுப்பாளராகவும் இருக்கிறார். சிவாலயங்களில் நடைபெறும் அனைத்துச் செயல்களும் அவருடைய ஆணைக்கு உட்பட்டே நடைபெறுகின்றன.

முன்னாளில் சிவாலயங்களில் இருந்து மக்களுக்கு அறிவிக்கப்படும் செய்திகள் யாவும் சண்டீசுவரர் பெயராலேயே அறிவிக்கப்பட்டன என்பதை வரலாற்றுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எடுத்துக்காட்டாக, ஒரு தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் பக்கத்தில் உள்ள ஊர்களுக்கு எழுந்தருள்வதாக இருந்தால் அவர் எழுந்தருளும் நாளுக்கு முன்னதாகத் திருக்கோயிலில் இருந்து அவ்வூர் மக்களுக்கு ஓலை அனுப்பப்படும். அந்த ஓலையைச் சிவபெருமானின் அணுக்கத் தொண்டனாக விளங்கும் சண்டீசுவரரான தாம் எழுதுவதாகவே எழுதுவர். இதில், இந்தத் தேதியில் இன்ன நேரத்தில் அவர்களது ஊருக்கு சுவாமி எழுந்தருள இருக்கிறார் என்றும், அதையொட்டி வழியில் முளைத்துள்ள செடி, கொடிகளை வெட்டிக் கற்களை விலக்கி முட்களைப் பொறுக்கித் தூய்மைப்படுத்தி, நீர் தெளித்து மெழுகி வைக்க வேண்டும் என்றும் அவர் ஆணையிடுவதாகச் செய்திகளை எழுதிக் கோயில் அதிகாரிகள் அனுப்புகின்றனர்.

இந்த ஓலையை ஆலய நிர்வாகி, கிராம அதிகாரி போன்றவர்கள் பெயரால்



Koviloor Digital Library

அனுப்பப்படாமல் அத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சண்டீசுவரர் பெயரால் எழுதி அனுப்பப்பட்டது. அதனால் அன்பர்கள் இதனைச் **சண்டீசரின் ஓலை** என்று அழைக்கின்றனர்.

இந்தக் கடிதத்தைச் சண்டீசுவரர் சன்னதியில் வைத்து வழிபாடுகள் நடத்திய பின், சிவபெருமானின் ஆலயப் பிரசாதத்துடன் உரிய ஊர்அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் அனுப்பப்படும். அதற்கு முன்னதாகவே ஒருவர் சென்று மேற்படி ஆலயத்திலிருந்து ஓலை வரும் செய்தியை உரியவர்களுக்கு அறிவிப்பார். ஊர் மக்கள் ஒன்று கூடி மேள, தாளம் முழங்க ஊர் எல்லைக்கு வந்து அந்த ஓலையைப் பெற்றுக் கொள்வர்.

ஓலையை ஊர்வலமாக எடுத்துச் சென்று ஊர்ப் பொதுவில் வைத்து வழிபட்டு, எல்லோரும் அறிய அது படிக்கப்படும். எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்படும். ஓலை கொண்டுவந்தவருக்கு உரிய மரியாதைகள் செய்து திருப்பி அனுப்புவர்.

இப்படி ஆலயத்திற்குரிய விழாவை அறிவிப்பதற்காக மட்டுமின்றி, ஆண்டின் முதல் அறுவடைக்கான அறிவிப்பு, திருப்பணி விவரம் முதலியவையும் சண்டீசர் பெயரால் ஓலை அனுப்பி செய்தி அறிவிக்கப்படும்.

மேலும், கோயில் நில விற்பனை, பரிவர்த்தனை முதலியனவும் சண்டீசர் பெயராலேயே நடைபெற்றன. கோயில் நிலங்களை வாங்கும் போது அளிக்கும் தொகைக்குச் சண்டீசுவரப் பெருவிலை என்பதும் பெயராகும்.

கல்வெட்டுக்களில் சண்டீசர் ஓலை என்னும் பெயரால் செய்தி பொறிக்கப்பட்டுள்ளது. மேல்மருவத்தூரை (அச்சிறுபாக்கம்) அடுத்த பெரும்பேர் கண்டிகையில் உள்ள தான்தோன்றீசுவர் ஆலயத்தில் இத்தகைய கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. அது,

சண்டேச்சுரன் ஓலை சாகரஞ்சூழ் வையகத்தீர்
சண்டீச்சரன் கருமம் ஆராய்க - பண்டேய்
அறம்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமை சென்னிமேல் கொள்க.

என்பதாகும். இப்பாட்டின் பொருள்;

கடல்களால் சூழப்பட்டுள்ள இந்த உலகத்தில் வாழும் அன்பர்களே, ஸ்ரீகண்டரான சிவபெருமான் திருக்கோயில்களில் நடைபெறும் செயல்பாடுகளை ஆராய்ந்து செயல்படுத்துங்கள், முன்னமே அறம் செய்து அதற்கான தருமங்களை நிறுவியுள்ள தருமவான்கள்; தமது முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ள தருமங்களை வழிவழியாகப் போற்றிக் காத்து நடத்தி வருபவர்கள் பாதங்களைத் தலை மீது கொள்ளுங்கள். இது சண்டீசுவரர் ஆணையாகும்.

இதன் கருத்து:- சிவதருமங்களை ஏற்படுத்தியவர்களைப் போற்றுவதும் அதைக் காப்பவர்களுக்கு ஆதரவாக இருப்பதும் அவர்களை வணங்கிப் போற்றுவதும் சிவபுண்ணியச் செயல் என்பதாகும்.

இப்பாடல் பலவேறு சாசனங்களின் இறுதியிலும் இடம் பெற்றுள்ளது. உடையார் பாளையம் திருக்களாவுடைய மகாதேவர் கோயில், விழுப்புரம் மாவட்டம் திரு வாமத்தூர் அபிராமேசுவரர் கோயில் வெண்ணையூர் விசுவநாதர் கோயில். புதுக்கோட்டை மாவட்டம் கள்ளம்பட்டி மதீசுவரர் கோயில் முதலியவற்றில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களில் இப்பாடலும் பொறிக்கப்பட்டுள்ளது.

இவை, அந்நாளில் சிவாலயங்களில் சண்டீசருக்கு அளிக்கப்பட்டிருந்த பெருமதிப்பைப் புலப்படுத்துகின்றன.

Koviloor Digital Library

சண்டீசர் தேவர்களுக்குத் திருமுகம் கொடுக்கும் செம்மலாகத் திகழ்வதை திருவாரூர்ப் புராணம் கூறுகிறது. இதன் காப்புச் செய்யுளில் இடம் பெற்றுள்ள துதி,

தாரைவெள் இலை வேல் மைந்தன்
தன்னோடும் தலைவியோடும்
வீரசிங்காதனத்து மேவினோன்
விழாவிற்கு எய்தச்
சீர்கெழு தேவர்க்கெல்லாம்
திருமுகம் எழுதும் செம்மல்
வார்தரு கமலச் செந்தாள் மனத்தினில்
வழுத்தி வாழ்வாம்.

என்பதாகும். இதன்பொருள் நீண்ட வெண்மையான இலை போன்ற வேலாயுதத்தை ஏந்தும் முருகனோடும் கொண்டி என்னும் பார்வதி தேவியோடும் வீரசிங்காதனத்தில் வீற்றிருந்தருளும் தியாகராஜப் பெருமானின் வசந்த விழாவிற்கு வரும்படி தேவர்களுக்குத் திருமுகம் எழுதுகின்ற செம்மலாகிய சண்டேசுவரப் பெருமானின் திருவடிகளைப் பணிந்து வாழ்வாம் என்பதாகும்.

தேர் சிற்பத்தில் சண்டேசுவரர்



ஆலயத் திருவிழாக்களின் அங்கங்களில் ஒன்றாக இருப்பது தேர்த்திருவிழா ஆகும். தேரின் அடிப்பகுதியில் அமையும் தட்டில் அத்தேருக்குரிய தெய்வங்களைத் துணைத்தெய்வங்களோடு அமைப்பது வழக்கம். இவ்வகையில் சிவாலயத் தேர்களில் பஞ்சமூர்த்திகளை அமைப்பது வழக்கம். பஞ்சமூர்த்திகளில் ஒருவராக சண்டீசரும் விளங்குகின்றார்.

இங்கே படத்தில் அத்தகைய தேர் முகப்புச் சிற்பம் ஒன்றைக் காண்கிறோம். இதில் நடுவில் சிவபெருமான் நின்றகோலத்தில் காட்சி தருகிறார். அவரது முன் கரங்கள் அபய,வரத முத்திரை காட்ட மேற்கரங்களில் மானும் மழுவும் உள்ளன. அவரது இருபுறமும் நந்தியும் அம்பிகையும் உள்ளனர். அவருக்கு இடப்புறம் அம்பிகை திருவுருவம் உள்ளது. அம்பிகை மேற்கரத்தில் தாமரை, ஜெபவடம் ஏந்தி முன்கரங்களில் அபய வரத முத்திரைகளைத் தாங்கியுள்ளாள். இவளது இருபுறமும் அநிந்திதை, கமலினி ஆகிய சேடியர் இருக்கின்றனர்.

சிவபெருமானின் இடப்புறம் சண்டேசுவரர் நிற்கின்றார். அவர் தோளில் மழுவைத் தாங்கியுள்ளார். அவரது இருபுறமும் இரண்டு சிவனடியார்கள் காட்டப்பட்டுள்ளனர். இந்த பலகைச் சிற்பத்தின் இரண்டு பக்கங்களிலும் பெரிய கந்தர்வர்களின் திருவுருவங்கள் வைக்கப் பட்டுள்ளன.

Koviloor Digital Library

சண்டேசுவரர் ஆலயம்

சிவபெருமான் சண்டீஸ்வரருக்குப் பொற்கோயில் அளித்து அதில் வீற்றிருக்கும்படிச் செய்ததாகக் கூறப்பட்டாலும் அவருக்கெனத் தனி ஆலயம் அமைக்கும் வழக் கம் இல்லை. அவரை சிவாலயத்தில் சிவபெருமானுக்குரிய அஷ்ட பரிவாரங்களில் ஒருவராகவே காண்கிறோம். அவர் சிவா லயத்தில் கருவறையின் ஈசான மூலையில் அமைந்த தனிச்சந்நிதியில் தெற்கு நோக்கியவாறு வீற்றிருக்கின்றார்.

சிவாலயங்களில் சிவபெருமானின் கருவறைக்குத் துணைக் கோயிலாகவே அவரது ஆலயம் அமைக்கப்படுகிறது.

ஆகமநூல்களின் உத்திரபாகத்தில் சண்டீசருக்கெனத் தனி ஆலயம் அமைப்பதற்கான விதிகள் கூறப்பட்டுள்ளன.ஆனால் இந்த ஆலயங்கள் பக்த சண்டீசருக்கு ஆனதல்ல இவைகள் ஆகமம் கூறும் நான்முக சண்டீசுவரருக்கே உரியதாகும்.

இவற்றில் கூறப்பட்டுள்ளபடி அமையும் சண்டேசுவரர் ஆலயங்களில்கருவறையில் சண்டேசுவரர் முதன்மைத் தெய்வமாக எழுந்தருளுகின்றனர். அவருக்குத் துவாரபாலகர்களாக சண்டானுகன், சண்டபூதி என்பவர்கள் அமைக்கப்படுகின்றனர்.

அவரது அஷ்டமூர்த்தங்களாக அவரைச் சுற்றி ருத்ர பத்தர், ருத்ரசண்டர், சண்டபர், மகாபலர் ஸ்தாவிரர், டங்க பாணி(மழுவாளன்) ஈஸ்வர சேவகன், ருத்ர கோபஜர், ஆகிய எண்மர் எழுந்தருளுவிக்கப்பட வேண்டும்.



சண்டேசுவரர் ஆலயம்-தஞ்சைப் பெரிய கோயில்

Koviloor Digital Library

சண்டேசுவரரின் தேவியாக சண்டசக்தி எனப்படும் தேவி சொல்லப்பட்டு உள்ளாள். அவளை தர்மநீதி எனவும் அழைக்கின்றனர்.

சண்டீசருக்கு எதிரில் பலிபீடமும் ரிஷபமும் அமைக்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளன.

சண்டீசருக்கான தனி ஆலயம் பற்றிய செய்திகளை விரிவாக ஆகமங்கள் குறித்த போதிலும் அத்தகைய ஆலயங்கள் எங்கும் காணப்பட வில்லை.அவை இருந்ததற்கான அறிகுறிகளும் கிடைக்கப் பெறவில்லை

மாமன்னர்களும் அத்தகைய ஆலயங்களை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

ஆகமம் போற்றும்சண்டீசருக்கான தனி ஆலயம் என்பது ஏட்டளவில் மட்டுமே காணப்படுவதாகும்.

சோழமன்னர்கள் பக்த சண்டீசர் சந்நிதியை துணை ஆலயத்தைப் போல் பெரியதாக அமைத்தனர். தஞ்சவூர், கங்கை கொண்ட சோழபுரம், திருக்கடவூர் போன்ற தலங்களில் உள்ள பக்த சண்டீசர் சந்நிதி பெரியதாகவும் முகமண்டபம், அர்த்த மண்டபம், கருவறை அதன்மீது ஸ்ரீ விமானம் போன்ற அமைப்புகளுடனும் உள்ளது.

இந்த பக்த சண்டீசர் ஆலயங்களுக்குப் புறச் சுவர்களில் கோட்டங்கள் அமைக் கப் படுவதில்லை. அதனால் கோட்ட தெய்வங்களும் நிலைப்படுத்துவதில்லை.

என்றாலும் தஞ்சைப் பெரிய கோயிலில் அமைக்கப்பட்டுள்ள சண்டீசர் சந்நிதியில் முப்புறமும் கோட்டங்கள் அமைக்கப் பட்டுள்ளன.அதில் சண்டீசரின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது குறிப்பிடத்தக்க அமைப்பாகும்.

சண்டீசர் சந்நிதியில் கோமுகம் கிழக்கு நோக்கியே அமையும். அவருக்கு அபிஷேகம் செய்த நீரை பிரசாதமாக ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

மேலும் விமானங்களில் ரிஷபத்தின் உருவங்களும் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

காசியில் சண்டேசுவரலிங்கம்:

காசியில் விசுவநாதரை முதன்மையாகக் கொண்டு கணக்கற்ற லிங்கங்கள் வழிபாட்டில் இருக்கின்றன. அவற்றில் முதன்மை பெற்ற 64 லிங்கங்களில் சண்டேசுவரலிங்கம் என்பதும் ஒன்றாகும். இதற்கும் தென்னாட்டு பக்த சண்டேருக்கும் தொடர்பில்லை.

சிவபெருமானுக்கே சண்டன் என்பதும் பெயராகும். அதற்கு அதியுள்ள வீரச் செயல்களைச் செய்பவன் என்பது பொருள். அவன் தன் திருவடியை ஆகாசத்தை நோக்கி உயர்த்தி ஆடிய தாண்டவம் சண்ட தாண்டவம் எனப்படுகிறது.

மேலும் சண்டி என்பது காளிக்குரிய பெயராகும். காளி வழிபட்ட சிவலிங்கமும் சண்டிகேசுவரர் என்றே அழைக்கப்படுகிறது.காசியில் கண்டோன்மென்ட் பகுதியில் உள்ள சதர் பஜாரில் கரியப்பா மார்க் எனும் பகுதியில் பீஷ்மசண்டிதேவி, சண்டிதேவி ஆகிய சக்தி கோயில்கள் உள்ளன.

இதில் சண்டிதேவி கோயிலுக்கு எதிரில் அவளால் பூஜிக்கப்பட்ட சண்டிகேசுவரர் எழுந்தருளியுள்ளார். இவர் ஆலயத்திற்கு அருகில் முண்டவிநாயகர் பாசபாணி விநாயகர் ஆலயங்கள் உள்ளது. சண்டீசுவரரை வழிபடுவதால் மறுபிறப்பு உண்டாகாது. எளிதில் மோட்சம் அடையலாம் என்கின்றனர்.

Koviloor Digital Library

வைரவன் பட்டி வளரொளி நாதர் கோயிலில் இருக்கும்
ஒற்றைக் கல்லால் அமைந்த சண்டேஸ்வரர் சந்நிதி

ஆலயங்களில் சிறிய சந்நிதியாக இருந்தாலும், அதைப் பல துண்டுக் கற்க ளைக் கொண்டு வேண்டியவாறு செதுக்கி இணைத்துக் கட்டும் நிலையே பொதுவாக இருந்து வருகிறது.

பல்லவ மன்னர்களே முதன் முதலில் ஒரு பெரிய பாறையைத் திட்டமிட்டுச் செதுக்கி, ஆலயங்களாக உருவாக்கி அற்பு தம் விளைவித்தனர். மாமல்லபுரத்திலுள்ள கணேசரதம்,பாண்டவ ரதங்கள், வலையான் குட்டை ரதம், பிடாரி ரதம் முதலியவை இதற்குச் சிறந்த உதாரணங்களாகும். பாண் டியர்களும் இத்தகைய பல கற்கோயில் களைச் சமைத்துள் ளனர்.கழுகு மலையில் அமைந்துள்ள வெட்டுவான் கோயிலும் இதையொத்ததாகும். இவர்களுக்குப் பிறகு யாரும் இம்முயற்சியில் ஈடுபட வில்லை.

சென்ற நூற்றாண்டில்செட்டிநாட்டுக் கலைஞர் ஒருவர் இம்முயற்சியில் ஈடு பட்டுச் சிறப்பான சண்டீசர் சந்நிதி ஒன்றை அமைத்துள்ளார்.

நகரத்தார் எனப்படும் செட்டிமார் களுக்கு உரிய முதன்மைக் கோயில்கள் ஒன் பதாகும். பிற இனத்தவர் கோத்திரங்களைக் கொண்டிருப்பதைப் போல இவர் கள் இந்த ஒன்பது கோயிலை அடிப்படை யாகக் கொண்டு தம்மை வகைப்படுத்திக் கொண் டுள்ளனர். ஒரு கோயிலைச் சேர்ந்த அனை வரும் சகோதர சகோதரிகளாவர்.

இந்த ஒன்பது கோயில்கள் முறையே 1.பிள்ளையார்பட்டி - கற்பகவிநாயகர், சிவ காமசுந்தரி உடனாய திருவீசர்; 2.இரணியூர் - சிவபுரந்தேவி உடனாய ஆட்கொண்ட நாதர்; 3.மாத்தூர் - பெரியநாயகி உடனாய ஐநூற் றீசுவரர்; 4.சூரக்குடி - ஆவுடைநாயகி உடனாயதேசிகநாயகர்;5.இலுப்பைக்குடி - சௌந்திரநாயகி உடனாய சுயம் பிரகாசே சுவரர்;6.நேமம்- சௌந்திரநாயகி உடனாய ஜயங்கொண்டசோழீசுவரர்;7.வேளங்குடி- வடிவுடை அம்மை உடனாய கண் டேகசு வரர்; 8.வைரவன்படி - காமாட்சியம்மை உடனாயவளரொளிநாதர் ;9.இளையாத் தங் குடி- நித்திய கல்யாணி உடனாய கயிலாய நாதர் என்பனவாகும்.

தமிழகத்தில் உள்ள சண்டிகேசுவரர் சன்னதிகளில் வயிரவன் பட்டியிலுள்ள சன்னதி குறிப்பிடத் தக்கது. வேறு எங்கும் காண இயலாத வகையில் இச்சன்னதி ஒரே கல்லினால் தனிக்கோயிலாக எழுப்பப்பட் டுள்ளது.

சுமார் 20 டன் எடையுள்ள பெரும்கல் லைக் குன்றக்குடி-திருப்பத்தூர் நெடுஞ் சாலைக்குத் தெற்கே உள்ள வயிரவன் பட்டி மலையில் இருந்து ஒரே கல்லாக வெட்டி, சகடை வண்டியில் எடுத்து வந்து அதை

Koviloor Digital Library

நுட்பமாகக் குடைந்து கோயிலாக்கி அதில் சண்டி கேசுவரரை எழுந்தருளச் செய்து இருக்கிறார்கள். அந்தக் கல் எடுக்கப்பட்ட இடத்தில் ஏற்பட்ட பள்ளத்திற்கு சண்டி கேசுவரர் பள்ளம் என்ற பெயர் இன்றும் மக்கள் வழக்கத்தில் இருக்கிறது. இவ்வாறு ஒரே ஊரில் இருந்து வெட்டி எடுத்த கல்லைக் கொண்டு அதே ஊர்க்கோயிலின் சன்னதியாகத் தோற்றுவித்துள்ள பெருமை நாட்டுக் கோட்டை நகரத்தார்க்கே உரியது.

இது மலையிலிருந்து வெட்டி எடுத்த ஒரே கல்லைக்கொண்டு, கட்டடக் கோயில் ஒன்றில் எழுப்பப்பட்ட தனிக்கோயில் ஆகும். இத்தகைய கட்டடச் சிறப்பு வயிரவன்பட்டிக் கோயிலுக்கே உரியது எனலாம்.

இக்கல்லை இங்கு அமைத்த பின்பு அதில் சன்னதியின் புறச் சுவரை அதிட்டானம் முதல் கபோதம் வரை நுட்பமாகச் செதுக்கி உள்ளனர். இதன் அதிட்டானம், உபானம், ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், பட்டிகை, வேதிகை ஆகிய உறுப்புகளுடன் அமைந் துள்ளது. சுவரைச் சுற்றிலும் மூன்று திசைகளிலும் தேவ கோட்ட மாடங்களும், அரைத் தூண் களும் அலங்கரிக்கின்றன.

தேவகோட்ட மாடங்களும், அரைத் தூண்களும், அலங்கரிக்கின்றன. தென் திசை நோக்கி உள்ள வாயிலின் இருபுறமும் தல மரத்தின் கீழ்உள்ள லிங்கத்தையும் அருகில் உமையாளையும் மலர் கொண்டு பூஜிக்கும் சண்டிகேசுவரரையும் சண்டிக்குப் பதம் அளிக்கும் சண்டேசஅனுக்கிரக மூர்த்தியையும், அழகிய புடைச் சிற்பமாகத் தோற்றுவித் துள் ளனர்.

இச்சன்னதியின் சிகரம் மட்டும் சுதையாலானது.

கிரீவ கோட்டங்களின் நான்கு திசைகளிலும் மழுவும் மானும் ஏந்தி இருந்த கோலத்தில் அருள்பாலிக்கும் சிவனும், இவரது பக்கங்களில் கைகளைப் பணிவோடு மடித்த நிலையில் தாடியும், மீசையும் கொண்டு நிற்கும் முனிவர்க ளைக் காண்கிறோம். வேதிப் படையின் நான்கு மூலைகளிலும் கைகளைக் கூப்பி வணங்கியவாறு வீற்றிருக்கும் சிவகணங்களும் அந்தப் பக்கங்களில் இரட்டை நந்தியும் அமைக்கப்பட்டுள்ளன. வட்ட வடிவான சிகரத்தைக் கட்டு மாலையும் கண்ணாடிச் சட்டமும் அலங்கரிக்கின்றன. அதன் மேல் மகாபத்மம் விரிந்து வனப்பூட்டுகிறது. இதன் காலம் கி.பி. 1864- 1894 என்கின்றனர்.

சன்னதியில் சண்டிகேசுவரர் இடது காலை மடித்து, வலது காலை இருக்கையில் தொங்கவிட்டு, நான்கு கைகளுடன் நிலைப் படுத்தப்பட்டுள்ளார்.

இவரது மேல் வலக்கரம் மழுவையும், இடக்கரம் பாசத்தையும் கடக முத்திரையில் பற்றியுள்ளது. கீழ்க்கரங்கள் இரண்டும் அபய வரதகரமாக அமைந்து அருள் பாலிக்கிறது. சண்டிகேசுவரரின் தலையை எளிய சடா மகுடம் அலங்கரிக்கிறது. இச்சிற்பம் நாச்சியாபுரம் அருகேயுள்ள கம்பனூர் மலையிலிருந்து கொண்டு வரப்பட்ட கரிய நிறக் கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மார்கழித் திருவாதிரை நாட்களிலும் பெருந்திவிழாக்களின் அங்கமாகவும் நடைபெறும்சக்திஊடல் விழாக்களில் முதலில் சண்டேசுவரர் சென்று ஊடல் தீர்க்கமுயல்வதும் அது முடியாததால் சுந்தரர் சென்று ஊடல் தீர்ப்பதாக விழா நடக்கப்படுகிறது. ஊடல் விழாவின்போது சண்டேசுவரை சிறுபல்லக்கில் அமர்த்தி உலாவரச் செய்கின்றனர்.

Koviloor Digital Library

சண்டேசுவரர் திருவிழா



சிவாலயப் பெருந்திருவிழாவின்போது காலையிலும், மாலையிலும் நடைபெறும் வீதியுலாக்களில் சிவபெருமானுடன் சண்டேசுவரரும் பவனி வருகின்றார்.

சில ஊர்களில் பத்தாம் நாள் இரவில் பஞ்சமூர்த்திகளின் வீதியுலாவும் மௌன உற்சவம் முடிந்ததும், பெருமான் ஆலயத்திற்குள் வந்து கொடிமரத்தின் முன்பு நிற்பார். கொடியிறக்கம் நடைபெறும். கொடிச்சீலையுடன் சண்டேசுவரர் பவனி வந்து திக்பந்தன விசர்ஜனம் செய்யும் வழக்கம் உள்ளது.

பெருந்திருவிழா முடிந்த பிறகு (கொடி இறக்கம் நடைபெற்ற மறுநாள்) பத்தோற்சவம் செய்ய வேண்டுமென்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன. பக்தர்களில் அதியுன்னத இடத்தைப் பெற்றிருப்பவரும், தொண்டர்க்கு நாயகமாக இருப்பவரும் சண்டீசர் என்பதால், பக்தர்கள் அனைவருக்கும் சேர்த்து, அவருக்கு விழா கொண்டாடுகின்றனர். இதில் சண்டேசுவரர் அலங்கரிக்கப்பட்டு, இடப வாகனத்தில் பவனி வருகின்றார்.

சண்டேசுவரர் உலாத்திருமேனிகள்



அனைத்துச் சிவாலயங்களிலும் கருவ றைக்குத் தென்கிழக்கு முனையில் கோமுகத்தை ஒட்டியவாறு அமைந்த சிறிய சந்நிதியில் சண்டீசுவரர் மூலமூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். இதில் அவர் அமர்ந்த கோலத்தில் வலக் கரத்தில் மழுவும் இடதுகரத்தில் சிம்ம கரண முத்திரையும் தாங்கியுள்ளார்.

உலாத் திருமேனிகளாக அமைக்கும்போது பெரும்பாலும் அவரை நின்ற கோலத்திலேயே அமைத்துள்ளனர். இவற்றில், கூப்பிய கரங்களுடன் தோளில் மழுவைத் தாங்கி யுள்ளார்.

சில தலங்களில் மூலமூர்த்தியைப் போலவே அமர்ந்த கோலத்திலும் அமைத்துள்ளனர். இவற்றில் சுகாசனத்தில் அமர்ந்திருக்கும் அவர் இவற்றில் வலது கரத்தில் மழுவும், இடது கரத்தில் சிம்ம கர்ண முத்திரையும் தாங்கியுள் ளார். சிதம்பரம்முதலிய சில தலங்களில் மட்டுமே அமர்ந்த கோலத்திலான சண்டீசரைக் காண முடிகிறது.


Koviloor Digital Library

சண்டீசரும் வாகனபவனியும்

சண்டீசர் பக்தசிரோன்மணியாக இருப்பவர். அவர் சதா சிவத்தியானத்தில் இருப்பவர். சிவபெருமான் பெருந்திருவிழாவில் வீதிவலம்காணும்போது அவருடன் இவரும் பவனிவருகிறார்.

பொதுவாக, அவரைச் சிறிய விமானத்தில் எழுந்தருள வைத்தே விழா காண்கின்றனர். சிவபெருமானுக்குக் கொண்டாடப்படும் ரிஷபவாகன சேவையின்போது அவரும் சிறிய இடப வாகனத்தில் பவனி





வருகிறார். அவர் பவனி வரும் இடபத்திற்குச் **சண்டரிஷபம்** என்பது பெயர்.

ஒருசில ஆலயங்களில் அவர் யானை, குதிரை ஆகியவற்றிலும் வலம் வருகிறார். சென்னை கபாலீசுவரர் ஆலயத்தில் நடைபெறும் பங்குனிப் பெருவிழாவின் ஆறாம் நாளில் அவர் யானை வாகனத்தில் பவனி வருகிறார்.

திருவண்ணாமலையில் அவரைப் புலி வாகனத்தில் அமர்த்தி விழா காண்கின்றனர். அத்தலத்தில் வெளியிடப்படும் கார்த்திகை தீபப் பெருவிழா அழைப்பிதழ்களிலும் அவர் புலி வாகனத்தில் அமர்ந்திருப்பவராகவே அச்சிடுகின்றனர்.

திருவண்ணாமலையில் அவர் கார்த்

Koviloor Digital Library

திகை தீபநாளில் இந்திர விமானத்தில் பவனி வந்து அருள்பாலிக்கின்றார்.

ஆகமநூலில் ஆதிசண்டேசர் யானை, குதிரை முதலிய வாகனங்களில் பவனி வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

நாகூர் தலபுராணத்தில் ககோள வாகனத்தில் அமர்த்தி வீதியுலா நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. ககோளம் என்பது ரிஷிகள், பறவைகள், விலங்குகள் சூழ அமைக்கப்பட்டுள்ள பீடம் என்பர்.

இலங்கையில் உள்ள யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயத்தில் மயில் வாகனத்தில் சண்டீசுவரர் பவனிவந்து அருள்பாலிக்கின்றார்.

அம்பிகைக்குரிய **யமனீ** சண்டீசுவரி சிங்க வாகனத்திலும், முருகனின் சண்டீசரான சுமித்திர சண்டர் மயில் வாகனத்திலும், விநாயகரின் சண்டீசரான கணச் சண்டி யானை அல்லது எலிவாகனத்திலும் பவனி வருவதாகக் கூறுகின்றனர். ❀

தேரில்வரும் சண்டீசர்

சிவாலயங்களில்நடைபெறும் பெருந்திருவிழாவில் தேரோட்டம் சிறப்பாக நடை பெறுகிறது. பெரிய தலங்களில் ஐந்து தேர்கள் பவனி வருகின்றன. சிதம்பரம், திருவிடைமருதூர், திருவண்ணாமலை கோயிலூர் (திருஉசாத்தானம்) முதலிய ஊர்களில் பஞ்சரத பவனி என்னும் ஐந்துரதங்கள் பவனி வருகின்றன. முதல் தேரில் விநாயகரும் பெரிய தேரில் சிவ பெருமானும் அதற்கு இணையான சற்று குறைந்த உயரம் கொண்ட தேரில் அம்பிகையும் அதற்கடுத்த தேரில் வள்ளி தெய்வயானை உடனான முருகப்பெருமானும் இறுதியாக வரும் சிறியதேரில் சண்டீசரும் பவனிவருகின்றனர். ❀

மயில்வாகனத்தில் பவனி வரும் சண்டேசுவரர்

இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்தில் இருக்கும்புகழ்பெற்ற பழைய விநாயகர் கோயில் கயிலாசப் பிள்ளையார் கோயிலாகும்.

இக்கோயிலில் நடைபெறும் ஆனி மாதம், மார்கழி மாதம் பெருத்திருவிழாவின் இறுதியில் தீர்த்தோத்சவம் முடிந்து கொடி இறங்கியதும் சண்டேசுவரர் உற்சவம் நடை பெறுகிறது. இவ்விழாவில் சண்டேசுவரர் மயில் வாகனத்தில் பவனிவந்து காட்சி அளிக்கின்றார்.

இவ்வூரில் பெருந்திரு விழாவில் பவனிவரும் தெய்வங்களை வரவேற்கும் வகையில் நாள்தோறும் வாயிலில் பூரணகும்பம் வைக்கப்படுகிறது. இறைவன் தங்கள் வீட்டைக் கடந்ததும் பூரணகும்பத்து நீரை எடுத்து வீதிகளில்ஊற்றுவது வழக்கம்.

அவர் நடந்து சென்ற பாதையில், அவர் பாதம் பதிந்த தடத்தின்மீது மற்றவர் பாதம் பதிக்காமல் இருக்கச் செய்வதற்கு இப்படி தண்ணீர் விடுவதாகக் கூறுகின்றனர். தினமும் பூரண கும்பத்தில் நிரப்பப்படும் தண்ணீரை மாற்றும் இவர்கள் முதல்நாள் வைத்த தேங்காயை மட்டும்மாற்றாமல் அதையே பத்து நாட்களுக்கும் வைக்கின்றனர். பத்தாம் நாள் இரவில் இறுதியாக சண்டேசுவரர் வரும் போது இந்த தேங்காயை உடைத்து நிவே திக்கின்றனர். பூரணகும்பநீரை வழக்கப்படி சண்டீசர் சென்ற பாதையில் அடியழிப்பு நிகழ்வாக விட்டு விடுகின்றனர். ❀

Koviloor Digital Library




நான்முகச் சண்டேசுவரர்

Koviloor Digital Library

நான்முகச் சண்டேசுவரர்

நாம் வழக்கமாக ஆலயங்களில் கருவறைக்கு வடகிழக்கில் அமைந்த சிறிய சந்நிதியில் இரண்டு கரங்களுடன் சதா தியானத்தில் மூழ்கிய வாறு அமர்ந்திருக்கும் பக்த சண்டீசுவரரையே காண்கிறோம். சில ஆலயங்களில் பிரம்மதேவனின் வடிவை ஒத்த சண்டீசர் வடிவங்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. இவரைத் தொனி சண்டர் என்கின்றனர். இவரைப் பற்றிய செய்திகளைக் காண்போம்.



சிவபூஜா நூல்களில் சண்டிபதம் என்பது கோயிலை வழிநடத்தும் பொறுப்பான அதிகாரிக்கு உரிய இடமாகக் குறிக்கப்பட்டுள்ளது. இறைவனின் அருள் பெற்றவர்கள் அப்பதவியில் வீற்றிருந்து உரியவர்கள் அங்கு வரும்போது பொறுப்பினை அவர்களிடம் ஒப்படைத்து விட்டு அதற்கடுத்த மேல்நிலைக்குச் சென்று விடுவார்கள் என்று கூறுகின்றனர்.

அவ்வகையில் ஆதியில் சிவபெருமானால் படைக்கப்பட்டு, பொறுப்பை அளிக்கப் பட்டவர் த்வனிசண்டர் என்றும், பக்த சண்டேசுவசரர் இறைவனால் அப்பணிக்கு நியமிக்கப்பட்டதும் அவர் அதிலிருந்து விடுபட்டு மேனிலை அடைந்தார் என்றும் கூறப்படுகிறது.

நான்முக சண்டீஸ்வரரை ஆதி சண்டேசுவரர் எனவும் கூறுவர். பூஜாபத்ததி நூல்களில் இவரது திருவுருவம் சிறப்புடன் பேசப்பட்டுள்ளது.

ஆகம வழியில் வந்த பூஜாபத்ததி நூல்களில் காணப்படும் சண்டீஸ்வரத் தியான ஸ்லோகம்.

சண்டேசுவரஸ் சதுர்பாஹு:
சதுர்வக்த்ராஸ் திரிலோசன:
ப்பரன் கமண்டலும் சூலம் அக்ஷஸூத்ரம்
பரச் வதம் மஹோ ரகோப வீதாட்யஸ் -
தந்நிவர்த்தித கங்கண: த்யேயோ நவாம்பு
தாஸ்பாஸ: ஸமயாதி நியாமக:

Koviloor Digital Library

இதன்படி, இவர் நான்கு முகங்களும் நான்கு தோள்களும் உடையவர்.முகங்கள் தோரும் முக்கண்களைக் கொண்டவர், அகன்ற விழிகளும், வாய் இதழின் கடையில் கோரைப் பற்களும் கொண்ட முகத்தைக் கொண்டுள்ளார். தலையில் சடைகளை எடுத்துக்கட்டி சடாமகுடமாகப் புனைந்துள்ளார்.அதில் இளம்பிறை விளங்குகிறது. பெரிய பாம்பைப் பூணூலாகவும் சிறிய பாம்புகளைக் கங்கணமாகவும் அணிந்தவர். நீருண்ட மேகம் போன்று கருத்த நிறத்தினை இவர், கரங்களில் சூலம், மழு, கெண்டி, ஜெபமாலை முதலியவற்றைத் தாங்கியுள்ளார். சதா தியானத்தில் மூழ்கியுள்ளார்.

திருமீயச்சூர், திருக்கச்சூர் ஆலக் கோயில் முதலிய எண்ணற்ற ஆலயங்களில் அஷ்ட பரிவாரத்தில் ஒருவராக நான்முகச் சண்டியை அமைத்துள்ளனர்.

சோழர்கள் தம் ஆட்சியின் போது மண்மேல் தோன்றி மகத்தான செயலால் இறைவனால் ஆட்கொள்ளப் பட்ட பக்த சண்டீசுவரரைப் போற்றி பெருமைப்படுத்திய துடன், நான்முகச் சண்டீசுவரரை விலக்கி விட்டு அவரது இடத்தில் பக்த சண்டியின் திருவுருத்தை ஆலயத்தில் நிலைப்படுத்தத் தொடங்கி விட்டனர்.

சிலஆலயங்களைத் தவிர பெரும் பாலான ஆலயங்களில் இப்போது பக்த சண்டீசுவரரையே எழுந்தருளி வைத்து வணங்கி வருகிறோம்.



உலாத் திருமேனிகளைப் பொருத்த வரை பக்தசண்டீசுவரரே ஆலயங்களில் வைத்து வணங்கப்படுகிறார்.

திருவாவடுதுறை ஆலய கோயில் முற்றத்தில் பல்வேறு இடங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட கற்சிலைகளை வரிசையாக மேடை அமைத்து நிலைப்படுத்தியுள்ளனர். இவற்றில் ஐந்தாறு நான்முகச் சண்டியின் திருவுருவங்கள் காணப்படுகின்றன.

நான்முகச் சண்டீசர் திருவுருவம் ஏறத்தாழ பிரம்மதேவனின் திருவுருவைப் போலவே இருப்பதால் இவரை பிரம்ம தேவன் என்றும், பிரம்மசண்டீசுவரர் என்றும் குறித்துள்ளனர்.

சிதம்பரத்தில் சபையை ஒட்டி அமைந்துள்ள சண்டீசுவர சந்நிதியில் ஆகமம் போற்றும் நான்முகசண்டியும் பக்த சண்டியும் ஒருசேர அமைத்துள்ளனர். இங்கு இவரை பிரம்ம சண்டி என்று அழைப்பதுடன், பிரம்ம தேவனே இங்கு சண்டியாக எழுந்தருளியிருக்கிறான் என்றும் கூறுகின்றனர். இங்கு உலாத் திருமேனியாக இருப்பவர் பக்த சண்டியே ஆவார்.

ஆதி நான்முக சண்டேசுவரரை சந்நிதிகளில் அமைக்கும் போது அமர்ந்த நிலையிலும் கோபுர மாடங்களில் அமைக்கும்போது நின்ற நிலையிலுமாக அமைக்கின்றனர்.

சிவாலயங்களில் செய்யப்படும் பஞ்சா வரண பூஜையில் இந்த நான்குமுக சண்டீஸ்வரரே வழிபடப்படுகிறார்.

Koviloor Digital Library

சிவபஞ்சாவரணத்தில் சண்டேசுவரர்

சிவபூஜையில் பஞ்சாசனபூஜை, பஞ்சாவரண பூஜை ஆகியவை சிறப்புடன் செய்யப்படுகின்றன. பஞ்சாசன பூஜை என்பது சிவபெருமான் எழுந்தருளும் ஐந்து அடுக்கு ஆசனங்களையும் அதில் வீற்றிருக்கும் தேவர்களையும் பூசிப்பதாகும்.

இதன்படி, ஆதாரசக்தி, கூர்மாசனம், எட்டு நாகராஜர்களால் தாங்கப்படும் அனந்தாசனம், அதற்குமேல் எட்டு சிங்கங்களால் தாங்கப்படும் சிம்மாசனம், அதற்கு மேல் கணக்கற்ற இதழ்களைக் கொண்ட தாமரையான கமலாசனம், அதற்குமேல் விமலாசனம், அதற்கு மேல் சக்தி மண்டலம் ஆகியவை பூசிக்கப்படுகின்றன.

பஞ்சாவண பூஜை என்பது சிவபெருமானைச் சுற்றி அமைந்துள்ள ஐந்து ஆவரணங்களில் (வீதிகள்) வீற்றிருக்கும் தேவர்களைப் பூசிப்பதாகும்

இதன்படி பிரதம ஆவரணம் எனப்படும் பெருமானைச் சுற்றி அமைந்துள்ள முதல் ஆவரணத்தில் பஞ்சப் பிரம்ம மூர்த்தங்களோடு ஷடங்க தேவர்களும், இரண்டாவது ஆவரணத்தில் அஷ்ட வித்யேசுவரர்களும் மூன்றாவது ஆவரணரத்தில் அஷ்ட பரிவாரங்களும், நான்காவது ஆவரணத்தில் அஷ்டதிக்குப் பாலகர்களுடன் அதோதிக், பாதாளதிக் பாலகர்களான திக்பாலர்களும் ஐந்தாம் ஆவரணத்தில் தசாயுதங்கள் எனப்படும் பத்து சிவாயுதங்களும் பூசிக்கப்படுகின்றனர்.

இதில் மூன்றாவது ஆவரணத்தில் இருக்கும் அஷ்டபரிவாரங்கள் என்பது நந்தி, பிருங்கி, மகாகாளர், விநாயகர், இடபர், அம்பிகை, முருகர், சண்டேசுவரர், ஆகிய எண்மராவர். இதில் எட்டாவது பரிவார தெய்வமாக சண்டேசர் இருப்பதைக் காண்கிறோம்.

இந்த சண்டேசுவரர் நான்கு முகமும் நான்கு கரங்களும் கொண்டவராகப் போற்றப்படுகிறார். கரங்களில் சூலம், பரசு, ஜபமாலை, தீர்த்தப்பாத்திரம் ஆகியவற்றை ஏந்தியவராகத் தியானிக்கப்படுகிறார்.

சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலயத்தில் பொன்வண்ணத்துடன் திகழும் மரத்தாலான பெரிய பஞ்சாசன மேடை அமைந்துள்ளது.

இதில் மேலே குறித்த ஆசன தேவதைகளோடு பஞ்சாவரண தேவதைகளும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளனர். இதில் சண்டேசுவரர் நின்ற கோலத்தில் நான்கு முகமும் நான்கு கரங்களும் கொண்டவராக அமைக்கப்பட்டுள்ளார். இவ்வகையில் சிவ வழிபாட்டில் சண்டேசுவரர் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளார். ❀

போனகம் கொண்ட பிரான்

தலைவன் உண்டு மகிழ்ந்த உண்கலத்தில் இருக்கும் மிச்சத்துடன் புதிதாக உணவைச் சேர்த்து உண்பது பரிகலசேடம் எனப்படும். பரிகலம் என்றால் உணவுப்பாத்திரம். சேடம் என்றால் எஞ்சி இருப்பது. சீடர்கள் குருமார்களின் பரிகலசேடத்தை உண்டு மகிழ்கின்றனர். சிவபெருமான் தனது பரிகலசேடத்தை சண்டீசருக்கு அளித்தார். போனகம் என்பது நிறைவான உணவைக் குறிப் பதாகும். சிவபெருமான் பரிகல சேடமாகிய போனகத்தை அளித்து அருள்புரிந்தார். சிவாலயங்களில் சிவபெருமானுக்கு நிவேதித்த உணவில் ஒருபாகத்தை எடுத்துச் சென்று சண்டீசுவரருக்கு நிவேதனம் செய்கின்றனர். ❀

Koviloor Digital Library

நித்திய பூஜையில் சண்டேசுவரர் வழிபாடு

ஈசுவரருடைய நிர்மால்யத்தைக் எடுத்துக்கொண்டு சண்டேசருடைய ஆலயஞ் சென்று சண்டேசருடைய சன்னதியில் அந்த நிர்மால்யங்களை ஸ்தாபித்து, சண்டருடைய பிம்பத்தைச் சுத்தோதகத்தால் அபிஷேகஞ் செய்து,

ஓம் ஹாம் த்வநிச்சண்டாஸநாய நம:
ஓம் ஹாம் த்வநிச்சண்ட மூர்த்தயே நம:

என்று ஆஸனம் மூர்த்தி இவற்றை அருச்சித்து தியானிக்க வேண்டும். தியானம் வருமாறு :

இரண்டு கண்களையும், பொன் வர்ணத்தை உடையவராயும், ஜடா மகுடத்தால் அலங்கரிக்கப்பட்டவராயும், வலது கையில் பரசையும், இடது கையை ஊருஹஸ்தமாகவும் வலது காலைத் தொங்க விட்டுக் கொண்டும் இடது காலைப் படுக்க வைத்துக் கொண்டுமிருப்பவராயும், பூணூலால் அலங்கரிக்கப்பட்டவராயும், அதிகமான காந்தியை உடையவராயுமிருக்கும் சண்டேசுவரரைத் தியானிக்கின்றேன் என்பதாம்.

இவ்வாறு தியானித்து,

ஓம் ஹாம் த்வநிச்சண்டாய நம:

என்று ஆவாஹனம் செய்து, ஸ்தாபன முத்திரை முதலிய முத்திரைகளைக் காண்பித்து, தைலம் முதலியவற்றால் அபிஷேகஞ் செய்து, ஆடை. சந்தனம் புஷ்ப மாலை முதலியவற்றால் அலங்கரித்து அருச்சிக்க வேண்டும். **ஓம் ஹாம் த்வநிச்சண்டேசு வராய ஹூம்பட் நம:** என்று அருச்சித்து அங்கங்களைப் பூசிக்க வேண்டும். அது வருமாறு :

ஓம் ஹாம் சண்டேசுவராய ஹிருதயாய நம :
ஓம் ஹீம் சண்டேசுவராய சிரசே ஸ்வாகா,
ஓம் ஹூம் சண்டேசுவராய சிகாயை வஷட்,
ஓம் ஹைம் சண்டேசுவராய கவசாய ஹூம்,
ஓம் ஹௌம் சண்ட நேத்ராய வௌஷட்,
ஓம் ஹம் சண்டாஸ் தராயபட்

என்று அங்கங்களைப் பூசித்து, ஈஸ்வரருடைய நிர்மால்யமான அன்னம் பானகம் முதலியவற்றையும் தாம்பூலம் முதலியவற்றையும் நிவேதனஞ் செய்து, தூபம் தீபம் அருக்யங்களைச் சமர்ப்பித்து, எல்லா உபசாரங்களையுஞ் செய்து பிரார்த்திக்க வேண்டும். பிரார்த்தனை வருமாறு :

ஓ சண்டேசுவர! மஹாபக்தரே! சிவத்யானம் செய்பவரே! பரமசிவனது ஆக்ஞையால் அவருடைய நிர்மால்யமானது தேவரீருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது என்பதாம்.

இவ்வாறு பரமசிவனது ஆணையைத் தெரிவித்து, சண்டேசுவரருடைய மூலமந்திரத்தால் அருக்யஞ் சமர்ப்பித்து, மீண்டும் *சண்டரின் மூல மந்திரத்துடன் ஹ்ருதயாய ஹூம் பட் ஸ்வாஹா* என்னும் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு நமஸ்காரஞ்செய்து பராங் முகார்க்யஞ் சமர்ப்பித்து, விசர்ஜனஞ் செய்து, சண்டேசுவரருடைய அஷ்டக ஸ்தோத்ரம், நமஸ்காரம் முதலியவற்றைச் செய்து சக்திக்குத் தக்கவாறு மூலமந்திர ஜபஞ்செய்து,

பரமசிவனது பாத கமலங்களைச் சிந்திப்பவரான ஓ சண்டேசுவர! உமக்கு நமஸ்காரம். பரமசிவனைச் சேவித்த பலனை எமக்குத் தந்தருளல் வேண்டும் என்று இவ்வாறு மூன்றுமுறை கை களைத் தட்டிக் கொண்டு பிரார்த்திக்கவேண்டும்.

Koviloor Digital Library

பற்பல தெய்வங்களின் சண்டேசுவர சண்டேசுவரியர்

சிவாலயங்களில் சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டராகச் சிவாலயங்களில் சண்டீசர் வீற்றிருந்து அருள்பாலிப்பது போலவே விநாயகர், அம்பிகை, முருகன், திருமால் முதலான தெய்வங்களுக்கும் தனித்தனியே சண்டேசுவர, சண்டேசுவரி யர்கள் இருந்து அருள்பாலிக்கின்றனர் என்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன.

அம்பிகை ஆலயத்தில் வீற்றிருக்கும் சண்டேசுவரியை யாமினி, யமநீ என்று அழைக்கின்றனர். சில நூல்களில் இவளது பெயர் தர்மநீதி என்றும் கூறப்பட்டுள்ளது. இவள் வலது கரத்தில் அங்குசம் அல்லது நீலோத்பல மலரைத் தாங்கி வலதுகையைத் தொடை மீது வைத்துக் கொண்டு அமர்ந்த காலத்தில் யோகம் புரிபவளாகக் காட்சி அளிக்கிறாள். இவளுக்கென தனி உலாத் திருமேனிகள் அமைக்கப்படுவதில்லை. அம்பிகை வலம் வரும் போதும், வழக்க மான தொனி சண்டீசர் எனப்படும் சண் டேசுவரரே உடன் வருகின்றார். அம்பிகை ஆலயத்தில் நடைபெறும் கொடியேற்றம், கொடியிறக்கம், தீர்த்தவாரி முதலியவற் றிலும் அவரே உரிய பூசைகளைப் பெறு கின்றார்.

விநாயகப் பெருமானின் ஆலயங்க ளில் வீற்றிருக்கும் சண்டேசுவர மூர்த்திக்கு கும்பசண்டர் என்பது பெயர். இவர் நாற் கரங்களுடன் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். சில ஆலயங்களில் வலது கையில் அங்குசம் ஏந்தி அமர்ந்த கோலத்தில் வீற்றி ருப்பவராக அமைக்கின்றனர். உலாத் திருமேனிகளாக அமைக்கும் வேளையில் யானை முகம் கொண்டவராகவும் வலது கரத்தில் அங்குசம் தாங்கி, இடது கரத்தை தொடை மீது வைத்தவராகவும் நின்ற கோலத்தில் அமைக்கின்றனர். இத்தகைய கணச் சண்டியையை இங்குள்ள படத்தில்



,சென்னை ஜார்ஜ் டவுனில் உள்ள பிரசன்ன விநாயகர் ஆலயத்தில் உள்ள கும்பசண்டர்

Koviloor Digital Library

காண்கிறோம். இந்தத் திருவுருவம் சென்னை ஜார்ஜ் டவுனில் உள்ள பிரசன்ன விநாயகர் ஆலயத்தில் உள்ளதாகும். (இக்கோயில் ஸ்ரீ கச்சியப்ப முனிவரால் வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து எழுதப்பட்ட விநாயக புராணம் அரங்கேற்றப்பட்ட இடமாகும்)

சூரியன் ஆலயத்தில் வீற்றிருக்கும் சண்டேசுவரருக்கு தேஜஸ் சண்டேசுவரர் என்பது பெயர். இவர் தாமரை மலரை ஏந்தி அமர்ந்திருக்கின்றார். சூரிய பூஜையின் முடிவில் இவரை வழிபடுகின்றனர். சூரியனார் கோயில் சூரியன் ஆலயத்தில் தேஜஸ் சண்டேசுவரர் சந்நிதி அமைந்துள்ளது.


முருகன் ஆலயங்களில் வீற்றிருக்கும் சண்டேசுவரருக்குச் சுமித்ர சண்டர் என்பது பெயர். இவர் சக்தி ஆயுதத்தைத் தாங்கி அமர்ந்த கோலத்தில் உள்ளார். உலாத் திருமேனிகளாக அமைக்கும் போது நின்ற கோலத்தில் வலது தோளில் சக்தி ஆயுதத்தைத் தாங்கி யவராய் அமைக்கின்றனர். முருகன் ஆலயங்களில் கொடியேற்றிச் செய்யப்படும விழாக்களில்இவர் முதன்மை பெறுகின்றார்.

கிராமியதெய்வ ஆலயங்களில் வீற்றிருக்கும் அம்பிகையரான பச்சையம்மன், எட்டியம்மன், செல்லியம்மன் போன்ற தெய்வங்களுக்குரிய ஆலயங்களில் சண்டேசுவரியை அமைக்கும் வழக்கம் இல்லை. ஆனாலும் திருச்சி திருவானைக்கா கோயிலில் உள்ள பச்சையம்மன் ஆலயத்தில் மன்னார் சுவாமி சந்நிதியில் சண்டேசு வரரும் பச்சையம்மன் சந்நிதியை ஒட்டி சண்டேசுவரி சந்நிதியும் அமைக்கப்பட்டுள்ளன. கேரள பகவதி ஆலயங்களில் ஹேம சண்டி என்னும் பெயரில் பெண் துணைத் தெய்வங்க ளும் உள்ளனர்.

சகல ஆலயங்களிலும் மூல மூர்த்திகளாக விளங்கும் சண்டேசுவர சண்டேசுவரிகள், சதா தியானத்தில் இருப்பவர்களாகவும் தனது தலைமைத் தெய்வத்தின் பரிசேடமான நிர்மால்யங்களை ஏற்று மகிழ்பவர்களாகவும் இருக்கின்றனர். ஆலயத்தின் பூசை நிறைவில் இவர்களுக்கு நிர்மால்ய சமர்ப்பணமும் பூசைகளும் நடத்தப்படுகின்றன.

இத்திருக்கோயில்களில் பெருந் திரு விழாக்கள் நடக்கும் போது வீதியுலாவில் இவர்கள் பவனி வருகின்றனர்.

மூலமூர்த்தியாகத் துணைச் சந்நிதி கொள்ளும் அனைத்து சண்டேசுவரர் சண்டேசுவரிகளும் தெற்கு நோக்கியே அமர்ந்திருக்கின்றனர். ❀



முருகன் ஆலயங்களில் வீற்றிருக்கும் சுமித்ர சண்டர்

Koviloor Digital Library

சண்டீசுவரர் தியான சுலோகங்கள்

பக்தர்கள் தமது மனதில் தெய்வ உருவங்களை நிலைப்படுத்திச் சிந்திக்க அத்தெய்வங்களின் உருவ வர்ணனையை அழகிய சுலோகங்களாக அமைத்தனர். இவை தியான சுலோகங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு தெய்வ வடிவத்திற்கும் உரியதாகப் பல வகையான தியான சுலோகங்கள் உள்ளன. தியான சுலோகங்களை அடிப்படையாகக் கொண்டே சிற்பவல்லுனர்களால் வழிபாட்டிற்குரிய திருவுருவங்கள் அமைக்கப்படுகின்றன. தியான சுலோகங்கள் தெய்வங்களின் வண்ணம் வடிவ அமைப்பு அணிந்துள்ள ஆடை ஆபரணங்கள் கரங்களில் ஏந்தியுள்ள ஆயுதங்கள் அந்த ஆயுதங்களின் ஆற்றல் முதலியவை எளிய இனிய நடையில் சொல்லப்பட்டுள்ளன.

தியானங்களைக் கண் மூடி மெதுவாகச் சொல்லிக் கொண்டே வருகையில் தெய்வத்தின் திருவுருவம் மனத்திரையில் தோன்றுகிறது. மனமேடையில் தோன்றும் தியான ரூபத்தை அகக் கண்ணால் கண்டு மகிழும் பக்தன் பரவசமடைகிறான். அதனால் சமய வாழ்வில் தியான சுலோகங்கள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன.

இப்பகுதியில் சண்டீசுவரர் திரு மேனிச் சிறப்பை விளக்கும் தியான சுலோகங்களையும் அதைத் தொடர்ந்து அம்பிகை சந்நிதியில் எழுந்தருளியுள்ள யாமினி, சண்டேசுவரி, முருகன் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் சுமித்ர சண்டர், விநாயகர் ஆலயத்தில் எழுந்தருளியிருக் கும் கும்பசண்டர் ஆகியோர் திருவுருவை விளக்கும் சுலோகங்களையும் அறிந்து மகிழலாம்.



பக்த த்வனி சண்டர்

யுக்ம கர ரத்னநிப ஸவ்யகர டங்கம்
வாம கர ஊருபரி சாந்த முகமேகம்
ச்வேத மய வஸ்திர யுத பஸ்ம தர தேகம்
சம்பு பத த்யான மய பக்த த்வனி சண்டம்

என்பதாகும். இதுவே பெருவாரியாக வழக்கில் உள்ளதாகும்.

இதன் பொருள் - இரண்டு கரங்களை உடைய வரும் ரத்தினம் போல் ஒளிர்பவரும் வலது கரத்தில் மழுவை ஏந்தி இடது கரத்தைத் தொடை மீது வைத்திருப்பவரும், தூய

Koviloor Digital Library

வெண்ணிற ஆடைகளை அணிந்தவரும், திருமேனியில் விபூதியைத் தரித்திருப் பவ ரும், எப்போதும் சிவசம்புவரான சிவபெருமானைத் தியானித்துக் கொண்டிருப்பவராக விளங்குபவர் த்வனி சண்டேசுவரர் என்ப தாகும்.

த்வனி:சண்டர்: என்பதற்கு சண்டர் எனும் பெயரை தமக்கே உரிமையாகவுடையவர் என்பது பொருளாகும்.

காயத்ரீ

டங்க ஹஸ்தாய வித்மஹே
சிவசிந்தாய தீமஹி தந்ந:
சண்ட: ப்ரசோதயாத்!!

தொனிச்சண்டர்:இரு கரங்களும், சிவந்த நிறமும், வலக்கரத்தில் மழுவும், வெண் ணிற ஆடையும், வெண்ணீறணிந்த மேனியும், சிவனடிச் சார்ந்த தியானமுடைய பக்தருமான தவ்னி,சண்டரைத் தியானிக்கிறேன் என்பதாகும்.

அம்பிகை ஆலயங்களில் சண்டேசுவரி



சிவாலயங்களில் பெருமானுக்கு அணுக்கத் தொண்டராக சண்டீசுவரர் அமைக் கப்பட்டிருப் பதைப் போல அன்னை பரா சக்தி ஆலயங்களில் அவளுக்கு அணுக்கத் தொண்டு செய்யும் பணிக்கு சண்டேசுவரி இருக்கிறாள். இவளுக்கு யாமநீ என்பது பெயர். தர்மநீதி என்றும் குறித்துள் ளனர். இவளது திருவுருவை விளக்கும் தியான சுலோகம்:

த்வி புஜாம் திரிநேந்திராஞ்ச் ச்யாமளாங்காம்
சுபப்பிரதாம்
வாமஹஸ்தாந்து ஜானுர்த்வே
ஸ்வயகேது புஷ்பகம்
அத்வாஞ்சலி ஹார்தாம் புஷ்பதாரிணீம்
சண்டேசீம் யமநீஞ்சைவ த்யாயேத்
உக்தக்ரமேனாது

என்பதாகும்.இதன் பொருள் இரண்டு கரங் களும்,மூன்று கண்களும் கொண்ட நீலமேனியும் மங்கலத்தைச் செய்பவளாக விளங்கும் யாமினி என்னும் சண்டேசுவரி. வலது கரத்தில் நீலோற் பல மலரைத் தாங்கி இடது கரத்தை, இடது முழந்தாள் மீது ஊன்றியவாறு அமர்ந்துள்ளாள். நின்ற நிலையில் இருக்கும் போது கூப்பிய கரங்கள் கொண்டவளாய் கரங்களுக்கு நடுவே பூமாலையைத் தாங்கியவாறு காட்சிதருகிறாள்.

Koviloor Digital Library

சண்டேஸ்வரியைக் குறிக்கும்மற்றுமோர் தியான சுலோகம்:

த்விநேத்ராம் த்விபுஜாம் ச்யாமாம்
டங்கம் சைவது தாரிணீம்
கடகம் வா விசேஷேண வ்யாக்யா
முத்ராம் ததைவ ச!
த்விபாதாம் வஸ்திர ஸம்யுக்தாம்
சர்வாபரண பூஷிதாம்
ஜடாமகுட ஸம்யுக்தாம் ஞானரூபாம்
ததைவச!!
(கரஸ்போடந மாத்ரேண சிவபூஜா பலம்பேத்)

இரு கண்களையுடையவளும், இரு தோளையும் பசுமை நிறத்தவளும், மழு வேந்தியவளும், கடகமுத்திரை அல்லது சின்முத்திரை கொண்டவளும், ஈரடியினைக் கொண்டவளும், நல்லுடை அணிந்தவளும், அணிகள் பல பூண்டவளும், சடைமுடி கொண்டவளும், ஞானமே உருவான வளும் ஆன சண்டேஸ்வரியைத் தியானிக்க (மேலும் கையினால் சிட்டிகை/தட்டுதலின் மூலம் கவனத்தை நம்பால் திருப்பி பூசைச் பயனைப் பெறுக)

சண்டேஸ்வரி காயத்ரீ

சக்தி ஸேவாயைச வித்மஹே
பத்மஹஸ்தாயைச தீமஹி!
தந்நோ நீலி ப்ரசோதயாத்! !

அம்பிகை ஆலயங்களில் வீற்றிருக்கும் யாமனி சண்டியை மூலவராக மட்டுமே அமைக்கின்றனர். இவளை உலாத்திரு மேனியாக அமைக்கும் வழக்கம் இல்லை. ஆடிப்பூரம் போன்ற அம்பிகைக்குரிய விழாக் களில் அவளுடன் விநாயகரும் பக்தசண்டீ சருமே உடன் வந்து அருள்பாலிக் கின்ற னர்.யாமினி பற்றிய விரிவான விளக்கங் களைப் புராணங்களில் காணமுடியவில்லை.

சுமித்திர சண்டேசுவரர் தியானம்
(குமார தந்திரம்)

த்ரிஜன்ம ஸுபுரா ஸ்கந்தம் ஸமப்யர்ச்ய யதர்வீதி
உத்தமம் வேதாலேன ஸுமித்ரம காரஸேத்புத் த்விநேக்ரம்
த்விபுஜம் ரந்தம் ஸுவக்ரம சவ்ய ஸுதக்ஷிண சக்தி ஹஸ்தம்
சவாமம் யௌவனம் சகடி பந்தனம் அலகம் ஜ்யோதிஸம்
யுக்தம், தம்ஷ்ட்ரிணம் ருசி ரானனம் கரண்ட மகுடம் வாவி
ஜடாமகுடேம வவா ஹஸ்தேன முருலவத் பத்தௌ ஊயாம் சக்திஸம் யுதம்
ஸர்வாபாரண ஸம்யுச்தம் ஆஸனம் ஸ்ததானகம் துவா
யஞ்ஞோபவீத வம்யுக்தடம் பத்ம பீடோ பரிஸிததம்
இக்தம் ரூபம் ஸுமிரஸ்பா குஹேனவதி தம்புரா.

இதன் பொருள் :-

ஸ்கந்தரான முருகப் பெருமானைத் தமது மூன்று பிறவிகளில் தொடர்ந்து முறைப்படி அர்ச்சித்தவர்கள் மேன்மை மிக்க சண்ட பதவியை அடைகிறார்கள். அங்குள்ளவர்களின் தலைமையாளராக இருப்பவர் சுமித்ர சண்டர்.

இவர் கரிய அழகிய இரண்டு கண்களை உடையவர். இரண்டு தோள்களைக் கொண் டவர். தெற்றுப் பற்கள் தெரியும்படியான சிவந்த இதழ்களைக் கொண்ட வசீகரமாக முகத்

Koviloor Digital Library

தைக் கொண்டவர். இளமை நலம் மிக்கவர். வலது கையில் சக்தி ஆயுதத்தைத் தாங்கி இடது கரத்தை இடுப்பில் வைத்திருப்பவர். ஒளிரும் ஜடா மண்டலத்தை மகுடமாகக் கொண்டவர்.

ஆபரணங்களையும் பூணூலையும் அணிந்தவர். பத்ம பீடத்தில் வீற்றிருப்பவர் என குமார தந்திரம் கூறுகிறது.



ஸுமித்திர சண்டர் (2)

த்விநேத்ரம் த்விபுஜம் ரக்தம்
ஸுப்ர ஸன்னம் ஸுயெளவதம்!
தக்ஷிணேசக்தி ஸம்யுக்தம் கரத்
வயக்ருதாஞ்சலிம்!!

இருகண்கள், இரு தோள்கள், சிவந்தநிறம்,மலர்ந்த முகம், இளமையான உருவம், வலத்தோளில் சார்த்திய சக்தி கூப்பிய கரங்கள் கொண்டவரைத் தியானிக்க

காயத்ரீ

ஸ்கந்த பக்தாய வித்மஹே
சக்தி ஹஸ்தாய தீமஹி!
தந்நஸ் ஸுமித்ர: ப்ரசோதயாத்: !!

நடைமுறையில் முருகன் ஆலயங்களில் அமைக் கப்படும் சுமித்திர சண்டர் இரண்டாவதாகச் சொல் லப்பட்ட தியான சுலோகத்தின்படி இருகரங்களையும் கூப்பியவாறு நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். வலது தோளில் சக்தி ஆயுதத்தைத் தாங்கியுள்ளார்.

சிவாலயங்களில் பக்த சண்டியை இடபவாகனத்தில் அமர்த்தி வலம் வரச் செய்வதைப் போல இவரை சிறிய மயில் வாகனத் தில் அமர்த்தி உலாவரச்செய்கின்றனர்.

இவரது ஆலயம் முருகன் ஆலயங்களில் கருவறைக்கு ஈசான திக்கில் அமைகின்றன. மூலவர் நிலையில் அமர்ந்த கோலத்திலும் உலாத் திருமேனிகளில் நின்ற கோலத்திலும் காட்சி தருகிறார்.

ராஜகோபுரமாடங்களில் சண்டேசுவரர்

திருவண்ணாமலை, சிதம்பரம் முதலிய தலங்களில் அமைந்துள்ள பெரியராஜ கோபுரங்களில் மாடங்களில் மகேசுவர வடிவங்கள் விநாயகர், முருகன், முனிவர்கள், அடியவர்கள் போன்ற சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

இத்தகைய சிற்பங்களில் ஆகமம் போற்றும் சண்டீசர் வடிவமம் ஒன்றாகும். இந்த சண்டேசுவரர் நான்கு முகங்களும் நான்கு கரங்களும் கொண்டவராக இருக்கின்றார். இந்த சிற்பங்கள் பெரியதாகவும் நுண்ணிய கலைவேலைப்பாடு கொண்டதாகவும் இருக்கிறது. சிதம்பரம் ராஜகோபுரத்தின் நான்கு கோபுரங்களிலுமே சதுர்முக சூரியனையும், சதுர்முக சண்டியையும் காண்கிறோம்.

Koviloor Digital Library

விநாயகர் லயத்தில்வீற்றிருக்கும் கும்பசண்டர்

கும்போதர சதுர்பாஹு தண்டந்ருக்!
ரக்தவர்ணே மஹாதீப்தோ
பத்ரபீடோ பரிஸ்தித:

கும்ப சண்டர் அல்லது கும்போதரசண்டர் நாற்கரமுடையவர். மழு, சூலம், மெல்லிய கூரிய கத்தி, தண்டம் ஆகியவற்றைத் தாங்கியவர். சிவந்தநிறமும், பேரொளி மேனியும் கொண்டு பத்ரபீடத்தில் நிற்பவராய்த் தியானிக்க.

கும்பசண்டர் காயத்ரீ

கும்ப சண்டாய வித்மஹே
டங்க ஹஸ்தாய தீமஹி!
தந்நோ சண்ட: ப்ரசோதயாத்!!

தேஜஸ் சண்டர்

சண்டம் ரக்தம் கராளஸ்யம்
அப்ஜா பயகரத்வயம்!
தம்ஷ்ட்ரா கராள தீப்தாஸ்யம்
ஜடிலம் ரக்தவாஸஸம்!!

சண்டரை, சிவந்தமேனி,கோபத்தால் கறுத்த முகம், தாமரை தாங்கும் இரு கரங்கள் கோரைப் பற்களையுடைய கருநாகத்தை அணிந்தவர்.சடைமுடி,செவ்வாடை கொண்டவராய்த் தியானிக்க.

காயத்ரீ

தேஜஸ் சண்டாய வித்மேஹ
சாக்ஷீபூதாய தீமஹி!
தந்நோ சண்ட: ப்ரசோதயாத்!!

ஆத்மார்த்த பூஜையில் சண்டேசுவரர் வழிபாடு

உலகில் வாழும் உயிர்கள் மேன்மை பெறும் பொருட்டு சிவாலயங்களை அமைத்து அதில் சிவபெருமானுக்கு நாட் பூசைகளும் விழாக்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

இதுபோல அன்பர்கள் தாம் உய்யும் பொருட்டு சமயச் சான்றோர் விதித்துள்ள சமய தீக்ஷைகளை ஏற்றுச் சிவபூசை செய்து வருகின்றனர்.

உலக நன்மைக்காகச் செய்யப்படும் சிவாலய வழிபாடுகள் பரார்த்த வழிபாடுகள் என்றும், அன்பர்கள் தம் ஆன்மா உய்யும் பொருட்டச் செய்யப்படும் வழிபாடுகள் ஆன்மார்த்த பூஜை என்றும் அழைக்கப் படும்.

ஆன்மார்ந்த பூஜையில் சிவபூசையின் அங்கமாக முதலில் சூரியபூஜை செய்யப் படகிறது. இதில் சூரியன், அவனைச் சுற்றியுள்ள சிவசூர்ய அஷ்டவியேசுவரர்கள் அவர் களைச் சுற்றி சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது ஆகிய எட்டு கிரகங்களும் பூசை செய்யப் படுகின்றனர்.

சிவசூர்ய பூஜையில் சிவசூரியனின் அணுக்கத் தொண்டரான தேஜஸ் சண்டீசுவரர் எனப்படும் சண்டீசுவரர் பூசிக்கப்படுகிறார். சிவசூர்ய பூஜையை அடுத்து ஆத்மலிங்கம் எனப்படும் உடையவர் பூஜை செய்யப்படுகிறது. இந்த வழிபாட்டில் த்வனி சண்டீசர் எனப்படும் சண்டேசுவரர் பூஜை செய்யப்படுகிறார். இவரை பக்த சண்டீசர் என்றும் அழைக்கின்றனர்.

பூஜையின் நிறைவில் சூரியனின் நிர்மால்யங்களை தேஜஸ் சண்டீசருக்கும் உடையவர் எனப்படும் சிவவழிபாட்டின் நிர்மால்யங்ளை **த்வனி** சண்டீசருக்கும் சமர்ப்பித்து வழிபாடு செய்கின்றனர்.

ஆன்மார்த்த பூசையில் சிவசண்டீசரும், சூரியசண்டீசரும் சிறப்புடன் போற்றப்படுகின்றனர்.

Koviloor Digital Library

நிர்மால்யமும் சண்டேசுவர பூஜையும்

சிவாலயங்களில் காலைப்பூசையின் போது அர்ச்சகர் நித்திய நியமங்களை முடித்துக் கொண்டு சிவபூசையைத் தொடங்குகின்றார். கருவறையிலோ மகா மண்டபத்திலோ பெருமானுக்கு ஈசான திசையில் சூரிய துணியை விரிப்பார். சிவபெருமான் மீது அணியப்பட்டுள்ள மாலைகள், ஆடைகள் ஆகியவற்றைக் களைந்து அந்தத் துணியில் வைப்பார். இதற்குச் சிவ நிர்மால்யம் என்பது பெயர். தமிழில் உண்டும், உடுத்தும், சூடியும் களைந்தவை என்பர். இது சண்டேசுவரருக்கு உரிய பொருட்களாகும். இதை அவருக்கு அளிக்க வேண்டும் அதனால் சிவ பூசைக்கு முன்பாக இவற்றைத் தூய்மையுடன் எடுத்து வைக்க வேண்டும். அதன்பிறகே சிவலிங்கமூர்த்திக்கு அபிஷேகம், அலங்காரம் அதைத் தொடர்ந்து நிவேதனம் தீபாராதனை ஆகியன நடைபெறும்.

அதன்பிறகு துணியில் இட்டு வைக்கப்பட்ட சிவ நிர்மால்யமான பூமாலைகள், ஆடைகள் ஆகியவற்றைப் பக்தியுடன் சண்டேசுவரர் சந்நிதிக்கு எடுத்துச் சென்று அவர்முன் வைத்து அவருக்கு அபிஷேகம் செய்தபின் சிவ பெருமானுக்கு உடுத்துக் களைந்த ஆடையை அணிவித்து, மாலைகளைச் சூட்டி, பெருமானுக்கு நிவேதித்த பிரசாதத்தை நிவேதித்து தீபாராதனை செய்வர். இதற்கு நிர்மால்ய சமர்ப்பணம் என்பது பெயர். இதன்பிறகே அன்பர்களுக்கு விபூதியும் உணவுப் பொருட்களான நிவேதனப் பிரசாதங்களையும் அளிக்க வேண்டும் என்பது மரபாகும்.

பழம்மரபைப் போற்றும் சில ஆலயங்களில் சாயுங்கால மகா தீபாராதனை முடிந்ததும் அன்பர்களுக்கு விபூதி வழங்கும் போது, சிவனுக்கு அர்ச்சித்த மலர்கள் தளிர்கள், இலைகளில் ஓரிரண்டை அளிக்கின்றனர். விபூதியை அணிந்து கொண்ட பின் அன்பர்கள் அந்த சிவநிர்மால்யத்தை எடுத்துக் கொண்டு சிவ பெருமானை வலம் வந்தபின் அந்த நிர்மால்யங்களை சண்டேசர் முன்வைத்து சிவாலய தரிசன பலனை அருளுமாறு வேண்டும் வழக்கம் உள்ளது.

காஞ்சிபுரத்தை அடுத்த பெருநகர் பிரம்மபுரீசுவரர் ஆலயத்தில் இப்போதும் இவ்வழக்கம் கடைப்பிடிக்கப்படுகிறது.

சிவநிர்மால்யம் சண்டீசருக்கே உரியதாகும். அவருடைய பூசைக்குப் பிறகே மற்றவர்களுக்குச் சிவப்பிரசாதத்தை வழங்க வேண்டும் என்பது மரபாகும்.

சிதம்பரத்தில் நாட்பூசையின் நிறைவில், பள்ளியறை பூசை, அர்த்த சாம அழகர், பைரவர் வழிபாட்டுக்குப் பிறகு சண்டீசுவரர் சந்நிதியில் இருந்து அன்றைய பூசைகளைச் செய்த பூசகர் விபூதி வழங்கும் வழக்கம் உள்ளது. இதனை முறைக்காரர் விபூதி என்கின்றனர். சிவபூசையின் பயனை சண்டீசுவரரை வணங்கிப் பெற்றுக் கொள்ளும் வகையில் இந்நிகழ்வு அமைவதாகக் கூறுகின்றனர்.

Koviloor Digital Library

வேள்விக்குட நீராட்டுகளும் சண்டீசுவரர் அபிஷேகமும்

ஆகமநெறிப்படிச் செய்யப்படும் ஆலய வழிபாடுகளில் பூரணகும்பம் வைத்து வேள்விவேட்டுப் பூசைகள் செய்வதும் பூசையின் நிறைவில் கும்பங் களில் நிறைத்து வைத்துப் பூசித்த தண்ணீ ரால் தெய்வத் திருவுருவங்களுக்கு நீராட்டு வதும் நடைபெறுகின்றன.

பொதுவாக தெய்வங்களுக்கு வேள்விச் சாலைகளில் வைத்துப் பூசிக்கப்பட்ட பூரண கும்பங்களைக் கொண்டு அபிஷேகம் செய்து, கோமுகியின் வழியாக வெளியே றும் அந்த அபிஷேக தீர்த்தத்தைப் பாத்திரங் களில் பிடித்து வைத்து பிரசாதமாக அளிக் கின்றனர். சிவவழிபாட்டில் மட்டும் அபி



ஷேகம் செய்யும்போது மட்டும் சில சிறப்பு முறைகள் கடைப் பிடிக்கப்படுகின்றன.

மகாகும்பாபிஷேகம், 1008 கலசா பிஷேகம் 108, 1008 சங்காபிஷேகம் போன்ற பெரிய நிகழ்வுகளிலும் பெருந் திரு விழா போன்ற சிறப்பு நாட்களிலும் நடை பெறும் பூசைகள் தனித்தன்மையுடன் பல விதமான செயல்களைக் கொண்டு செய்யப் படுகின்றன.

குடமுழுக்கு விழாவின்போது வேதி கைகளை (வேள்விக்கான கலசங்கள் அமையும் மேடைகள்) அமைத்து, அதில் அஷ்டவித்யேசுவர பீட சக்திகள் ஆகியோ ருக்கான கலசங்கள் சூழ சிவபெருமானுக் கான கலசம் அமைத்து அதில் பெருமானை யும் வித்யேசுவரர்கள் பீடசக்தியையும் நிலைப்படுத்துகின்றனர். வேதிகையைச் சுற்றி ஒன்று, ஐந்து, ஒன்பது, பதினேழு, 33 என்ற எண்ணிக்கையில் குண்டங்களை அமைத்து வழிபாடு செய்கின்றனர்.

இரண்டு வேளை முதல் 22 வேளை வரை காலையும் மாலையும் வேள்விக் குண்டங்களில் தீ வளர்த்து சிறப்பு வழி பாடுகள் செய்யப்படுகின்றன.

பூசை முடிந்த பின், கலசங்களை ஊர் வலமாக எடுத்துச் சென்று சிவலிங்க மூர்த்திக்கு அபிஷேகம் செய்கின்றனர்.

அப்படிச் செய்யும் போது அபிஷேக நீரை ஒரு கலசத்தில் பிடித்துக் கொண்டு வந்து மீண்டும் வேள்விச் சாலையை அடைந்து வேதிகையில் வைத்துச் சண்ட

Koviloor Digital Library

யாகம் எனப்படும் வேள்வியைச் செய்கின்றனர். அதன் நிறைவில் பூசிக்கப்பட்ட கலசத்தை எடுத்துச் சென்று சண்டேசுவரருக்கு அபி ஷேகம் செய்து அந்த தீர்த்தத்தைச் சேகரித்து அன்பர்களுக்கு பிரசாதமாக அளிக்க வேண்டும். இதுவே முறையான தீர்த்தம் பெற்றுக் கொள்ளும் நிலையாகும்.

இதுபோலவே பெருந்திருவிழாவின் நிறைவில் யாக சாலைகளில் வைத்துப் பூசிக்கப்பட்ட கும்பத்தை மூலவரான லிங்கத்திற்கு அபிஷேகம் செய்வர். அவ்வேளையில் கோமுகியில் வெளியேறும் கலச தீர்த்தத் தைப் பிடித்து எடுத்துச் சென்று மீண்டும் யாகசாலையில் வேதிகையில் வைத்துவிட வேண்டும்.

இரவு கொடியிறங்கியதும், கொடி படத்துடன் சண்டேசுவரர் வலம் வருவார். இவர் பவனியில் வாத்தியங்கள் ஏதும் வாசிக்கப்படுவதில்லை. அதனால் இது மௌன உற்சவம் எனப்படும். இதில் சண்டேசுவரர் பவனி முடிந்ததும், யாக சாலைக்கு எழுந்தருளுவார். அப்போது சண்டயாகம் செய்யப்படும். அதன் பிறகு வேள்விச் சாலையில் வைக்கப்பட்ட கும்பத்தை எடுத்துச் சென்று மூலவரான சண்டேசுவரருக்கு அபிஷேகம் செய்து அந்த அபிஷேக நீரைச் சேகரித்து பிரசாதமாக அளிப்பர். இதுவே திருவிழாவின் மூலம் கிடைக்கும் அத்தனை அனுக்கிரகத்தையும் அன்பர்களுக்கு அளிப்பதாகும்.

108,1008 சங்காபிஷேகம் *108,1008* கலசாபிஷேகம் போன்றபெரும் பூசைகளின் போதும் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்த நீரைச் சேகரித்துப் பழையபடி வேதிகையில் வைத்துச் சண்ட யாகம் செய்து அதன் முடிவில் அந் நீரைச் சண் டேசுவரருக்கு அபிஷேகம் செய்து (அதைச் சேகரித்து வைத்துக் கொண்டு) அலங்கரித்து வழிபட்டபின் மேற்படி அபிஷேக நீரை அன்பர்களுக்கு அளிப்பதே சிவவழிபாட்டின் பூரண பலன் கிடைக்கச் செய்யும் வழிமுறையாகும். ❀

கும்பாபிஷேகத்தின்போது சண்டீசருக்கான வேதிகை யாககுண்டம் ஆகியவை தனியே அமைக்கப்படும். அதில் சண்டீசுவரர் பூசிக்கப்படுவார். அந்த யாகசாலையில் வைத்துப் பூசிக்கப்பட்ட பூரணகும்பத்தை எடுத்துச்சென்று சண்டீசுவரருக்கு அபிஷேகம் செய்வர். இது சண்டீசரை நிலைப்படுத்தச் செய்யும் குட முழுக்கு விழாவாகும்.

அடுத்ததாக குடமுழுக்கு நடைபெறும் போது மூல மூர்த்தியான சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து அந்த நீரை குடத்தில் பிடித்து யாகசாலையில் வைத்து சண்டயாகம் செய்து மீண்டும் அதை எடுத்துச் சென்று சண்டீசருக்கு அபிஷேகம் செய்து அந்த நீரையே பிரசாதமாக அளிக்க வேண்டும் இதனால் ஆலயங்களில் சண்டேசுவரருக்கு இரண்டு முறை அபிஷேகம் செய்யப்படுகிறது. முதலில் செய்யப்படும் நீராட்டு அவரை நிலைப்படுத்துவது. இரண்டாவதாக செய்யப்படும் நீராட்டு அவருக்கு சிவநிர்மால்யத்தைச் சமர்ப்பித்து அவரிடம் சிவபூஜையின் பலனை வேண்டிச் செய்வதாகும். ❀


Chandesar, Somesar koil, Pazhaiyarai

Koviloor Digital Library

இரட்டை சண்டீசுவரர்கள்

சைவசமயத்தின் தலைமைப் பீடங்களாகத் திகழும் தலங்களில் முதன்மை பெற்றுள்ள திருவாரூரிலும், சிதம்பரத்திலும் இரட்டை சண்டீசர் சந்நிதிகள் உள்ளன. திருவாரூரில் அடுத்தடுத்தும்சிதம்பரத்தில் ஒரே சந்நிதியிலுமாக இரண்டு சண்டீசுவரர்கள் எழுந்தருளியுள்ளனர்.

முதலில் சிதம்பரம் நடராஜர் ஆலய சண்டேசுவரர்களைப் பற்றிச் சிந்திக்கலாம்.

சிதம்பரம் நடராசர் ஆலயத்தில் சிற்சபை, கனகசபையைச் சுற்றி அமைந்துள்ள பிராகாரத்தின் கிழக்குப்பகுதியில் பரமானந்த கூபம் என்னும் தீர்த்தக் கிணற்றின் கரையில் சண்டேசுவரர் ஆலயம் அமைந்துள்ளது.

இதனுள் சதுர்முக சண்டி ஒருவரும் பக்தசண்டி ஒருவரும் ஆக இருவர் எழுந்தருளியுள்ளனர்.

இப்படி இரண்டு சண்டீசர்கள் இருப்பதற்குப் பல விதமான காரணங்கள் சொல்லப்படுகின்றன.

முதல் கருத்தின்படி,பொற்கோயிலில் எழுந்தருளும் நடராஜருக்கான சண்டீசராக ஒருவரும் அவரது அபிஷேக மூர்த்தியாக விளங்கும் அழகிய சிற்றம்பலமுடையார் என்னும் ஸ்படிக லிங்க மூர்த்திக்கு ஒருவரும் ஆக இரண்டு சண்டீசர் உள்ளதாகக் கூறுவர்.

இரண்டாவது கருத்தின்படி,ஆகாசத் தலமான இத்தலத்தில், பெருமான் சூரிய மண்டலத்தின் நடுவே ஆனந்த நடனம் புரிகின்றார். சூரியன் தொடர்புடைய தெய்வங்களை நான்கு முகத்துடன் அமைக்கும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. அதையொட்டியே இங்குள்ள ஆனந்த நடராச மூர்த்திக்குரியவரான சண்டீசராக சதுர்முக சண்டீசர் அமைக்கப்பட்டு உள்ளார் என்கின்றனர்.

அவருடன் வழக்கம்போல் பக்தசண்டீசரும் எழுந்தருளி உள்ளார் என்கின்றனர்.

மூன்றாவது கருத்தின்படி இவர் பிரம்மதேவன் என்று சொல்லப்படுகிறார். இத்தலத்தில் பிரம்மதேவனே சண்டீசராக அமர்ந்திருப்பதாகவும்அவருடன் வழக்கம் போல் பக்தசண்டீசரும் எழுந்தருளி உள்ளார் என்கின்றனர்.

நான்கு முகம் கொண்ட பிரம்மதேவருக்கும் நான்கு முகத்துடன் திகழும் இந்த சண்டேசுவரர் வடிவத்திற்கும் உள்ள உருவ ஒற்றுமையால் ஏற்படும் குழப்பம் காரணமாகவே இவரை பிரமதேவன் என வழங்குவதுடன் பிரம்மதேவனே இங்கு சண்டீசராக இருக்கிறார் என்றும் கூறுகின்றனர்

இப்படி அன்பர்கள் பல விதமான கருத்துக்களைச் சொன்னாலும் ஆகம வழிபாட்டில் போற்றப்படும் நான்கு முகம் உடைய சண்டியும்,அவருக்குப் பின்னர் அப்பதவியைப் பெற்ற பக்த சண்டியும் ஒருசேர அமர்ந்து அருள்பாலிக்கின்றனர் என்பதே சரியான கருத்து என்கின்றனர்.

இதில் ஆகமம் கூறும் சண்டீசர் நான்கு முகங்களும் அவற்றிலுள்ள வாய் இதழ்களில் கோரைப்பற்களும் எடுத் துக்கட்டிய சடாமகுடமும் கொண்ட இவர் மேற்கரங்

Koviloor Digital Library

களில் ஜெபமாலை கெண்டியும் முன்கரங்களில் சூலம் கொண்டவராகவும் வீற்றிருக்கின்றார். இந்த சதுர்முக சண்டீசர் (பிரம்ம தேவரைப் போல் நான்கு முகங்களுடன் இருப்பதால்) பிரம்ம சண்டி என்று அழைக்கப்படுகிறார்.

பக்த சண்டீசர் இரண்டு கரங்களுடன் காட்சிதருகிறார்.

இனி திருவாரூரில் அமைந்துள்ள சண்டீசரின் வடிவங்களைச் சிந்திக்கலாம். இங்கு முதற் பிராகாரத்தின் வடக்கில் தெற்கு நோக்கியவாறு அடுத்தடுத்து அமைந்துள்ள சந்நிதிகளில் சண்டீஸ்வரர்கள் எழுந்தருளியுள்ளனர்.

முதலில் இருப்பவர் பக்த சண்டீசர். இவர் இரண்டு கரங்களுடன் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். இவருக்கு ஹேம சண்டி என்பதும் பெயராகும். உலாத்திருமேனியான இவரை பூங்கோயில் நாயகனான தியாகேசப் பெருமானுக்கு உரியவராகக் கூறுகின்றனர்.

ஹேமம் என்றால் தங்கம். தியாகேசப்பெருமான் ஆயிரம் பொன் அளிப்பவர். கண்முன்னே நடனமாடும் ஆடல் வல்லோருக்கு அவர்கள் அடிபெயர்த்துவைத்து ஆடும் அடிகள் ஒவ்வொன்றிற்கும் ஆயிரம் பொன் அளிக்கும் தயாபரர்.

அதுபோலவே கவிதை மழை பொழியும் புலவோர்களின் பாடல்களிலுள்ள அடிகள் ஒவ்வொன் றிற்கும் ஆயிரம் பொன் அளிப்பவர்.

அதையொட்டி அவருக்கு அடிக்காயிரம் பொன் அளிப்பவர் என்னும் பெயரும் ஏற்பட்டது.

அவ்வாறு பொன் பெறுபவர்கள் அதன் பயனை அனுபவித்து இன்பத்தில் திளைக்கும் படியான நல்வரத்தை அருள்பவர்



சண்டேசுவரர். அதையொட்டியே அவருக்கு ஹேமசண்டீசர் என்பதும் பெயராயிற்று.

பொற்கோயிலில் எழுந்தருளும் பொற்கோயிலுக்குரிய சண்டீசராதலின் பொன் சண்டி ஹேமசண்டீசராகத் திகழ்கிறார்.

ஹேமசண்டியை மக்கள் பேச்சுவழக்கில் யமசண்டியாக்கியதுடன் யமதருமனே இங்கு சண்டீசர்பதவியில் இருக்கிறார் என்றும் சொல்லுகின்றனர்.

ஹேம சண்டீசர் சந்நிதிக்கு கீழ்ப்புறம் ஒரு சந்நிதி உள்ளது. அதில் யோகதண்டத்தின் மீது தலையைச் சாய்த்து வைத்துக் கொண்டிருக்கும் நிலையிலான ஒரு ஆண் வடிவைக் காண்கிறோம். இவர் யமதருமன் என்றும் இத்தலத்தில் அவர் சண்டீசர் பொறுப்பை ஏற்றுள்ளார் என்றும் கூறுகின்றனர். அவருக்கு வேலை இல்லாததால் இப்படி தூக்கத்தில் இருப்பதாகவும் கூறுகின்றனர். இது ஒரு யோகியின் சிலை என்பர் சிலர். திருவிடைமருதூரில் உள்ள பிரம்மஹத்தியின் வடிவத்தை அது ஒத்திருப்பதாகவும் கூறுகின்றனர். இந்த வடிவம் யமன் அல்ல என்பதே பலரது கருத்தாகும்.

திருவான்மியூர் மருந்தீசுவரர் ஆலயத்தில் இரண்டு சண்டீசுவரர்கள் உள்ளனர். ஒருவர் பழைய காலத்தைச் சேர்ந்தவர். பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட

Koviloor Digital Library



வடிவம் மிகப் பெரியதாக உள்ளது.

மூல லிங்கமான மருந்தீசுவர சுவாமியின் வடிவத்தைவிட இவரது வடிவம் பெரியதாக இருக்கின்றது என்று கருதப் பட்டதால், சென்ற நூற்றாண்டில் திருப்பணி செய்தவர்கள் அளவால் சிறிய சண்டீசர் வடிவத்தைச் செய்து அதற்கென தனிச் சன்னதியையும் அமைத்துள்ளனர். இவ்வகையில் இரண்டு சண்டீசர்கள் இங்கேயுள்ளனர். பெரிய சண்டீசர் வடிவத்தை அப்பைய தீக்ஷிதர் என்று கூறும் வழக்கம் உள்ளது. அது பல்லவர் கால சண்டீசர் என்பதே சரியானதாகும்.

திருவிடைக்கழியில் ஒன்றன் பின் ஒன்றாக இணைந்த வகையில் சிவாலயமும் பாலசுப்பிரமணியர் சந்நிதியும் உள்ளன. இந்த இரண்டு சந்நிதிகளின் மீதிலும் அழகிய விமானங்கள் உள்ளன. இங்குள்ள சிவபெருமான் பாபவிநாசர் என்றும் முருகன் குராவடி வேலர் என்றும் அழைக்கப்படுகின்றனர். இருவருக்குமான சண்டேசுவரர்களான பக்தசண்டேசரும் சுமித்திர சண்டரும் அடுத்தடுத்து எழுந்தருளியுள்ளனர். இங்கு சிவசண்டியையும், குகசண்டியையும் அடுத்தடுத்துக் கண்டு வணங்குகிறோம்.

திருக்கச்சூர் மலைமீதுள்ள மலைக்கொழுந்தீசர் ஆலயத்திலும் ஆதிசண்டியும், பக்தசண்டியும் அடுத்தடுத்து வீற்றிருக்கின்றனர். ❀



❀ அறுபத்து மூன்று நாயன்மார்கள் மூலவராக இடம் பெற்றிருக்கும் கோயில்களில் அறுபத்துமூவர் வரிசையில்ஒருவராகவும், கோமுகிக்கு அருகிலும், உலாத்திருமேனிகளில் பஞ்சமூர்த்திகளில் ஒருவராகவும் மூன்று நிலைகளில் அவரைக் காண்கிறோம்.

❀ அறுபத்து மூவர் பவனியின் போது இரண்டு சண்டேசுவரர்கள் வீதியில் உலாவருகின்றனர். முதல் சண்டேசுவரர் வழக்கமாக பஞ்சமூர்த்திகளில் ஒருவராக வரும் சண்டேசுவரர். மற்றோருவர் அறுபத்து மூன்று அடிவவர்கள் வரிசையில் இடம் பெற்றுள்ள சண்டேசுவரர். இந்த இரண்டு வடிவங்களும் ஒருவரையே குறிப்பதாகும். அதனால் சமயப்பற்றாளர்கள் இந்த இரண்டு சண்டேசுவரர்களைத் தரிசித்து மகிழ்கின்றனர். .


Koviloor Digital Library

யுகங்கள்தோறும் சண்டேசுவரர்

நாம் இப்போது சிவாலயங்களில் கோமுகத்திற்கு அருகில் அமைந்த சிறு சந்நிதியில் தெற்குநோக்கியவாறு வீற்றிருக்கும் பக்த சண்டீசரையே காண்கிறோம். சில ஆலயங்களில் ஆகமங்கள் போற்றும் நான்முக சண்டீசர் அமைக்கப்பட்டுள்ளார்.

ஆனாலும் அன்பர்கள் எல்லோருக்கும் சண்டீசர் என்றதும் பக்த சண்டியே நினைவுக்கு வந்து விடுகிறார்.

ஆகம நூல்களிலும் காஸ்யபம் முதலான சிற்ப நூல்களிலும் நான்கு யுகங்களுக்கான சண்டீசர்கள் பற்றியும் அவர்களுடைய திருவுருவங்கள் பற்றியும் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. அது பற்றிய செய்திகளைச் சுருக்கமாகக் காணலாம்.



துவாபரயுகத்துச் சண்டீசர்

Koviloor Digital Library

காஸ்யபர் என்னும் சிற்ப சாத்திர நூலில் கூறப்படும் நான்கு யுகங்களுக்கான சண்டீ சுவரர்கள் பற்றிய விவரம்.

கிருதயுகத்துப் ப்ரசண்டர்

கிருதயுகத்தில் சிவனுக்கு அணுக்கக் தொண்டராகச் சண்டீச பதத்தில் வீற்றிருந்த வர்.பெயர் ப்ரசண்டர். வெண்ணிறம் கொண்ட இவர் பதினாறு கரங்களுடன் யானை வாக னத்தில் பவனிவருகிறார். வலது கரங்கள் சூலம், பரசு, வஜ்ரம், கட்கம், கோசம், சுரிகை, தண்டம், அபய முத்திரை ஆகிய எட்டையும்

இடது கரங்களில் கேடயம் பிண்டி, பாலம்,பாசம்,மணி, வியாக்ர முத்திரை, சூசி முத்திரை,நாகம்,வரத முத்திரை ஆகிய எட்டையும் தாங்கியவர்.

கிருதயுகத்துப் ப்ரசண்டர் தியானம்

க்ருதயுகே ப்ரசண்டாக்ய:
ச்வேத வர்ண சமாயுத:!
தோர்ப்பர் ஷோடச பர்யுக்த
வாஹநந்து கஜோபவேத்!!
சூல ச பரகர் வஜ்ர கட்க
கோசஸ்த தைவச!
க்ஷுரிகா ச அபயம்ம தண்ட
தக்ஷிணாஷ்டாயுதம் பவேத்!!
கேடகம் பிண்டி பாலஞ்ச பாசம்
கண்டாம்ததைவ ச!
வரதம் வ்யாக்ரஹஸ்தம் ச
ஸூசீம் நாகஞ் ச வாமகே!!
ஜடா மகுட ஸம்யுக்தம் ருத்ராக்ஷா
பரணாந்விதம்!

கிருதயுகத்தில் இவர் பிரசண்டர் எனும் பெயரை உடையவர். வெண்ணிற மேனி யும், பதினாறு கரங்கள் கொண்டும் யானை மேல் வருபவர். வலக்கரங்களில் முறையே சூலம், பரசு, வச்சிரம், கட்கம்(கத்தி), கோசம் (உடல்), சுரிகை (குறுவாள்), அபய முத்திரை, தண்டம் ஆகியன கொண்டும், இடக்கரங் களில் முறையே, கேடயம், பிண்டி,பாலம், பாசம், மணி, வியாக்ரமுத்திரை, சுசீமுத்தி ரை, நாகம்,வரதமுத்திரை விளங்கவும், சடை முடியோடு கூடிய உருத்திராக்க மாலைகளே அணிகளாகக் கொண்டவராய் விளங்கு கிறார்.

ப்ரசண்டர்காயத்ரீ

ஓம் ப்ரசண்டாக்யாய வித்மஹே
ஸ்வேத வர்ணாய தீமஹி!
தந்ந: சண்ட: ப்ரசோதயாத்!!

திரேதாயுகத்தில் வீற்றிருந்த விக்ராந்த சண்டர்

சிவப்பு நிறத் தில் ஒளிரும் திரு மேனி கொண்ட இவர் குதிரை வாகனத் தில் வருப வர். இவர் தனது எட்டு கரங்களில் வலது கரங்களில் சூலம்,பாலம்,பரசு,கத்தி, ஆகி வற்றையும் இடது கரங்களில் வரம், கேட யம், மணி, வில் ஆகியவற்றையும் ஏந்தி யவர்.

விக்ராந்த சண்டர் தியானம்

த்ரேதாயாம் அஷ்டஹஸ்தஸ்து
அநிரக்த ஸமப்ரபம்!!
விக்ராந்தீததி நாம்நாது
ஸுவிகீர்ண ஜடாந்விதம்!
வாஹநந்து ஹயம் வித்யாத்
கிஞ்சித் ப்ரஹஸிதாநநம்!!
சூலம் பாசம் ச கட்கம் ச பரசும்
தட்சிணோ கரே!
வரதம் கேடகம் பாலம் கண்டாம் வாமே
த்ருடம் த்ருதம்!!

திரேதாயுகத்தில் இவர் விக்ராந்தகண்டர் எனப் பெயர் கொண்டவராய், எண் கரங்களும், ரத்தச் சிவப்பு நிறமும் கொண்டு விளங்கு பவர். விரிந்தசடையராய், குமிண் சிரிப்புடை யராய் குதிரை ஊர்பவராய் அறிக. வலக்கரங் களில் சூலம், பாசம், கத்தி, பரசு ஆகியவற் றையும், இடக்கரங்களில் வரதம், கேடயம்,

Koviloor Digital Library

பாலம், மணி ஆகியன கொண்டும் விளங்கு பவர்.

காயத்ரீ

ஓம் விக்ராந்தாய ச வித்மஹே
அதிரக்தாய தீமஹி
தந்நோ சண்ட: பரசோதயாத்!!

திரேதாயுகத்தில் வீற்றிருந்த விபுசண்டர்சண்டேசர்

நான்குதோள்களுடன் பொன்னிறம் கொண்ட இவர் மழு, சூலம், பாசம் அங்கு சம் தாங்கியவர். இதழோரங்களில் கோரைப் பற்களைக் கொண்டவர்.

துவாபர யுகத்தில் விபுசண்டேசர் தியானம்

த்வாபரேது சதுர் பாஹு
பீதவர்ண சுகாசன!
ஜடாமண்டல ஸம்யுக்தாம் ஸதா
சிவத்யான பராயண!
தம்ஷ்ட்ரா கராலவதந
டங்கம்சூலம் ச தக்ஷிணே!
பாசம் சாப்யங்குசம்ம வாமே
பத்ர பீடோபரி ஸ்தித!

விபுசண்டர்சண்டேசர் காயத்ரீ

ஓம் வம் விபுசண்டாய வித்மஹே
சிவசிந்தா பராய தீமஹி
தந்ந சண்ட ப்ரசோதயாத்!


நாற்கரத்தர், பொன்னிறத்தர், சடை யினை வட்டமாகக் கொண்டவர். எப்பொழுதும் சிவ தியானத்தில் மூழ்கியவர். கோரைப் பற்களுடன் கோபக் குறிகாட்டும் முகமும், மழு, சூலம் வலத் திலும் பாசம், அங்கு சம் இடத்திலும் ஏந்தி பத்ர பீடத் தின் மேல் அமர்ந்தவர்.

கலியுகத்துச் சண்டேசர்

தலைமுடியை ஜடாபந்தன முடிந்தவர். வலது கரத்தில் மழு அல்லது பரசு ஏந்திய இவர் இடது கரத்தைத் தொடைமீது வைத்துள்ளார்.(சிம்ம கர்ண முத்திரை கொண்டதாகவும் இடது கரம் அமைக் கப் படும்.) சாந்தமான முகம் கொண்டவர்.

கலியுகத்தில் சண்டேசர் தியானம்

கலியுகௌ துவிபுஜாம்சாம்சம்
ஜடாமகுட மண்டிதம்!



Koviloor Digital Library

ஜடாமகுட சம்யுக்தம் கேசபந்த மதா பவா!
க்ருஷ்ணாபம் வாத ரக்தாபம்
ஸௌம்ய நேத்ரா நாந்விதம்!
ஆபங்கம் ஸமபங்கம் வா ஸமபாத
ஸ்தான கஸ்துவா!!

கலியுகத்தில் விளங்கும் சண்டேசர் இரு கரங்களும் சடைமுடியினைச் சுருட்டி உயர்த்திக் கட்டிய முடியும் கொண்டவராய்க் கொள்க. கருநிறம் அல்லது சிவந்தநிற மேனி, கருணை பொழியும் கண்கள், சாந்த முகம்



கொண்டவர். ஆபங்கம் அல்லது சம பங்கத் தோற்றம் கொண்டு நின்ற கோலத்தர் எனக் கொள்க.

காயத்ரீ

ஓம் டங்க ஹஸ்தாய வித்மஹே
சிவசிந்தாய தீமஹி!
தந்ந: சண்ட: ப்ரசோதயாத்! !

(குறிப்பு-மழுவில்லாமல்இருந்தால் நின்று. இருகரம் கூப்பி, அதில் மலர் மாலை கொண்டவராக அமைத்தல் ஒருமுறை. சண்டேசபதம் பெறும். சமயத்தில் சிவனின் வலப்புறமாய் அச்சங்காட்டும் முகத்துடன் கொள்க)

உத்ரகாமிகாமம் என்னும் நூலில், கிருதயுகத்தில் எட்டுக் கரங்கள் கொண்ட சண்டியும், திரேதா யுகத்தில் ஆறு கரங்கள் கொண்டுள்ள சண்டியும், துவாபரயுகத்தில் நான்கு கரங்கள் கொண்டவராகவும், கலியுகத்தில் இரண்டு கரங்கள் கொண்ட சண்டேசரும் சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டர்களாக இருக்கின்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீதத்துவநிதி என்னும் நூலில், நான்கு யுகங்களுக்கான சண்டேசுவரர் திருவுருவங்கள் கூறப்பட்டுள்ளன. இதன்படி, கிருதயுகத்து சண்டேசரின் பெயர், பிரசண்டர். வெண்ணிற மேனி கொண்ட இவர், பதினாறு கரங்களுடன் திகழ்கிறார். வலக் கரங்களில் சூலம், பரசு, வஜ்ரம், கட்கம், கோசம் (உடல்) சுரிகை அபய முத்திரை ஆகிய வற்றையும், இடது கரங் களில் ஆச்சர்ய முத்திரை, பாசம், பிண்டி பாலம், கேடயம், சுசி முத்திரை, மணி, நாகம், வரத முத்திரை தாங்கியவர்.

திரேதயுகத்து சண்டேசரின் பெயர் விக்ராந்த சண்டர். எட்டுக் கரங்கள் கொண்டு

Koviloor Digital Library

அவற்றில் சூலம், பாசம், கத்தி, பரசு, பாலம், மணி, கேடயம் வரத தாங்கி குதிரை மீது பவனி வருபவர்.

விபுசண்டர் என்று அழைக்கப்படும் துவாபரயுக சண்டீசர் பொன்னிறமானவர். ஜடாமண்டலமாக முடியைக் கட்டியவர். மழு, சூலம், பாசம், அங்குசம் தாங்கி யவர்.

கலியுகத்தில் சண்ட பதவியில் இருக்கும் சண்டீசரை இந் நூல் வீரசண் டர் என்று குறிக்கின்றது. கரு நிறம்(அ) சிவந்த நிறம் கொண்டவர் என்றும், தோளில் மழு வைத் தாங்கிக் கூப்பிய கரங்களுக்குள் மலர் மாலை கொண் டவர் என்றும் கூறுகிறது. இவருக்கு வாகனமாக இடபம் குறிக்கப் பட்டுள்ளது.

தீப்தாகமம் என்னும் ஆகம நூலில் நான்கு யுகங்களுக்காக சண்டீசர்களைச் சண் டர், அபசண்டர், விக்ராந்தர், வீர சண்டேசு வரர் என்று குறிக்கப் பட்டுள்ளது. இவர் கள் பெருவலி படைத்தவர்களாகவும், சிவனின் அன்பைப் பெற சண்டி சரைப் பூசிக்க வேண்டுமென்றும் கூறப் பட்டுள் ளது.

துவாபரயுக சண்டர்
பிரம்ம சண்டர்

இவர் சதுர்முக சண்டேஸ்வரர் - சதுர் முக சண்டநாதர்- ஆதிசண்டர் என்று அழைக் கப்படுகிறார்

காயத்ரீ

ஓம் ப்ரம் ப்ரம்ஹ சண்டாய வித்மஹே
சதுர்முகாய தீமஹி!
தந்ந: சண்ட: ப்ரசோதயாத்! !

உத்தரகாமிகாகமம் 65-ஆவது படலத் தில், துவாபரயுக சண்டேசுவரர் நான்கு முகம், ஜடாமகுடம், நான்கு கரங்களில் வலப் பக்கம் அக்கமாலை, முத்தலைச் சூலம், இடப்பாக்கம் குண்டிகை, மழு இவற்றுடன் விளங்கி, பத்ரபீடத்தில் அமர்ந்திருப்பார். இவரைப் பிம்ம சண்டர் என்றும் ஆதிசண்டர் என்றும் கூறுவர். தாராசுரம், திருவாவடுதுறை, சிதம்பரம் ஆகிய தலங்களில் இத்திருத்திருவுரு வங் களைக் காணலாம்.

ஆகமங்களும் சிற்பநூல்களும் பல விதமான சண்டீசர்களைக் கூறினாலும் பெரும்பான்மையான ஆலயங்களில் பக்த சண்டீசுவரரே வைத்து வழிபடப்படுகிறார்




துவாபரயுக சண்டர் பிரம்ம சண்டர்

Koviloor Digital Library

சென்னை கோடம்பாக்கம் புலியூர் வாலீஸ்வரத்து சண்டீசர்கள்

இருபத்தியோராம் நூற்றாண்டின் கலைக்கோயிலான சென்னை கோடம்பாக்கம் புலியூர் பாரத்வாஜேஸ்வரர் ஆலயத்தில் அமைந்துள்ள சண்டேசுவரர் சந்நிதியின் விமானத்தில் இந்த நான்கு யுகங்களுக்கான சண்டேசுவரர்களும் நான்கு திசைகளிலும் அமைக்கப்பட்டுள்ளனர். சுதையால் செய்து வண்ணம் தீட்டப்பட்டுள்ள இந்த சண்டேசுவரர் வடிவங்கள் கலையழகுடன் திகழ்கின்றன. இத்தகைய அமைப்பு வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.



இச்சிற்பங்களை வடிவமைத்தவர்: கலா ராக்ஷஸன் சிவஸ்ரீ சதீஷ்(எ)பாலச்சந்திர சிவாச்சாரியார்

Koviloor Digital Library

தேவர்க்குத் திருமுகம் விடுக்கும் திருவாரூர் சண்டேசுவரர்

சிவபெருமானின் அணுக்கத் தொண்டராகவும், சிவாலயங்களின் முதன்மை அதிகாரியாகவும், சிவத்தொண்டர்களின் தலைமை நாயகமாகவும் இருப்பவர் சண்டேசுவர நாயனார். இவர் சிவாலயங்களில் முதன்மை பெற்று, பெருவிழா கொள்ளும் பஞ்சமூர்த்திகளில் ஒருவராகவும் இருக்கிறார்.


மனிதன் தெய்வமாகி, வானுறையின் தெய்வங்களின் வரிசையில் இடம் பெற்று சிறப்பான பூசைகளைப் பெறுவதோடு சிவ பூசையின் பயன் அருளும் அதிகாரியாகவும் உயர்வு பெறலாம் என்பதை சண்டேசுவரர் வரலாறு கூறுகிறது.

சைவசமயத்தின் தலைமைப் பீடமாகவும் அறுபத்து மூன்று நாயன்மார்கள் வரலாற்றோடு தொடர்புடையதாகவும், புராணப் பெருமையும் வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்டதாகவும் இருப்பது திருவாரூர் ஆகும்.

திருவாரூர் தியாகேசர் ஆலயத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும் சிவாலயக் காப்பாளரும் ஆன சண்டேசுவர நாயனார் பெற்றுள்ள சிறப்புக்களை இங்கே காணலாம்.

வழக்கமாக சிவாலயங்களில் கருவறையின் வடகிழக்கில் கருவறையில் இருந்து அபிஷேகநீர் வெளியேறும் கோமுகிக்கு அருகில் அமைந்த சிறிய சந்நிதியில் சண்டேசுவரர் இருப்பார். ஆனால் திருவாரூரில் அப்படி அல்லாமல் பிராகாரத்தின் வடக்கில் தெற்கு நோக்கியவாறு உள்ள பெரிய சந்நிதியில் சண்டீசுவரரைக் காண்கிறோம். இங்கு கல் திருமேனியாக இல்லாமல் அவர் அழகிய உலாத் திருமேனியாகக் காட்சி தருகிறார்.

ஆய்வாளர்களும் அன்பர்களும் இவரை ஹேமசண்டி என்கின்றனர். ஹேமம் என்ற சொல் தங்கம், பொன் ஆகியவற்றைக் குறிக்கிறது. அன்பர்களுக்கு ஆயிரம் பொன் அளிப்பவர் தியாகேசர். திருவாரூர் பெருமான் ஆடல் புரிபவர்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும், புலவர்கள் பாடும் பாடல்களின் ஒவ்வொரு அடிக்கும் அடிக்கு ஆயிரம் பொன் அளிப்பவர். அதனால் அவரை



Koviloor Digital Library

அடிக்கு ஆயிரம் பொன் அளிக்கும் பிரான் என்பர். அவர் அளிக்கும் பொன்னை அன்பர்களுக்கு வழங்கி இன்பம் பெற வைப்பவர் என்பதால் இங்குள்ள சண்டீசர் ஹேமசண்டீசர் என்று அழைக்கப்பட்டு, அதுவே காலப் போக்கில் யமசண்டீசர் ஆகிவிட்டது என்று கூறுகின்றனர்.

மேலும், மனுநீதிச் சோழனைச் சோதிக்கச் சென்ற வேளையில் தியாகேசர் பசு வாகவும் யமதருமன் பசுங்கன்றாகவும் சென்றனர் அல்லவா? அதைத் தொடர்ந்து யமனின் வேலையை இந்த சண்டீசர் செய்துவந்தார் என்றும், அதனால் யமசண்டீசர் என்று பெயர் பெற்றதாகவும் கூறுகின்றனர்.

இவரது சந்நிதியை அடுத்துள்ள சந்நிதியில் ஒரு சிவயோகியின் திருவுருவத்தைக் காண்கிறோம். இந்நாளில் இவரை யமசண்டீசர் என்கின்றனர். யம தருமன் இத் தலத்தில் சண்டீசராகப் பதவி பெற்றான் என்றும் திருவாரூரில் அவனுக்கு வேலை இல்லாததால் தூங்கிக் கொண்டிருப்பதாகவும் கூறுகின்றனர்.இவரை அடுத்து இவர் பூசித்த சண்டேசுவர லிங்கம் உள்ளது.

இத்தலத்தில் சண்டீசரின் மூலவர் வடிவம் விட்ட வாசல் குடவரையில் உள்ளது.

சிவமகாபுராணம் இந்த விட்டவாசலை ஈசானத்துப் பெருவாசல் என்று அழைக்கிறது. தியாகேசப் பெருமான் இதன் மூலமாகவே வீதியுலாவிற்குச் செல்வதும் மீள்வதுமாக இருக்கிறார்.

அதனால் கணங்கள் இதனைக் காத்து நிற்கின்றன. தேவர்கள் தினமும் மாலை வேளையில் இதன் வழியாகவே தியாகேசரை உட்சென்று தரிசித்து மீண்டும் வெளியேறுகின்றனர். அவர்கள் வந்து தம் வருகையைப் பதிவு செய்தும், போகும் போது விடை பெற்றுச் செல்லவும் ஏதுவாக சண்டேசுவரர் இங்கே இருக்கிறார் என்கின்றனர். (நடைமுறையில் இந்தத் திருமேனியை விறன்மிண்ட நாயனார் என்று அன்பர்கள் அழைக்கின்றனர்)

இத்தலத்தில் நடைபெறும் பங்குனித் திருவிழாவை முறைப்படி அறிவிப்பவராகச் சண்டீசர் இருக்கிறார்.

பங்குனித் திருவிழாவிற்கான முன் ஏற்பாடுகள் பெரியதாக இருப்பதால் தைப் பூசத்திலேயே பந்தகால் நடுகின்றனர். பந்தகால் நிகழ்விற்கு திருஞானசம்பந்தர் எழுந்தருளுகின்றார். அவரே பங்குனித் திருவிழாவைத் தொடங்கிவைப்பதாக ஐதீகம். அவர் விழாவைத் தொடங்கி வைத்து விட்டுச் சென்று விடுவதாகவும் அப்பர் சுவாமிகள் எழுந்தருளி விழாவைத் தொடர்வதாகவும் கூறுகின்றனர்.

திருஞானசம்பந்தர் எழுந்தருளி வைத்து விநாயகர் கம்பத்தை சண்டேசர் சந்நிதி அருகிலும், பிராபா ஸ்தம்பத்தை ஆயிரம் கால் மண்டப வாசலிலும், ரதஸ்தம்பத்தைத் தேரடியிலும் நாட்டுகின்றனர்.

மாசி மாதம் உத்திர நட்சத்திரத்தில் விழா தொடங்கும். அன்று காலை அப்பர் சுவாமிகள் வீதிகளில் வலம் வந்து உழவாரப் பணி செய்து வருவதாகக் கூறுகின்றனர். பிற்பகலில் சண்டேசுவரர் அஸ்திரதேவருடன் புறப்பட்டு, திருவாரூக்குக் கிழக்கே 3 கி.மீ. தொலைவில் உள்ள மருதம்பட்டினம் என்னும் ஊருக்குச் சென்று அங்கிருக்கும் ஆலயத்தில் இருந்து புற்றுமண் எடுத்து வருவார். அந்திக் காப்புக்கு முன்னதாகவே மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம் ஆகியவை செய்யப்படுகின்றன.

மாசி மாதம் அந்த நட்சத்திரத்தில் கொடியேற்றம் நடைபெறுகிறது. கோயில்

Koviloor Digital Library

களில் நடைபெறும் விழாக்கள் சண்டீசர் அனுமதியோடு அறிவிப்பாக வெளியிடும் வழக்கம் இருந்தது. ஆரூர் கோயிலில் அம்முறை இன்றளவும் தொடர்வதைக் காண்கிறோம். மற்றகோயில்களில் ஒரு முறை மட்டுமே சண்டீசரின் ஸ்ரீமுகம் எனும் அழைப்பு தெரிவிக்கப்படும். ஆனால் ஆரூரில் மூன்றுமுறை அழைப்பு வெளியிடப்படுவதைக் காண்கிறோம்.

கொடியேற்றம் நடைபெற்ற பிறகு தியாகேசர் சந்நிதியில் உற்சவத்தை நடத்தி வைக் கும் பெரிய குருக்களாருக்குக் காப்பு அணி விக்கப்படுகிறது. வெள்ளியாலான இந்தக் காப்பை திருஞானசம்பந்தர் கங்கணம் என்கின்றனர்). அதனை அடுத்து ஸ்ரீமுகம்வாசிக்கப்படுகிறது.இந்த ஸ்ரீமுகம்:-

ஸ்ரீமுகம்

சுபமஸ்து

யக்ஞுத்ரய நிர்மாண த்ரான நிர்வாண காரணம்
ததிதம் சாசனம் சம்போக பூர்வாரூர் வாசின:
நம்மனுக்கு வன்தொண்டரான ஆலால சுந்தரர்க்கும்
நமக்கும் ..... நாம சம்வஸ்த்சரம் ..... மாதம்
.... தேதி மகத்வஜாரோகணம்
செய்து பங்குனி மாதம் ஐந்தாம் தேதி அடிய முடிய
நெடிய திருவீதியில் திரு ஆழித் திருத்தேரில்
திருஉலா செய்து அருளுகிறபடியால் ஸ்தானம்
மகேஸ்வர பரிச்சின்னங்களைகூட்டிக் கொண்டு
வரவும் தாமும் வரவும். சுபமஸ்து.

என்பதாகும். இது தியாகராஜப் பெருமானே அடியார்களை அழைப்பதற்கு வெளியிடும் திருமுகமாக இது அமைகிறது.

அடுத்ததாக, சண்டேசுவரர் சந்நிதிக்குச் சென்று, அங்கு ஒரு ஸ்ரீமுகம் படிக்கப்படுகிறது. இந்தத் திருமுகம் தியாகராஜப் பெருமானின் ஆணையைப் பெற்ற சண்டேசுவரர் ஆரூர் அன்பர்களுக்கும், சகலதேவாதி தேவர்களுக்கும் விழா அழைப்பிதழை அறிப்பதாக அமைகிறது. இதிலுள்ள வாசகங்கள்

சுபமஸ்து

ஸ்ரீ தியாகராஜா சிவாக்ஞையாலே பரிபாலனம்
ஆதி சண்டிகேஸ்வரர் அரன் அருளால் இப்பூதலத்தில்
தேவாலயங்களிலுள்ள தேவர்கள் வரவும் தாமும் வரவும்
.... நாம சம்வத்சரம் ....மாதம் ... ஆம் தேதி
பெருமான் தியாகராஜருக்கு மகத்வஜாரோகணம்
பண்ணி,பங்குனி மாதம் ஐந்தாம் தேதி அடிய முடிய
நெடிய திருவிதியில், திருஆழித்தேரில் திருஉலாச்
செய்து அருளுகிறபடியால் ஸ்தானவரவும் - தாமும்
வரவும் - சுபமஸ்து. என்பதாகும்.

இதில்மேலேகுறித்த தியாகேசர் திரு முகத்தில் இடம் பெற்றுள்ள **யக்ஞுத்ரய நிர்மாண த்ரான நிர்வாண காரணம்,ததிதம் சாசனம் சம்போக பூர்வாரூர் வாசின:** என்ற வரிகள் இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டிலும் இடம் பெற்றிருப்பதாகக் குடவாயில் திரு.பால சுப்பிரமணியம் குறித்துள்ளார். மேற்படி ஸ்ரீமுகத்தில் தேவைக்கேற்ப வருடம் மாதம் தேதிகள் வாசிக்கப்படுகின்றன.

முன்னிரவில் 7 மணி அளிவில் சண்டேசுவரர் கிழக்கு சந்நிதித் தெருவில் உள்ள இந்திர மண்டபத்திற்கு எழுந்தருள்கின்றார். அவர் முன்னிலையில் யானைமீது ஏறி பறையறைந்து உலக மக்களுக்கு தியாகேசர் விழாவை அறிவிப்பவரான யானை ஏறுவார்க்கு வெண்பட்டுக் குடைபிடித்து திருக் கல்யாணம் நடத்தப்படுகிறது. அதன்பிறகு அவர் விழாவை ஊர் மக்களுக்கு அறிவிப்பார் முன்னாளில் யானைமீது முரசை வைத்து அடித்து விழா அழைப்பிதழைப் படித்துள்ளனர்.

முன்னாளில் அரசன் எந்த ஒரு விஷயத்தையும் தன் மந்திரச் சுற்றத்தை ஆலோசித்து முடிவெடுத்தபின் அதைத் தன் அணுக்கமான அதிகாரிக்கு அறிவிப்பான். அந்த

Koviloor Digital Library

அதிகாரி அதைஉரிய முறையில் கடிதம் எழுதி அனைவருக்கும் அரசனின் கட்டளையாக அறிவிப்பான்.அந்த அமைப்பிலேயே இங்கு திருமுகம் வெளியிடப்படுவது சிறப்பாக உள்ளது.

பிறகு யானையின்மீது அரசனுக்குரிய மங்கலச் சின்னங்களில் ஒன்றான முரசை வைத்து அடித்துப் பேரொலி எழுப்ப அவனிடம் இருந்து வெளியான அழைப்பைப் பறையறையும் அதிகாரி ஊர் மக்களுக்கு அறிவிப் பான். இதுவே அதிகாரப்பூர்வமான அழைப்பாகும்.

மணிமேகலை காப்பியத்தில் விழா அறை காதை என்னும் தலைப்பில் பூம்புகாரில் நடைபெற்ற இந்திர விழாவிற்கான அறிவிப்பை வெளியிட்ட செய்தியை விரிவாகக் காண்கிறோம். "கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி ஏற்றுரி போர்த்து இடியுறு முழக்கும் முரசு" எனவரும் தொடர் மூலம் பட்டத்து யானைமீது ஒப்பற்ற முரசை வைத்து விழாவை அறிவித்த செய்தியை அறியமுடிகிறது.

திருவாரூரில் இந்திரனே யானையேறி முரசறைந்து விழாவை அறிவிப்பவனாக இருக்கிறான்.

முன்னாளில் நடந்த இந்திர விழாவே சைவசமயத்தின் வளர்ச்சியால் திருவாரூர் வசந்த விழாவாக உருமாறி இருப்பதாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

திருவாரூரில் உள்ள சண்டேசுவரர் விழாவிற்கு தேவர்கள் அழைக்கும் வகையில் திருமுகம் விடுப்பதால் அவர் தேவர்க்குத் திருமுகம் விடுக்கும் பிரான் என்று போற்றப்படுகிறார்.

திருவாரூரில் உள்ள பழைய ஓவியங்களில் சண்டீசர் வீதி வலம் வருவதும் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

திருவாரூரில் நடைபெறும் பங்குனி உத்திரப் பெருவிழாவில் மிருத்சங்கிரகணம் தொடங்கி ஸ்ரீமுகம் கொடுப்பது முதல் தினமும் சண்டீசர் வீதிகளில் பவனி வந்து அருள்பாலிக்கின்றார். திருவாரூரில் உள்ள சண்டேசர் உலாத்திருமேனி அழகுமிக்கதாக இருக்கின்றது. ❀

சேய்ஞலூர் பிள்ளையார்:



விநாயகப் பெருமானை மூத்தபிள்ளையார் என்றும் முருகனைஇளைய பிள்ளையார் என் னும் திருஞானசம்பந்தரை ஆளுடைய பிள்ளையார் என்றும் வைரவரை க்ஷேத்திரபாலப்பிள்ளையார் என்றும் வீரபத்திரரை கோபப் பிள்ளையார் என்றும் அழைக்கின்றனர். அவ்வரிசையில் சண்டீசர் சேய்ஞலூர்ப் பிள்ளையார் என்று போற்றப்படுகிறார். ❀



கொன்றையம் தார் கமழ் கொங்கையம்
கற்பகவல்லியைப் பாகங்கொண்ட கபாலிநாதனால்
கொறையம் மாலைசூட்டி
ஆட்கொள்ளப்பெற்ற சண்டீசப் பெருமான் அருளால்
எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க! வளர்க!!



KOVILOOR ANDAVAR
A. No. 27270

Koviloor Digital Library

சென்னை, கோடம்பாக்கம், புலியூர், அருள்மிகு பாரத்வாஜேஸ்வரர் ஆலய சண்டேசுவரர் சந்நிதி விமானத்தில் இடம் பெற்றுள்ள சதுர்யுகங்களுக்கான சண்டீஸ்வரர்கள்



படங்கள் உதவி சிவஸ்ரீ சதீஷ் (எ) பாலச்சந்திர சிவாச்சாரியார்

Koviloor Digital Library

